THE

TAMIL TEXT

FOR THE

MATRICULATION EXAMINATION

OF THE

UNIVERSITY OF MADRAS,

DECEMBER, 1903.

PRICE 12 ANNAS.

Madras:
HIGGINBOTHAM & CO.,
Printers and Publishers to the University,
MOUNT ROAD
1902.

சூசீபத்திரம்.

	பக்கம்.
இராமாயணம்—உத்தரகாண்டம்	1
திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி ...	11
திருவடிதாசர் அருளிச்செய்த கஜேந்திரமோட்சம்	13
குருபாத தாசர் அருளிச்செய்த திருப்புல்வயல் குமரேசசதகம் ...	25
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் பிரார்த்தனைப்பத்து	34
தி. செல்வக்கேசவராய முதலியார் M.A. எழுதிய குசேலன் சரித்திரம்	36
மக்பெத்	61

இராமாயணம்.

ஒட்டக் கூத்தர்.

உத்தரகாண்டம்.

அநுமப்படலம்.

புலைவாளரக்கனிருநாலிரட்டியொருநாலுபெற்றபுயமுந்
தலையானபத்துமுறவால்விசித்தசயவாலிகொற்றமுழுதும்
மலையாசலத்துமறையோனுரைப்பவதெலாமனத்திலுணராச்
சிலையாலரக்கர்திறம்வேரறுத்ததிறலானுரைக்குமிவையே. 1.

மற்வாலிகொற்றமதுவோகிடக்கமருவார்வெருக்கொள்வலியால்
நிறைவான்மிசைப்பொன்வரையீடழித்துநெகிழாதுநிற்குநிலையாற்
குறையாதவிச்சையதனாலளப்பில்குணநீதிகொற்றமொடுகூ
டறிவாலிவற்றிலநுமானையொக்குமவரார்சகத்திலினியே. 2.

அங்காரதாரைகுடர்மாலைசூடியலைவேலைதாவியடையார்
தங்காரணங்கள்பொடியாகநூறிவருசம்புமாலிமுதலோர்
பொங்காரவாரமொடுநேர்பொருந்தவவர்சேனையானைபரிதேர்
சங்காரமாடுமநுமானையொக்குமவரார்சகத்திலினியே. 3.

வளையோடுருத்திரனைமீதெடுத்தவயவாளரக்கன்மகனைத்
தளையோடளைத்துநகர்தீமடுத்துவருசேனையைச்சலதியிற்
றிளையோடமுக்கியொருதாவிலத்திவடதீரமுற்றதிசைமே
லுளையோடுவெற்றியநுமானையொக்குமுரவோர்சகத்திலுளரோ. 4.

அருமாதவத்தின்முனிவாவுரைக்கிலநுமானையொக்குமவரார்
செருவார்சிலைக்கையிளையோனைமிக்கதிறல்வானரப்படையொடு
மருவார்மயக்கவடமேருவுக்குவடபான்மருத்துமலைகொண்
டொருநாழிகைக்குள்வருவாரொருத்தருளரோசகத்திலினியே. 5.

இவனாலருக்கன்மகனோடெமக்குமினிதாயநட்புமியல்பு
மிவனாலளப்பில்பெருநீரடைத்ததிணையாவயத்தநுமனா
மிவனாலரக்கர்பெருமாயையுற்றவிடையூறகற்றியவெலா
மிவனாலரக்கர்குலம்வேரறுத்ததினியானுரைப்பதெவனோ. 6.

பிறியாவறத்தினநுமான்வளர்ச்சிபெருமேருவிற்பெரியனாஞ்
சிறிதாயொடுக்குமெனின்மேனியற்பவணுவானதிற்சிறியனா
முறுகாரணத்தினளவாமுருக்கொளுயர்வீரனாற்றவலிதா
னறியாதிருக்குமதுவேதுமுற்றுமறிவானுரைத்தியெனவே. 7.

மறவோர்குலத்தையறவேரறுத்துமனுநீதிபற்றியரசாள்
திறலோனுரைத்தவமுதூறுசொற்கள்செவிவாய்மடுத்துநுகருங்
குறியோனுரைக்குநெடியோய்குறிக்கொளெனமேதினிக்குளணிசீ
ரறிவோரின்மிக்கவநுமானுதிப்புமதிசேவகச்செயலுமே. 8.

வேறு.

சூரியன்றருவரத்தினன்சுவணமேருவெனும்
பேரினன்செறிபெருவரைத்தோளினன்பேணும்
பாரிலஞ்சனைவயிற்றினிற்பவனனுக்குதித்தோன்
யாரினும்பெருவலியுடையெழின்மணிப்புதல்வன். 9.

பிறந்தபோதிலிப்பிள்ளைதன்பெருவலியறிந்தே
சிறந்ததாயருந்தந்தையுஞ்சிந்தையுண்மகிழ்ந்தார்
மறங்கொணெஞ்சுடைவாளெயிற்றரக்கர்தம்வாணாள்
குறைந்துளாரெனக்குனித்ததுவானவர்கூட்டம். 10.

துனிவிலாமதியன்னையைப்புதல்வனுந்தொழுதிங்
கினியதாமிரையாதெனக்கியம்புதியென்னப்
பனியுலாவியசோலையிற்பருவத்திற்சிவந்த
கனியெலாமுனக்காவதென்றன்னைதான்கழற. 11.

செழுமலர்த்திருவனையதாய்செழுங்கனிநாடிப்
பழுவமுற்றிடப்பசியினாற்பதைபதைத்திரங்கி
யழுதரற்றியபாலகனன்னைமுன்னுரைத்த
பழநமக்கிதுவாமெனப்பருதிமேற்பாய்ந்தான். 12.

பாயநோக்கினவானவர்தானவர்பழிப்பில்
தூயமாதவர்முதலினோர்தோன்றியவியப்பால்
வாயுவேகமும்வயினதேயன்றன்மாக்கதியு
மோய்விலாதிவனிடத்தினிலிருக்கவென்றுரைத்தார். 13.

பின்னுங்கூறுவார்பிறந்தபோதேயிவன்பிதாவே
யன்னவேகத்தனுற்றலாலருக்கன்மேற்பாய்ந்தான்
மன்னுமாருதிவளர்ந்தபின்மருவலரானோ
ரென்னவாகியென்படுவரோவிவன்கையாலென்றார். 14.

ஈதுவானவர்தானவர்முதலினோரியம்ப
வாதராசனீதியம்பினன்வாவுமென்மைந்தன்
மீதுவெய்யவன்வெங்கதிர்வெண்ணிலாவென்னச்
சீதசந்தனச்சீதளமாகுகவென்றான். 15.

ஆய்ந்ததாதையீதியம்பிடவருக்கன்மேலேறப்
பாய்ந்துமண்டிலம்பற்றினன்கவ்வலுமதனுக்
கேய்ந்தவெய்யவனிவன்சிசுவெனமனமிரங்கிக்
காய்ந்திலன்பெருங்கருணையாற்காதலவென்றான். 16.

அற்றைநாளிலவ்வலர்கதிர்மண்டிலமதனைப்
பற்றுவான்சென்றுபற்றலும்பற்றியேநின்ற
கொற்றமாருதிதனைக்கண்டுகுலைந்துபோயிராகு
வெற்றிவிண்ணவர்கோன்றனைக்கண்டிவைவிளம்பும். 17.

மன்னுஞ்சந்திரசூரியமண்டிலம்விழுங்க
முன்னமேயெமைவிதித்தனைமுறைகெடவேறோ
ரன்னியன்புகுந்தலர்கதிர்மண்டிலங்கவ்வி
இன்னமும்விடானிவையென்னநியாயங்களென்றான். 18.

என்றுகூறிடவெரிவிழித்திந்திரன்வெள்ளிக்
குன்றுபோலயிராவதமேற்கொண்டுகுறுகிச்
சென்றிராகுவைத்தினகரற்பற்றெனச்செப்ப
நன்றிதென்றவனுயிறுதனைச்சென்றுநண்ணி. 19.

இரவிமண்டிலம்பற்றுவானெண்ணியவிராகு
வரவுகண்டனன்மாருதிமண்டிலம்விட்டே
யரவின்மேலுறப்பாய்தலுமாங்கவன்கதறி
வெருவியோடினன்விண்ணவர்கோனடிவீழ்ந்தான். 20.

வெருவியோடினவெவ்வராவினைத்தொடர்வேக
வரியின்மேலரியழன்றயிராவதமுந்தப்
பெரியதோர்கனிபெற்றனனெனப்பெரிதுவந்து
கரியின்மேலெழப்பாய்ந்தனன்காற்றினுங்கடியான். 21.

இன்னகாலையினிந்திரனெதிர்வருங்கூற்ற
மன்னமாருதிமேற்கனலாலகாலமெனக்
கொன்னுனைப்பெருங்குலிசம்விட்டெறிதலுங்கொண்ட
தன்னினைப்பினைமறந்துபோய்த்தரணியில்வீழ்ந்தான். 22.

வேறு.

மைந்தனைவீழக்கண்டவாயுவ்வாசவன்மேற்சீறி
இந்தமூவுலகுதன்னையிமைப்பிடைக்கெடுப்பனென்று
சிந்தையினெண்ணியந்தச்சேயினையெடுத்துக்கொண்டாங்
கந்தரத்தியக்கமின்றியடங்கினனிருந்தகாலை. 23.

உறுவலியில்லாமாயவுடம்பினையுள்ளேநின்று
பிறிவிலாதியக்குகின்றபிராணவாயுக்கோவிப்ப
வறுகயிற்றாசல்போலவங்கொடிங்குண்ணின்ருட்டு
பொறியறுபாவைபோன்றுவீழ்ந்தனர்புவனத்துள்ளோர். 24.

மாத்திரைப்போதுமேனிற்குமோவாயுவின்றி
மூத்திரப்புரீடவாயிலடைத்தலான்முடுகுதோற்பைக்
காத்திரம்பெருத்துவீங்கக்கண்செவிமூக்குநாத்தோல்
சூத்திரமற்றுச்சிந்துந்தொகுமணிக்கோவைபோன்ற. 25.

ஆயவைநிகழுங்காலையமரர்தானவர்களாய
தூயமாதவர்கள்சித்தர்விஞ்சையர்துறக்கத்துள்ளோர்
வாயுகோபத்தினாலேமகோதரராகியுள்ளோர்
நாயகனாபிவந்தநான்முகன்றன்னைநண்ணி. 26.

ஆதிநாயகனைகேட்டியமரர்கோன்குலிசத்தாலே
காதலனுயமைந்தன்காலன்வாய்வீழக்கண்டு
வாதராயன்கோவிப்பவயிறுகள்பெருஞ்சாலென்னப்
பூதமதென்னவீங்கிப்புரண்டனர்புவனத்துள்ளோர். 27.

என்றவரியம்பக்கேட்டவிரணியகருப்பனின்று
சென்றுநோய்தீர்ப்பனென்னுஞ்சிந்தையன்றேவர்சூழ
வன்றிறன்மாண்டசேயைமடியிலேவைத்துநோயாற்
கன்றியமனத்தனுயகாற்றினுக்கரசைக்கண்டான். 28.

இந்திரன்முதலாயுள்ளவிமையவர்சூழவந்த
வந்தணன்றன்னைநோக்கியகத்தெழுதுன்பத்தோடு
வந்தடிபணிந்தோன்றன்னைமலர்க்கையாலெடுத்துவாயு
தந்தபாலனைத்தன்கையாற்றடவினன்றயாவின்மிக்கான். 29.

நீடியமலரின்மேலோனெடுங்கையானீவலோடும்
வாடிமண்மடிந்தபைங்கூழ்மழைவிழத்தளிர்க்குமாபோல்
வீடியமைந்தன்சீவன்பெற்றிடத்துயரின்வெந்து
கோடியநெஞ்சுதாதைகுளிர்ந்தனனுணர்வின்மிக்கான். 30.

திண்டிறன்மைந்தன்சீவன்பெற்றிடத்தேர்ந்தவாயு
பண்டுபோலுலகமெங்கும்பாய்ந்ததான்மருத்தைப்பார்த்துப்
புண்டரீகத்தின்மேலோன்புரந்தரனாதியானோ
ரண்டர்களெவருநோக்கியவற்கிதமறையலுற்றார். 31.

வேறு.

சீர்பெற்றொளிர்பூணஞ்சனைதன்சிறுவன்றன்னைமுகநோக்கிக்
கூர்பற்றியவெண்குலிசத்தாற்கூறுபடுபுண்வடுத்தீர்க
ஆர்பெற்றார்நீபெற்றதுநின்னநுவற்றிடலாலநுமனெனும்
பேர்பெற்றுலகமுள்ளளவும்பெறுதிபெயராப்புகழென்றான். 32.

பொல்லாவிருளைக்கடிந்தோட்டுபுவனதீபன்புகல்வானென்
வில்லார்கரத்திற்சதகூற்றிலொருகூறுனக்குமேவிடுக
வெல்லாவிஞ்சைகளுந்தரிக்கவிசைந்தசத்தியுண்டாக
நல்லாய்கேணீதருகின்றேனென்றுநவின்றானலமிக்கான். 33.

இரணபூமியிடைநேர்ந்தாலென்பாசத்தாலார்த்தக்கால்
மரணமில்லையுனக்கென்றுவருணராசன்வரங்கொடுப்பத்
தரணியோரைவிதிவழியேதண்டிப்போனென்றண்டத்தால்
முரணின்மிகுமாருதியாவிமுடியாதொழியவரமளித்தான். 34.

காற்றின்சிறுவன்முகநோக்கிக்கருணையாலென்கதையானீ
கூற்றின்சூழலுறாயென்றுகுபேரன்கூறக்கூற்றுதைத்த
ஏற்றின்பாகனென்கரமூவிலையினாலுமென்னாலும்
ஆற்றன்மிகுமாருதியாவியகலாதொழிகவெனவருள. 35.

தாதாவுரைக்குமிவன்பிரமதண்டாற்றானுஞ்சாவின்றி
மேதாவியுமாயொருநாளும்விளியாநாளுமுறுகவெனத்
தீதாயிரவேரறுக்குமிவன்றேவர்படையாற்செருக்களத்தில்
வாதாமகன்சாவொழிகவெனவானோர்தச்சன்வரங்கொடுத்தான். 36.

வானோர்முதலாய்வந்துநின்றமறையோர்முனிவரருளாள
ரானோரெல்லாமநுமானுக்கழிவிலாதவரமளிப்ப
நானாவகையசராசரமுமுலகும்படைத்தநான்முகத்தோ
னூனாருடலினின்றியங்குமொருவன்றனக்கிங்குரைசெய்தான். 37.

வன்னிசகாயநின்மைந்தன்வையத்தோர்க்கும்வானோர்க்கு
மின்னல்செய்யுமிராவணன்றனிலங்கைநகரினெரியூட்டி
மன்னனிராமன்மனமுவப்பவயவாளரக்கர்குலமறுத்துப்
பின்னையவன்றன்பேரருளாற்பிரமபதமும்பெறுகென்றான். 38.

என்றுமலரோன்முதலாயவிமையோர்கொடுத்தவரச்செருக்கால்
நன்றுதீதென்றிங்குணராநன்மாமுனிவருறைவிடத்துச்
சென்றுதயிர்பானெய்குடித்துச்சீரைச்சுருக்குச்சுருவமெலா
மொன்றுவலியோன்கொண்டெழலுமூழித்தீயினுடன்றவர்கள்.39.

பொன்மைவைத்தவயன்வரத்தாற்புவனமூன்றும்பொடிபடுத்தித்
தன்மைப்பிரமதண்டினாற்சாதிப்பரியோனவன்பொல்லாக்
கன்மத்தினையெம்மிடைச்செய்யுங்காற்றின்றனையன்கருத்தழிவுற்
றுன்மத்தனாய்த்தன்வலிதானுணராதொழிகவெனவுரைத்தார்.40

சாபமுணர்ந்துகருத்தொழிந்துசாந்தனுகியநுமான்வெங்
கோபமொழிந்துமாதவர்க்குக்கூசிக்குறிக்கொண்டொழுகுநாட்
டைபமனையானுலகுக்குத்திறல்வாரணத்தோனரியிதயத்
தாபணிருத்தவிரசதனுந்தனிப்போர்வீரன்றன்மைந்தர். 41.

துன்னார்காலனும்வாலிசுக்கிரீபன்றோன்றியபின்
மின்னார்மருங்குற்றிருவென்னவிளங்குமுருமையவட்காக
வின்னாராகியிருவரும்போரெதிர்ப்பவிளையானிளைத்தோடித்
தன்னாற்செய்யுஞ்செயலற்றுத்தளர்ந்துமதங்கவனஞ்சார்ந்தான் .42

அந்தமுனிவன்சாபத்துக்கஞ்சிவாலியவ்வனத்து
வந்துபுகுதாதொழிதலால்வாளுள்பெறுஞ்சுக்கிரீபனொடுஞ்
சிந்தைகலந்தசகியாகச்சேர்ந்துதன்னையுணராதே
யந்தணாளர்சாபத்தாலநுமானடங்கியங்கிருந்தான். 43.

வேறு.

வேதமொருநாலுடன்விளங்கியசடங்கமுட்விரிந்தகலையு
மோதநிலவீதியிசையேழுபரிபூணருணனூரவிரைதேர்
மீதுசெலும்வெங்கதிரவன்றனொ டயிந்திரவியாகரணமு
மோதியொருநாளினிலுணர்ந்தனனிம்மாருதியுயர்ந்தபுகழோய்.44

தண்ணளியினன்மிகுதயாவுடைமையால்வருதருக்கறுதலா
லெண்ணுகருமங்களிவையாவுமிடையூறறவியற்றுமியல்பால்
நண்ணலரைவிண்ணவர்களாயினுநடுக்குறுமிடுக்குடைமையால்
மண்ணுலகில்விண்ணுலகின்மாருதியையொக்குமவர்யாருமிலையே. 45.

அறந்தலையெடுத்தபுவிவானவர்களானவர்களாடினர்கழ
மறந்தலையிறக்கியதுவாலிமுதலானவர்கள்வாமநயனஞ்
சிறந்ததிரடோள்புருவமார்பிடைதுடித்தனசிறந்தபுகழா
னிறைந்தகுணமாருதிநினைத்திருவடித்தொழுதுநின்றபொழுதே. 46.

தனக்குவமையற்றவனைவெற்றிமிகுமாருதிதனைத்தடையிலாச்
சினத்தொடுமனத்திறலரக்கர்கள்செருப்புரிகளத்தமலநீ
நினைத்ததுமுடித்தொருகணத்தினினினைத்தொழுதுநிற்பவனைநா
னுனக்கினியுரைப்பதெதிலுத்தமவுனைப்பிரிவில்வித்தகனையே. 47.

வாடைதருசேய்பிறவியுஞ்செயல்களும்பெருவரங்களுமிரிந்
தோடுவினைமாதவர்சபிப்பவிடைதன்னையுணராதவகையு
நீடுதவமாமுனியுரைத்திடவியந்துநிருதேசர்மடியக்
கோடுவிலிராகவன்மகிழ்ந்தவனுமாருதிகுணம்புகழ்தலும். 48.

தேடுதனமாகுவரெனத்தெளியமாமுனிவர்சொற்களவைகேட்
டோடுமதுகண்டுசினமாறரசனுக்கிவையுரைப்பவுணர்வா
னீடுவரவெங்கணியமங்களுளவாகினுநினைப்பிரிதலிற்
கூடுகிலதெங்கண்மனமென்றலுமகண்டபதிகூறுமிவையே. 49.

உங்கணியமங்களிவைகுன்றுதலிலாதொழிகவுங்கள்பரமெங்களரசு
மிங்கிவைதிருந்திடுமிருந்தவமருந்தவவெனப்புகறலு
மங்கிவனையாரருளொடாசிகண்மொழிந்தினிதிருத்தியெனவாழ்
துங்கமறைமாமுனிவராச்சிரமமுன்னிநெறிதுன்னுபொழுதின். 50.

முடிச்சனகர்கோனுலகைமூடுபடையோடுவகையோடணுகிடத்
தடுப்பரியபேருவகையோடுமகிழ்தாசரதியைத்தழுவிமுன்
படைத்ததனமாபரணமாடைதிகழ்பாவையர்களாதிபலவுங்
கொடுத்தபினிராவணகுலத்தினையறுத்தகதைகூறியிடலும். 51.

ஆனைபரியாபரணமாடைதனமாதியுபகாரமொடுமா
சேனைமுடிமன்னவர்கள்சென்றடிபணிந்தயலிருந்தபொழுதின்
மானகுலபூரணனிராகவன்மகிழ்ந்துமுடிமன்னவர்களுக்
கானவுபசாரமொழிகூறியவரோடளவளாவியபினே. 52.

வேறு.

வெங்கதிரோன்மைந்தனையவ்விளங்குபுகழ்க்காகுத்தன்விரும்பி
[நோக்கி
யங்கதனின்னடைக்கலமென்றடல்வாலியந்தியத்திலறைந்தவார்த்
[தை
தங்கியவென்சித்தத்தைத்தான்விட்டுப்போகாதுதடந்தோள்வீர
விங்கிவனைக்குறிக்கொளெனவினிதுரைத்துப்பின்னுமிவையியம்பு
[ம்வீரன். 53.

தன்னுடையவலியறியாத்தடவரைத்தோண்மாருதியைக்குறிக் [கொள்வானோர்
மன்னுடையவமர்பொன்றவாளரக்கன்றன்னோடுமலைந்தநாளி
லென்னுடையகாரணமாயின்னுயிரைவிட்டவீங்கிவர்களெல்லா
முன்னுடையகாவலெனவுரைத்தவனைமெய்யிறுகத்தழுவிக்கொண் [டான். 54.

இரக்கமிலாவன்னெஞ்சத்திராவணன்றான்முன்பிறந்தானென்று [பாரா
தரக்கர்குலப்பிறப்பறுத்துத்தனக்கடிமைப்பட்டானையண்ணனோக் [கித்
தருக்கறுநின்முன்னோனுந்தனதனோடும்பகைகொள்ளேல்தருமசீல
திரைக்கடல்சூழிலங்கைநகரிருந்தரசுசெய்தியெனச்செப்புங்காலை. 55.

முனைப்புரிந்தவாளரக்கன்முடித்தலைகளறுத்துருட்டிமுனிவர்வா [ழ்வு
மனைத்துலகுங்காத்தளிக்குமகிலாண்டநாயகநின்னடியேன்றோயந்
தனைப்பிரிந்தமீனெனவுந்தாயிழந்தகன்றெனவுந்தரிப்பொன்றின்றி
உனைப்பிரிந்துவாழ்கிலேனுயிர்பிரிந்தவுடலென்னவுரவோயென்றா [ன். 56.

ஆதலானின்னுடையவடிப்பிரியாதிடவேண்டுமடியனேனென்
றோதுமாருதிக்குரைக்குமுத்தமனீயித்தலையிலிருக்கில்வெய்ய
சோதியான்மகனாயசுக்கிரீபன்றுணையிழக்குமதனாற்றாயோய்
போதுநீயவன்றனோடுமென்றவனையுயிர்பொருந்தப்புல்லிக்கொண் [டான். 57.

இவ்வண்ணமிதமுரைத்துவிடைகொடுப்பவிரவிசேய்முதலோரந்த
மைவண்ணனடிவணங்கிவார்ந்தகண்ணீராறாகிவாடுநெஞ்ச
மெவ்வண்ணமெம்பெருமானுரைத்ததெமக்கிதமல்லாலகிதமா [மோ
வவ்வண்ணஞ்செய்துமெனவணிபொழில்சூழ்கிட்கிந்தையடைந்தா [ரன்றே. 58.

வீடணன்வீடணைவோர்க்குத்தாள்திறக்குந்தாளானைவெய்யோனை [வக்
காடணைந்தகருங்களிற்றைக்கழலிணைத்தாமரைவணங்கிக்கனக [மேருக்
கோடணைந்ததோளாரக்கொண்டணிறத்தவனவனைப்புல்லிச்செம் [பொ
னாடணைந்தசுரர்போற்றநல்லரசுசெய்தியெனவிடுத்தானாதன். 59.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரியதிருமொழி.

முதற்பத்து, மூன்றாந்திருமொழி.

முற்றமூத்துக்கோல்துணையாமுன்னடிநோக்கிவளைந்து
இற்றகால்போல்தள்ளிமெள்ளவிருந்தங்கிளையாமுன்
பெற்றதாய்போல்வந்தபேய்ச்சிபெருமுலையூடுயிரை
வற்றவாங்கியுண்டவாயான்வதரிவணங்குதுமே. 1.

முதுகுபற்றிக்கைத்தலத்தால்முன்னொருகோலூன்றி
விதிர்விதிர்த்துக்கண்சுழன்றுமேற்கிளைகொண்டிருமி
இதுவென்னப்பர்மூத்தவாறென்றிளையவரேசாமுன்
மதுவுண்வண்டுபண்கள்பாடும்வதரிவணங்குதுமே. 2.

உறிகள்போல்மெய்ந்நரம்பெழுந்துஊன்தளர்ந்துள்ளமெள்கி
நெறியைநோக்கிக்கண்சுழன்றுநின்றுநடுங்காமுன்
அறிதியாகில்நெஞ்சமன்பாயாயிரநாமஞ்சொல்லி
வெறிகொள்வண்டுபண்கள்பாடும்வதரிவணங்குதுமே. 3.

பீளைசோரக்கண்ணிடுங்கிப்பித்தெழமூத்திருமி
தாள்கள்நோவத்தம்மில்முட்டித்தள்ளிநடவாமுன்
காளையாகிக்கன்றுமேய்த்துக்குன்றெடுத்தன்றுநின்றான்
வாளைபாயுந்தண்டடஞ்சூழ்வதரிவணங்குதுமே. 4.

எய்த்தசொல்லோடீளையேங்கியிருமியிளைத்துடலம்
பித்தர்போலச்சித்தம்வேறாய்ப்பேசியயராமுன்
அத்தனெந்தையாதிமூர்த்தியாழ்கடலைக்கடைந்த
மைத்தசோதியெம்பெருமான்வதரிவணங்குதுமே. 5.

ஈசிபோமினீங்கிரேன்மினிருமியிளைத்தீர்உள்ளம்
கூசியிட்டீரென்றுபேசுங்குவளையங்கண்ணியர்பால்
நாசமானபாசம்விட்டுநன்னெறிநோக்கலுறில்
வாசமல்குதண்டுழாயான்வதரிவணங்குதுமே. 6.

புலங்கள்நையமெய்யில்மூத்துப்போந்திருந்துள்ளமெள்கி
கலங்கஐக்கள்போ தவுந்திக்கண்டபிதற்றுமுன்
அலங்கலாயதண்டுழாய்கொண்டாயிரநாமஞ்சொல்லி
வலங்கொள்தொண்டர்பாடியாடும்வதரிவணங்குதுமே.

வண்டுதண்டேனுண்டுவாழும்வதரிநெடுமாலைக்
கண்டல்வேலிமங்கைவேந்தன்கலியனொலிமாலை
கொண்டுதொண்டர்பாடியாடக்கூடிடில்நீள்விசும்பில்
அண்டமல்லால்மற்றவர்க்கோராட்சியறியோமே. 8.

திருவடிதாசர் அருளிச்செய்த

கஜேந்திரமோட்சம்.

காப்பு.

பார்புகழ்கஜேந்திரன்றன்பரகதிக்கதையையன்பால்
ஏர்தமிழ்க்கவியாற்சொல்லவென்னுளத்திருந்துகாப்பாய்
வார்திரைகுதித்துவாளைவயற்றலைநாற்றிற்பாயுஞ்
சீர்மிகுகுருகூர்மேவிச்சிந்துரத்தமர்ந்ததேவே. 1.

பூதன்பேய்பொய்கைமாறன்புகழ்மண்டங்குடிமன்மங்கை
நாதன்றென்புதுவைவந்தநன்முனிகோதைதொண்டர்
பாததூண்மழிசைமன்னன்பாணன்கோளூர்மன்னாள்கள்
போதகப்பிறப்பைநீக்கத்துணையெனக்கொள்ளுவேமால். 2.

நூல்.

செகதலத்தரசனாகச்செறிபரிச்சித்துராசன்
சுகர்பதம்போற்றிசெய்துதும்பியைப்பொருதுநின்ற
மகபலமுதலைதன்னைவதைத்துவாரணத்தையன்று
ககபதியூர்திகாத்தகாரணஞ்சொல்லுமென்றான். 1.

சொல்லிலேயரியைச்சொல்லுஞ்சொல்லதுசொல்லதாகும்
அல்லெனும்வினையுநீங்குமறிவுமேலறிவதாகும்
வல்லதாம்பேரின்பத்தைமருவியுண்டிருக்கலாகும்
நல்லதுகேட்கலுற்றாய்நாதனேகேளுமென்றே. 2.

மாயவனருளினாலேவகுத்திடுமுலகிற்கியாதி
வியாதமாமுனிமுன்னாளில்விளம்பியகதையைப்பாண்டு
சேயெனுந்தருமனுக்குச்செப்புநாரதர்சொற்கேட்டு
நேயமாயானுஞ்சொல்வேனேறியுடனிருந்துகேண்மோ. 3.

பூரணமாகநித்தம்பொழிமதுவனத்திலுள்ள
வாரணக்குழவிவிஞ்சிமதத்துமற்போர்செய்காலை
தாரணிநடுங்குஞ்சிங்கஞ்சார்த்தூலஞ்சர்ப்பமிந்தக்
காரணமேதோவென்றுகலங்கியேவெருவியோடும். 4.

பாரியசிங்கம்யாளிபயந்துதம்மலையிலேறும்
கீரிகளுடும்புபூனைகிண்டித்தம்வளையிற்செல்லும்
வீரியபுலிபல்லூகம்வெருண்டுதம்முழையிலேகும்
நீரினின்மகிடமூழ்கிநீந்தியேதிரியுமன்றே. 5.

கன்னலைமுறித்துமெல்லுங்கதலியின்கனியைத்தின்னும்
செந்நெலைப்புசிக்குந்துள்ளுஞ்செறிவிளாங்கனியைக்கொள்ளும்
அந்நிலையானைக்கெல்லாமரசனாயிருக்கும்யானை
தன்னினம்பிரிந்துகோடிகரிணியோடிருந்ததன்றே. 6.

அல்லலோர்நாளிலேயுமறிந்திடாவத்தந்திக்குத்
தொல்லைநாட்செய்ததீமைதொடர்ந்தநாளிந்நாளாகி
எல்லையாம்வனத்தைவிட்டுவெண்ணிலாக்கரிணியோடு
மெல்லுநல்லுணவுதேடிமேய்ந்ததானெடியதூரம். 7.

பங்கயப்பொய்கைதன்னைப்பார்த்துடன்பரிவாய்க்கோடி
அங்கயக்கரிணியோடவ்வாரியினிழிந்துதங்கள்
அங்கமுங்குளிரத்தோய்ந்தாங்கருந்தியேதாகந்தீர்ந்து
பொங்கமாய்த்தும்பிராஜன்புதுமலர்கொய்யுங்காலை. 8.

முன்பொருசாபத்தாற்கந்தருவனுமுதலையாகித்
தன்பெரும்பலத்தினாலேசலத்திடையிருந்துதந்தி
பின்வருங்காலைநாடிப்பிடித்திடவுதைக்கநொந்து
வன்பெருங்கரவுமீண்டும்வந்துமுன்றாளைக்கிட்டி. 9.

பற்றியேயிழுக்குமந்தப்பாரியமுதலையின்வல்
நெற்றியைப்பிளப்பனென்றுநீண்டதன்றுதிக்கையாலே
மொத்திடக்கரவுநீரின்மூழ்கியேமேல்வந்தெய்தி
வெற்றிதோல்வியுமிலாமல்வெகுண்டுபோர்செய்யுங்காலை. 10.

கூடியேவந்துநின்றகரிணிகள்கோடிதாமும்
வாடியேவெருவிச்சாலமயங்கியேகரையிலேறி
நாடியேநோக்கியின்றுநாதனுக்கிந்தப்பாடு
தேடியேவந்தானம்மாற்செய்வதென்னென்றுகூறி. 11.

ஆளனைப்பிரிந்துசெல்லவத்தியின்குழாங்கடங்கள்
தாளெழாதாகநின்றுதயங்கியேயலறுமந்த
வேளையிற்பற்றிநின்றகரவினைவிசியின்னே
மீளுவனென்றுதந்திமிகவலிந்தீர்க்குங்காலை. 12.

கரையின்வாயீர்க்குந்தந்திகரவுநீர்நடுவினீர்க்கும்
வரையுடன்வரையெதிர்ந்துமற்பொருவதுபோல்வாயில்
நுரைபெறவொன்றுக்கொன்றுநோக்கியேதாக்கியங்கம்
உரைபடத்தசைகள்சிந்தவுதிரமும்பெருகவன்றே. 13.

நாற்பெருந்திசையுமண்ணுநடுங்கிடநாகராசன்
ஆர்ப்பரித்துறுதிகொண்டங்கப்பினைக்கிழியமோதிக்
கார்ப்பெருங்குன்றுபோலக்கடித்திடுங்கரவைக்கண்டு
சூற்பெரும்பிண்டம்வீழப்புடைத்ததுதிக்கையாலே. 14.

அடியதுபட்டுமூர்ச்சையாகியேதெளிவுகொண்டு
கொடியதெனுங்கரவுமீறிக்கோபமாய்த்தந்தியின்வால்
அடியெனுமூலந்தன்னிலழுந்தவேநகத்தாற்கீறி
நெடியதெனுமூச்செறிந்துநீரெலாமுலவுமன்றே. 15.

இப்படிக்கொன்றேடொன்றிங்கிரவிதுபகலெண்ணாமல்
அப்பிலாயிரமாண்டாட்சியாப்புக்கொண்டிருந்ததென்றால்
தப்பிலாமுனிவன்சொல்லத்தரணிபன்கரங்கள்கூப்பி
எப்படியிருந்ததாம்பலெனவவன்சொல்லலுற்றான். 16.

வேறு.

தந்தியுந்நெடுநாட்கராவுடன்றாக்கியேசமர்செய்துளம்
நொந்துவாடியேநாலுதிக்கையுநோக்கியேமனமேக்கமாய்
முந்துதானுறைவெற்பிடத்தையுமுறைமைசெய்திடுமுறைமையும்
எந்தநாளிலேகாணுவேனினியென்றுபின்னுமியம்புமால் 17.

தாதுலாவும்வண்ணுவிசேர்வனந்தன்னிலேதமர்சூழவே
தீதிலாமலநேகநாள்வரைசெல்வமாகவிருந்தநாம்
ஏதுகாரணமோதெரிந்திலமிங்குவந்துதிகைப்பதிப்
போதுநாமினிச்செய்வதேதெனவெண்ணிநின்றுபுலம்புமால். 18.

சுரும்புதேனையருந்தியேசுரம்பாடியாடிடுஞ்சோலையில்
கரும்புசெந்நெல்கதித்துறுங்கதலிப்பலாநலகாய்கனி
அரும்புபூத்தளிர்முதலயாவுமருந்தியங்குறையாமனும்
கருங்கராவிடவாயகப்படவந்தகாரணமேதெனும். 19.

மதத்துவீரியகுஞ்சரக்குழுதன்னொடுந்தவனத்திடை
எதிர்த்தகேசரிபன்றிநாயெருமைக்கடாபுலியாவையும் [யெவ்
அதிர்த்துமுற்றவளைத்துமொய்த்துநடக்குமென்னுடையாண்மை
விதத்திலும்மிதைவெல்லலின்றரிதென்றுநின்றுவிளம்புமால். 20.

கன்றிக்கண்ணீருதிர்த்திடும்பலகாரியங்கணினைத்திடுங்
குன்றுபோலவிருந்தமேனியுங்குன்றிடும்மிகவுங்குறைந்
தின்றுநாமினிச்செய்வதென்னெனவேங்கியேமனமெலிவினால்
நின்றிடுந்தலைநாளிலேசெய்தநிந்தையென்றுநினைந்திடும். 21.

நூறுபத்துவருடங்கள்போர்செய்துநொந்துவாடியகுஞ்சரம்
பூருவத்துளஞானம்வந்துபொருந்தியேவினைபோக்கிட
வேறுதிக்கிலையென்றறிந்ததுவேண்டியேசருவேசனைக்
கூறியேநெறியைக்கொண்டேகுணத்தினாலேதுதித்திடும். 22.

மனமுமாகியுமொழியுமாகியுமருவியேவனரூபமாய்
இனனுமாகியுஞ்சசியுமாகியுமெறிதிரைக்கடன்மேருவாய்த்
தனயனாகியுந்தந்தையாகியுந்தாயுமாகியுந்தமருமாய்
அனையுமாகியபொருளெனும்பரமானவாவபயம்மெனும். 23.

வேறு.

தேனில்வீழீப்போல்வலைப்படுகயல்போற்சிறுவர்கைப்பறவைசிக்
[குதல்போல்
கோனிலாப்படைபோன்மழையிலாப்பயிர்போற்கொம்பிலாப்படர்
[கொடியதுபோல்

கானகத்திருளின்முடவனூர்வதுபோற்கலங்கியேகராவிடைமெலி
[ந்தேன்
ஆனநின்னடிமைக்கடிமையாய்நீவந்தபயமீந்தென்னையாளெனு
[மால். 24.

சகலமுமுனதுநேமனத்துதித்ததன்மையினுளவறியாமல்
பகலிரவிளமைபிறப்புமூப்பிறப்புப்பண்டுபின்னிறைகுறைநாணஞ்
சுகந்துயர்நன்மைதீமைமற்றிவற்றின்சூழற்படுஞ்சிந்தையின்மயக்
[கத்
தகவினைநீக்கியஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளெனு
[மால். 25.

தென்றிசைவடக்குக்கிழ்த்திசைமேற்குத்தெரிந்திடவறிகிலேனுழ்
[ந்த
புன்சமுசாரக்கடலிடைவிழ்ந்துபொய்யைமெய்யென்றிசைந்துழ
[லும்
வன்றுயர்தீர்த்துனருளெனுநாவாய்வழங்கிலக்கரையிலேறிடுவே
[ன்
அன்பருக்கெளியாயஞ்சலென்றினியுன்னபயமீந்தென்னையாளெ
[னுமால். 26.

வேறு.

கள்ளமாகியேயென்னைவந்துகடிந்துபற்றியகரவினைத்
தள்ளியேவிடவேறுதிக்கிலைதருமனேயினித்தயைசெயாய்
எள்ளிலேயுறையெண்ணெய்போலவிரேழுலோகமிசைந்துதான்
உள்ளுமாகிப்புறம்புமாகியவொருவனேயபயம்மெனுர். 27.

வேறு.

யாருடைக்கண்களாகியலரியிந்துவுமிருக்கும்
யாருடைமகிமைதன்னையருமறைநூல்களோதும்
யாருடைப்பாதந்தன்னையனைவருந்தொழுவரண்டர்
யாருடைவயிற்றொடுங்குமவன்றனக்கபயமென்னுர் 28.

உண்டென்பரடியார்பங்கிலுத்தமரிடத்திலேயும்
உண்டென்பரொருமையானயோகியருளத்திலேயும்
உண்டென்பர்சாதுபக்கமுறுதிமெய்யுணாயிடத்தும்
உண்டென்பரந்தத்தெய்வமுள்ளதோவிலையோவென்னும். 29.

அந்தரந்தன்னையானையண்ணாந்துபார்த்துச்சொல்லும்
எந்தனைக்காக்கத்திக்காரில்லையோவிங்கேயாரும்
எந்தநேரத்திலீசன்வந்தென்னைக்காப்பானென்று
சிந்தனைபண்ணுமெட்டுத்திசையினைத்திரும்பிப்பார்க்கும். 30.

இப்படிச்சுகருஞ்சொல்லவிறைஞ்சிமன்னவனகைத்து
மைப்படிகண்டன்வேதன்வாசவன்மற்றுளோரும்
எப்படிப்பார்க்கலுற்றாரிடர்தொலைத்திபத்தைக்காக்கச்
செப்பமில்லாமனின்றசெய்தியையுரைமினென்றான். 31.

துங்கமாமுனிவன்கேட்டுச்சுடர்முடியரசைநோக்கிச்
சங்கையிலாமலத்திதற்பரன்றனையேநாட
எங்களைநினைந்ததில்லையென்றயன்சிவன்மற்றோரும்
அங்ஙனேபார்த்திருந்தாரென்றுபின்னறையலுற்றான். 32.

வேறு.

அகிலகாரணனாயனாதரட்சகனாயடியர்கட்கெளியனாய்நிறைந்த
சகல்சீவிகட்கும்பரனுமாயுலகத்தாயுமாயமலதற்பரனாய்ப்
பகவனாய்ச்சென்மநாமமிலவனாய்ப்பரத்வமாயனகனாயலர்வித்
தகனுமாய்ச்சர்வசரண்யனாயுறைவோனவன்றனக்கபயமின்றெனு
[மால். 33.

நித்தனாய்முனிகளாற்றொழுங்கடவுளாய்நிராமயனுமாயெவர்க்குங்
கத்தனாய்ப்பரமபுருஷனாய்க்கருணாகரனுமாய்க்கதியருடேவாய்ச்
சுத்தனாய்விமலனாய்விபாபகனாய்ச்சுருதிபாராயணனாயும்
அத்தனாய்லோகநியாமகனானோனவன்றனக்கபயமின்றெனுமால்.
34.

இடிநிகர்கரவாற்கால்கரமோய்ந்தேயேக்கமாயுயிர்தடுமாறிப்
படிவமுமுருகிவாலசைவற்றுப்பரிவுடனரற்றுபேரொலியால்
இடியனலப்பாய்க்கால்வெளிபூவாபெண்ணுமும்மூர்த்தியின்முத
[லாய்
அடிகளாமாதிமூலமேயெனுமம்முறையரிசெவிநுழைபோழ்தே.
35.

வேறு.

பங்கயத்திருவைப்பாரான்பணிமுடிநிழலைத்தேடான்
சங்குசக்கரமுமேந்தான்றன்னைதிர்த்தொழுதுநிற்கும்
இங்கிதக்கருடன்மீதிலேறிடானிபத்தைக்காக்கக்
கங்கையைப்பெற்றபாதசாரியாய்க்கடுகிவந்தான். 36.

அன்னகரிருந்தபேர்களதிசயமனத்தராகி
என்னகாரணமீதென்றேயேகமாய்க்கூடிநின்று
பன்னகாபரணன்றன்னைப்பரீக்கைகாண்டிடவரக்கர்
துன்னினரோவென்றெண்ணித்துயக்குடன்சொல்லலுற்றார். 37.

துர்ச்சனர்கூடிநின்றுதொடர்ந்தடியாரைப்பற்றிப்
பசைமேனிப[…]ழுங்கள்பரமனெங்கேகாட்டென்று
மச்சரம்வைத்துமெத்தவாதைசெய்தாரோவென்றங்
கச்சுதனடைந்தபோதிலனைவருமாலோசித்தார். 38.

நாதனைப்பிரிபாலட்சுமிநாயகியுடுத்தசேலை
பாதிமுன்றனையந்தப்பரமனார்பற்றியேகும்
போதுதானுமிந்தப்புதுமையையறிதுமென்று
மாதவன்பின்றொடர்ந்துமயிலெனசசெல்லலுற்றாள். 39.

முடியவிழ்கேசஞ்சோரமுகங்குறுவேர்வைகொள்ள
அடியிணைகுழையமெய்யிலணிமணியாரமாடக்
கொடியிடைதுவளநீலக்கொண்டலின்மின்னல்போல
நெடியவன்பின்னெருங்கிநேரிழைநடக்கலுற்றாள். 40.

வேறு.

வாமதேவனுங்கௌரியும்விடைவாகனம்மிசையேறியே
நாமகளுடன்கூடவேமறைநான்முகனன்னமேறியே
காமனுமிந்திராணிவெண்மதகரியின்மீதினிலேறியே
சோமனுந்தினகரனுந்தேரின்மேற்றுகைபாருடனேறியே. 41.

விண்டலத்தினிலுள்ளபேர்களும்விறலெண்டிசையோர்களும்
மண்டலத்தினிலுள்ளபேர்களுமாதவம்புரிவோருமார்க்
கண்டருங்கௌதமரகத்தியாகௌசிகர்முதலானபேர்
கொண்டன்மேனியனுகுமென்றுகுறிப்பறிந்தவர்கூறுவார். 42.

அந்தரத்தொரீஇயருகினிற்றிருவமரரானோர்தொடர்ந்திட
நந்துவிற்றிடுந்தொனியதோபலநாயிருந்திகிரியுமதோ
அந்தமாகியகருடனுமதோவனந்தனுமதோநித்தியவை
குந்தமேவியபெயர்களுமதோவென்றுநின்றுகைகூப்புவார். 43.

மாயனேசரணென்பர்வாழ்திருமார்பனேசரணென்பரால்
ஆயனேசரணென்பரச்சுதவமலனேசரணென்பரால்
நேயனேசரணென்பர்நான்மறைநிருபனேசரணென்பரால்
தூயனேசரணென்பர்சென்னியிற்சேர்த்திரண்டுகைகூப்புவார். 44.

செங்கண்மாலுநடந்துவேகமாய்ச்செல்லவேசெழுந்தூரமாம்
பங்கயப்புனல்மேவுதும்பியின்பயமகன்றிடவானுறை
செங்கதிர்த்திரள்கோடிபோலவேதேசுகொண்ட[illegible]த்திகிரியை
மங்கைநாயகனேவியேமுந்திவந்துநின்றனன்கரையின்வாய். 45.

மண்டலம்மிருபிளவதாகவுமாதிரங்களும்வெடிபட
விண்டலங்கள்பி[illegible]தாகவுமேருவும்மிகவுருகவே
குண்ட[illegible]துளங்கிடக்கும்பியைப்பொருகரவிரு
துண்ட[illegible]வசெய்துமீண்டரிகையிலாழியுநின்றதே. 46.

வேறு.

சீத்ரன்சங்கந்தன்னைத்தொனித்தனன்செவிடுபட்டு
வேதனிந்திரனீசானன்விண்ணவர்மெய்ம்மறந்து
சீதளசலதிமேருசூ[illegible]டன்றெளிவுகொண்டு
மாதவன்மீதிலன்றுசொரிந்தனர்மலரின்மாரி. 47.

அந்தரத்திடை[illegible]ன்பேரியதிரவேமுழங்குந்தேவ
துந்துமிசின்னங்காளஞ்சொல்வகைப்பல்லியங்கள்
திந்திமிதிமிதியென்னத்தேவர்கள்செயசெயென்ன
வந்தனன்செங்கண்மாலும்வாரணத்தருகினன்று. 48.

நீரிடைநெடிதுநாளாய்நிலையற்றுநின்றயானை
பாரியகரவுமாளக்கண்டுதன்பயமகன்று
காரியமுடிக்கவிங்குக்காரணமாகவந்த
சீரியதிருமாறன்னைநோக்கியேசிரசையாட்டும். 49.

ஆடிபசிரசின்மீதிலரிமலர்க்கையைவைத்து
வாடினைதுயரமெய்திமனமொருமித்துநம்மை
நாடினையினியோர்நாளுநாசமேவாராதென்று
நீடியவுடலைக்கையாற்றடவினனெடியமாலும். 50.

தடவியவரியின்கையைத்தந்தியுந்தன்கைநீட்டி
அடைவுடன்மோந்துகொண்டங்களவிலாப்புளகமாகிக்
கடவுளின்கருணையாலேலாங்காரமேசெய்துநின்ற
உடனேமுன்னாளிலுள்ளவுருவினைக்கொண்டதாங்கே. 51.

சுரர்பதியரனயற்குத்துதிக்கவு ர்வணங்கவெட்டா
வரிதனைவலமாய்வந்தேயஞ்சலித்தெதிரினின்று
திருமகளுறையுமார்புந்தேசுலாமுகமுநோக்கிப்
பரிபவகுணங்களெல்லாம்பத்தியாய்த்துதிக்கலுற்றான். 52.

சிறியவன்றனக்குப்பொன்னின்சீர்முடியளித்தமாலே
உறுதியாய்ப்பிரகலாதற்குதவியசிங்கரூப
மறிகரனோதுமூலமந்திரப்பொருளேயாதி ட
திரிபுரதகனஞ்செய்யுஞ்சேவகபோற்றிபோற்றி. 53.

கல்லுருமாறிநின்றன்கழற்றுகள்க்துவாமுன்னம்
நல்லுருப்பெற்றதென்னோநாதனேமடுவிலுற்ற
வல்லுருவிடங்கர்வாயின்மடங்கவேயமைத்தவென்றன்
தொல்லுருத்தொலைக்குமாறுதோன்றினையென்முனின்றே. 54.

பண்டுநான்செய்தபாவம[illegible]யைத்தா
கண்டமாவிலங்குக்கெல்லாங்காலனென்றுரைப்பதாகக்
கண்டகத்துறையுமிந்தக்கண்டகன்றன்மேலன்பும்
உண்டெனுமொழிவிளங்கவுவந்துநீவந்ததன்றே. 55.

மயலெனும்பிறப்பைநீக்கிமாசிலாவுருவநல்கித்
தியக்கமாந்துயரிலாநற்றிண்கணாயதனினேற்றி
வியந்தரமன்னபேதைவெய்துறலறுத்ததெம்மா
னயக்கனூபனேயெனன்முனற்றவமுயன்றதென்றான். 56.

தண்பெருஞ்சலதிபூத்ததகையுறுமொக்குளேபோல்
திண்ணுற்றவண்டநின்னுட்டோன்றியேகரக்கும்பக்கம்
கண்கொடுவாயாற்சொல்லவொக்குமோகருணைவாரி
எண்ணுறுமறைக்குமெட்டாவெழிலுடையமரரேறே. 57.

ஈசனேதேவர்க்கெல்லாமிறைவனேதிகழ்வைகுந்த
வாசனேயடியார்க்கென்றும்வரதனேயனந்தவெய்யோன்
தேசுளவடிவேயுன்னைச்சிந்தையிற்றரிசிப்போர்க்கு
மாசிலாப்பதவிநல்குமாயனேசரணமென்றே. 58.

இறைஞ்சியேநின்றவிந்திரத்துய்மன்றனையேநோக்கித்
துறந்தனைதீமையெல்லாஞ்சுகமினிப்பெறுவாயென்று
அறந்திருநாதன்சொல்லவரசனுமரிரூபான
நிறந்தனையெய்திமோட்சநிலையதுபெற்றவாறே. 59.

கரவெனுமுருவமாறிக்கந்தர்வவடிவமாகிப்
பரமனைவணங்கியேத்தியலர்மகள்பாதஞ்சேர்ந்து
திரமெனுங்கீதம்பாடித்தேவர்கள்வாழுகின்ற
புரநிலையாகப்பெற்றுப்போயினனூகூவென்பான். 60.

இந்தநற்கதையைக்கேட்டவெழிற்பரிசித்திராசன்
அந்தமாருஷிபதத்தையஞ்சலிசெய்துநோக்கி
இந்திரத்துய்மனூகூவெனுமிருவர்க்குநேராய்
நந்தல்வந்துற்றவாறுநம்பிநீயுருடியென்றான். 61.

சிந்துபூதலத்தையாண்டசெழுமுடியரசர்தம்மில்
கந்தலிலறத்தின்கண்ணேகாதலனாகிநின்ற
இந்திரத்துய்மனென்னுமெழிற்பெயருடையபாண்டு
சந்ததிவழிவந்துற்றோன்சதுரங்கபலமுமுள்ளோன். 62.

அன்னவன்றவஞ்செய்போதிலகத்தியன்வருதல்கண்டு
சென்னியைக்குனியானாகச்சீறியேசாபமிட்டான்
மன்னதையறிந்தறிஞமயேச்சுரன்றன்பாலன்பு
துன்னநீயளிக்கவென்னவளித்தனன்தும்பியானன். 63.

கானகத்திருந்துபன்னாள்கரிணியாய்க்கழித்துவேந்தன்
ஞானநாயகன்பதத்தைநண்ணினனென்றுசொல்வான்
மோனமாமிருடிநீரின்மூழ்கிடத்தாளைப்பற்றி
ஈனமாமுதலையைப்போலிழுத்தனனாகூவென்பான். 64.

மந்திரவிருடிதானுமனதினிற்றியானஞ்செய்து
இந்தமாமுதலையாகியிருவெனச்சபித்துப்போனான்
தந்தியின்றாளைக்கவ்வச்சக்கரத்திருகூறாக்கக்
கந்தர்வவடிவமாகிக்கதிதனையடைந்தவாறே. 65.

இத்தலந்தன்னிலுள்ளோர்யாவராகினுமென்விண்டு
பத்தராயிருந்தோர்க்கென்றும்பயமிலைதுன்பமில்லை
குற்றமுங்குறையுமில்லைகுலவழித்தாழ்வுமில்லை
பற்றிடுவினையுமில்லைபகையிலைபரிச்சித்தேகேள். 66.

சத்தியவசனமாகச்சாற்றுவேனுலகின்மீது
அத்தியினுயிரைக்காத்தோனம்புயமலர்நற்றாளைப்
பத்தியாற்றொழுதபேர்க்குப்பழவினைநீங்கிஞான
முத்தியேபிறவிநீங்குமோட்சமுஞ்சித்தியாகுர். 67.

பெற்றிடுந்தந்தைதாய்சேய்பெண்டெனுஞ்சுற்றத்தாரில்
நற்றியபொருளைநம்பினலமிலையரியின்மீது
பற்றியநிலையினிற்கப்பலிக்குநற்கருமமெல்லாம்
உற்றிடுமுத்தியென்றேயுரைத்தனர்சுகருமன்றே. 68.

மொழிந்திடுஞ்சுகனைநோக்கிமொய்நகைவதனத்தோடும்
எழுந்துநின்றிறைஞ்சியந்தவிராசனும்புளகமாகி
அழுந்துமஞ்ஞானம்விட்டேயரிகதைகேட்கஞானக்
கொழுந்தெழும்விளக்காயன்புகொண்டுகைகூப்பிநின்றான். 69.

புடவியிற்றருமநீதிபுரந்திடும்பரிச்சித்தேகேள்
படவரவணையின்மேவும்பரமனார்பக்கநின்ற
விடகளன்மேகவாகன்வேதனைவிரும்பிடாமல்
கடறருமாதைநோக்கிக்காதலோடுரைக்கலுற்றார். 70.

மறந்திடாதெனதுநெஞ்சமலரின்மாமகளேயுன்னை
மறந்திடுமடியாரென்னைமனதுநொந்தழைக்கும்போது
மறந்திடுஞ்சகலலோகவண்மையுமற்றுளோரை
மறந்துசாதுவையேகாக்கவருவனென்றுரைக்கலுற்றார். 71.

செந்திருமடந்தைதானுஞ்செப்புவாளரியைநோக்கி
எந்தநேரமுமுன்பாதமிதபத்தினிலையாக்கொண்ட
எந்தனுக்கினிவேறேதாமிறைவனேயுன்றன்பின்னே
வந்தனனென்றுபின்னுமனமகிழ்ந்துரைக்கலுற்றாள். 72.

தீனர்கணினைத்தபோதுசெல்வமீந்தருளவேண்டும்
தீனரைப்பொருந்திநின்றதீவினையகற்றவேண்டும்
தீனருக்குறுதியானசெல்வமுமளிக்கவேண்டும்
தீனரட்சகனென்றியாருஞ்செப்பிடுந்தேவதேவே. 73.

என்றிடுங்கமலமாதோடெழிலுடைக்கொண்டல்வண்ணன்
நின்றிடுமூர்த்தியானகருடன்மீதேறிநேரில்
துன்றிடுமுனிவர்வேதன்சுரர்பதியிடபமூர்த்தி
அன்றவர்யாருங்கேட்கவடைவுடனுரைக்கலுற்றான். 74.

அனைவருங்கேளுமிந்தவாகமவிதிப்படிக்குத்
தினகரனுதியாமுன்னந்தெளிந்துநித்திரையினின்று
மனதினிற்கள்ளமின்றிவாரணமோட்சந்தன்னை
அனுதினந்துதிசெயன்பர்க்கருள்வனப்வீட்டையென்றே. 75.

சங்கத்தைத்தொனித்துத்தேவதேவனுஞ்சார்ங்கபாணி
இங்கிதமாகச்சென்றானிணையில்வைகுந்தத்திற்குச்
சங்கரனயன்மற்றோருமவரவர்தானஞ்சேர்ந்தார்
பொங்கமாய்ச்சுகரீதெல்லாம்புகன்றனர்பரிச்சித்துக்கே. 76.

தேவர்கள்வாழியெட்டுத்திசையிலுள்ளோர்கள்வாழி
மூவரும்வாழியாதிமூலமும்வாழியிந்தப்
பூவுலகெங்கும்வாழிபொதுவர்தங்குலமும்வாழி
யாவரும்வாழிவாழியறமதுசயமாய்வாழி. 77.

குருபாததாசர் அருளிச்செய்த திருப்புல்வயல்

குமரேசசதகம்.

காப்பு

பூமேவுபுல்லைப்பொருந்துகுமரேசர்தம்மேல்
தேமேவியசதகஞ்செப்பவே—கோமேவிக்
காக்குஞ்சரவணத்தான்கம்பகும்பத்தைந்துகரக்
காக்குஞ்சரவணத்தான்காப்பு.

நூல்.

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலைபேசிலாபஞ்சிறிது
கூடிவரநயமுரைப்பார்
கொள்ளுமொருமுதலுக்குமோசம்வாராதபடி
குறுகவேசெலவுசெய்வார்
வண்டப்புரட்டர்தாமுறிதந்துபொன்னடகு
வைக்கினுங்கடனீந்திடார்
மருவுநாணயமுளோர்கேட்டனுப்புகினுமவர்
வார்த்தையிலெலாங்கொடுப்பார்
கண்டெழுதுபற்றுவரவினின்மயிர்பிளந்தே
கணக்கிலணுவாகிலும்விடார்
காசுவீணிற்செலவிடாருசிதமானதிற்
கனதிரவியங்கள்விடுவார்
மண்டலத்தூடெனவர்த்தகஞ்செய்கின்ற
வணிகர்க்குமுறைமையிதுகாண்
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு
மலைமேவுகுமரேசனே. 1.

பிதாக்கள்.

தவமதுசெய்தேபெற்றெடுத்தவன்முதற்பிதா
        தனைவளர்த்தவனொருபிதா
தயையாகவித்தையைசசாற்றினவனொருபிதா
        சார்ந்தசற்குருவொருபிதா
அவமறுத்தாள்கின்றவரசொருபிதாநல்ல
        வாபத்துவேளைதன்னி
லஞ்சலென்றுற்றதுயர்தீர்த்துளோனொருபிதா
        வன்னமுமோனொருபிதா
கவளமிடுமனைவியைப்பெற்றுளோனொருபிதா
        கலிதவிர்த்தவனொருபிதா
காசினியிலிவரைநித்தம்பிதாவென்றுளங்
        கருதுவதுநீதியாகும்
மவுலிதனின்மதியரவுபுனைவிமலருதவுசிறு
        மதலையெனவருகுருபரா
மயிலேறி ......குமரேசனே. 2.

இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவறாமலுலகபரிபாலன
        நடத்துமவனேயரசனும
நிருபர்யோசனைதெரிந்துறுதியாகியசெய்தி
        நவிலுமவனேமந்திரி
நேயமுடனேதன்சரீரத்தைபெண்ணாத
        நிர்வாகியேசூரனும்
நிலைபெறுமிலக்கணமிலக்கியமறிந்துநேரா
        நிபுணகவியேகவிஞனும்
ஆயதொருவாகடந்தாதுவினிதானமு
        மறியுமதியோன்வைத்திய
னகமின்றிமெய்யுணர்ந்தைம்புலனொழித்துவிட்
        டவனேமெய்ஞ்ஞானியெனலாம்
மாயவர்சகோதரிமனோன்மணிக்கன்பான
        வரபுத்ரவடிவேலவா
மயிலேறி......குமரேசனே. 3.

படைக்கப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகையுந்தவம்புரிதபோதனர்பகையு
மரியதருணீகர்பகையு
மடுத்துக்கெடுப்போர்கொடும்பகையுமுட்பகையு
மருளிலாக்கொலைஞர்பகையும்
விரகுமிகுமூரிலுள்ளோருடன்பகையுமிகு
விகடப்ரசங்கிபகையும்
வெகுசனப்பகையுமந்திரவாதியின்பகையும்
வீணுமருத்துவர்கள்பகையும்
உரமருவுகவிவாணர்பகையுமாசான்பகையு
முறவின்முறையார்கள்பகையு
முற்றதிரவியமுளார்பகையுமந்திரிபகையு
மொருசிறிதுமாகாதுகாண்
வரநதியின்மதலையெனவினியசரவணமிசையில்
வருதருணசிறுகுழவியே
மயிலேறி......குமரேசனே. 4.

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகைமுகத்திலறியலா
மாநிலப்பூடுகளெலாம்
மழையிலறியலாநல்லார்பொலார்தமை
மக்களாலறியலாகும்
கனமருவுசூரரைச்சமரிலறியலாங்
கற்றவொருவித்துவானைக்
கல்விப்ரசங்கத்திலறியலாங்குணங்
களைநடையிலறியலாம்
தனதகமடுத்ததுபளிங்கிலறியலாஞ்
சாதிசொல்லாலறியலாந்
தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத்
தாதுக்களாலறியலாம்
வனசவிகசிதவதனபரிபூரணானந்த
வாலவடிவானவேலா
மயிலேறி......குமரேசனே. 5.

நல்லினஞ் சேர்பயன்.

சந்தனவிருட்சத்தையண்டிநிற்கின்றபல
தருவுமவ்வாசனைதருந்
தங்கமகமேருவையடுத்திடுங்காக்கையுஞ்
சாயல்பொன்மயமேதரும்
பந்தமிகுபாலுடன்விளாவியதணீரெலாம்
பால்போனிறங்கொடுக்கும்
படிகமணிகட்குளேநிற்கின்றவடமுமப்
படிபேகுணங்கொடுக்கும்
அந்தமிகுமரகதக்கல்லைத்தரித்திடி
லடுத்ததும்பசுமையாகு
மானபெரியோர்களொடுசேர்க்கைவாசமதுசெயி
லவர்கள்குணம்வருமென்பர்காண்
மந்தரநெடுங்கிரியின்முன்கடல்கடைந்தவரி
மருகமெய்ஞ்ஞானமுருகா
மயிலேறி......குமரேசனே. 6.

பெரியோர் வாக்யபரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய்வாக்யபரிபாலனஞ்செய்தவன்
றசரதகுமாரராமன்
றமையனருள்வாக்யபரிபாலனஞ்செய்தோர்கள்
தருமனுக்கிளையநால்வர்
சிந்தையிலுணர்ந்துகுருவாக்யபரிபாலனஞ்
செய்தவனரிச்சந்திரன்
றேகியென்றோர்க்கிலையெனுவாக்யபாலனஞ்
செய்தவன்றானகன்னன்
நிந்தைதவிர்வாக்யபரிபாலனஞ்செய்தவ
னீள்பெலமிகுத்தவநுமா
னிறையுடன்பத்தாவின்வாக்யபரிபாலன
நிலத்தினினளாயினிசெய்தாள்
மந்தைவழிகோயில்குளமுங்குலவுதும்பிமுகன்
மகிழ்தரவுகந்ததுணைவா
மயிலேறி......குமரேசனே. 7.

இடும்பாலழிவு.

சூரபத்மன் பெலமுமிராவணன் றீரமுந்
துடுக்கானகஞ்சன் வலியுந்
துடியானவிரணியன் வரப்ரசாதங்களுந்
தொலையாதவாலிதிடமும்
பாரமிகுதுரியோதனுதிநூற்றுவரது
பராக்ரமமுமதுகைடவர்
பாரிப்புமாபலிதனுண்மையுஞ்சோமுகன்
பாங்கினுறுவல்லமைகளும்
ஏரணவுகீசகன்கனதையுந்திரிபுர
ரெண்ணமுந்தக்கனெழிலு
மிவர்களதுசம்பத்து நின்றவோ வவரவ
ரிடும்பாலழிந்தவன்றே
மாரனைக்கண்ணுலெரித்தருள்சிவன்றந்த
வரபுத்ரவடிவேலவா
மயிலேறி......குமரேசனே. 8.

நட்பு நிலை.

மாமதியின்முயலானததுதேய்வுழித்தேய்ந்து
வளருமப்போதுவளரும்
வாவிதனிலாம்பல்கொட்டிகளதனிலீர்வற்றின்
வற்றிடும்பெருகினுயரும்
பூமருவுபுதல்பூடுகோடையிற்றீய்ந்திடும்
பொங்குகாலந்தழைக்கும
புண்டரிகமிரவிபோமளவிற்குவிந்திடும்
போதுதயமாகின் மலரும்
தேமுடலினைக்கினுயிர்கூடவுமிளைக்குமது
தேறினுயிருஞ்சிறக்குஞ்
சேர்ந்தோர்க்கிடுக்கணதுவந்தாலுநல்லோர்
சிநேகமப்படியாகுமே
வாமனசொரூபமதயானைமுகனுக்கிளைய
வாலகுருபரவேலவா
மயிலேறி......குமரேசனே 9.

நடுவு நிலைமை.

வந்தவிவகாரத்திலினியபரிதானங்கள்
வருமென்றுநேசரென்றும்
வன்பகைஞரென்றுமயலோரென்றுமிக்கதன
வானென்றுமேழையென்றும்
இந்தவகையைக்குறித்தொருபட்சபாதமோ
ரெள்ளளவுரைத்திடாம
லெண்ணமுடனேலிகிதபுத்தியொடுசாட்சிக்கு
மேற்கச்சபாசமதமா
முந்தவிருதலையுஞ்சமன்செய்தகோல்போன்
மொழிந்திடிற்றர்மமதுகாண்
முனைவிமனுடல்பாதிமிருகந்தனக்கென்று
முன்றருமர்சொன்னதலவோ
மைந்தனெனவன்றுமைமுலைப்பால்கொடுத்திட
வளர்ந்தருள்குழந்தைவடிவே
மயிலேறி......குமரேசனே. 10.

மானம் விடாமை.

கனபாரமேறிற்பிளந்திறுவதன்றியே
கற்றூண்வளைந்திடாது
கருதலர்களாலுடைந்தாலுமுயிரளவிலே
கனசூரனமரின்முறியான்
தினமோரிடுக்கண்வந்துற்றாலும்வேங்கைதோல்
சிவனளவிற்கொடாது
திரமானபெரியோர்சரீரங்கள்போகினுஞ்
செப்புமுறைதவறிடார்கள்
வனமேறுகவரிமாவுயிர்போகுமளவுந்தன்
மயிரினொன்றுங்கொடாது
வாராதவாபத்துவருகினுங்கற்புடைய
மாதுநிறைதவறிநடவாள்
மனதாரவுனதடைக்கலமென்றகீரற்கு
வன்சிறைதவிர்த்தமுருகா
மயிலேறி......குமரேசனே. 11.

நட்பு நிலை.

கதிரவனுதிப்பதெங்கேநளினமெங்கே
களித்துளமலர்ந்ததென்ன
கார்மேகமெங்கேபசுந்தோகையெங்கே
கருத்தினட்பானதென்ன
மதியமெங்கேபெருங்குமுதமெங்கேமுக
மலர்ந்துமகிழ்கொண்டதென்ன
வல்லிரவுவிடிவதெங்கேகோழியெங்கே
மகிழ்ந்துகூவிடுதலென்ன
நிதியரசரெங்கேயிருந்தாலுமவர்களொடு
நேசமொன்றாயிருக்கு
நீதிமிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவர்
நிறைபட்சமறவார்கள்காண்
மதிலுடன்கோபுரமும்வாவியும்புடைசூழ
மருவுசோணாட்டதிபனே
மயிலேறி... குமரேசனே. 12.

வறுமையிற் சிறுமை.

வறுமைதான்வந்திடிற்றாய்பழுதுசொல்லுவாண்
மனையாட்டிசற்றுமெண்ணாள்
வாக்கிற்பிறக்கின்றசொல்லெலாமபொல்லாத
வசனமாய்வந்துவிளையும்
சிறுமையொடுதொலையாவிசாரமேயல்லாது
சிந்தையிற்றைரியமில்லை
செய்யசபைதன்னிலேசென்றுவரவெட்கமாகு
செல்வரைக்காணினாணும்
உறுதிபெறுவீரமுங்குன்றிடும்விருந்துவரி
னுயிருடன்செத்தபிணமா
முலகமபழித்திடும்பெருமையோர்முன்புசென்
றொருவரோடுசெய்திசொன்னால்
மறுவசனமுஞ்சொலாதுன்பினிற்றுன்பமிது
வந்தணுகிடாதருளுவாய்
மயிலேறி..... குமரேசனே. 13.

தாழ்தற் பெருமை.

வேங்கைகள்பதுங்குதலுமாமுகிலொதுங்குதலும்
விரிசிலைகுனிந்திடுதலும்
மேடமதகன்றிடலும்யானைகளொடுங்குதலும்
வெள்விடைகடெள்ளிவிழலும்
றங்கில்கள்வணங்குதலுமேலவரிணங்குதலு
முனிவர்கணயந்துகொளலும்
முதிர்படைபொதுங்குதலும் வினைஞர்களடங்குதலு
முதவினர்பயந்திடுதலும்
ஆங்கரவுசாய்குதலுமகிழ்மலருலர்ந்திடலு
மாயர்குழல்சூடபடலு
மம்புவியிலிவைகாரியங்களுக்கல்லாம
லதனுலிளைப்புவருமோ
மாங்கனிக்காவரனைவலமதுபுரிந்துவளர்
மதகரிக்கிளையமுருகா
மயிலேறி......குமரேசனே. 14.

வைவிடத் தகாதவர்.

அன்னைசுற்றங்களையுமற்றைநாண்முதலா
வடுத்துவருபழையோரையு
படுபகைவிற்றப்பிவந்தவொருவேந்தனையு
மன்பானபெரியோரையும்
தன்னைநம்பினரையுமேழையானவரையுஞ்
சார்ந்தமறையோர்தம்மையுந்
தருணமிதுவென்றுநல்லாபத்துவேளையிற்
சரணம்புகுந்தோரையும்
நன்னயமதாகமுன்னுதவிசெய்தோரையு
நாளுந்தனக்குறுதியாய்
நத்துசேவகனையுங்காப்பதல்லாதுகை
நழுவவிடலாகாதுகாண்
மன்னயிலுமினியசெஞ்சேவலுஞ்செங்கைமலர்
வைத்தசரவணபூபனே
மயிலேறி......குமரேசனே. 15.

அடைக்கலங் காத்தல்.

அஞ்சலெனநாயினுட றருமன்சுமந்துமுன்
    னுற்றைக்கடத்துவித்தா
னடைக்கலமெனுங்கயற்காகநெடுமாலு ட
    னருச்சுனன்சமர்புரிந்தான்
தஞ்சமெனவந்திடுபுறவுக்குமுன்சிபி
    சரீரந்தனைக்கொடுத்தான்
றடமலைச்சிறகரிந்தவனைமுன்காக்கத்
    ததீசிமுதுகென்பளித்தான்
இன்சொலுடனே பூ[illegible]வுடையராயினோ
    ரெவருக்குமாபத்திலே
யினியதஞ்சீவனைவிடுத்தாகிலுங்காத்
    திரங்கிரட்சிப்பரன்றோ
வஞ்சகிரவுஞ்சமொடுதாருகன்சிங்கமுகன்
    வளர்சூரனுடல்கீண்டவா
மயிலேறி......குமரேசனே.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்.

பிரார்த்தனைப்பத்து.

கலந்துநின்னடியாரோடன்றுவாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னா
ளுலர்ந்துபோனேனுடையானேயுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே. 1.

அடியார்சிலருன்னருள்பெற்றாரார்வங்கூரயானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றிமுனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடையகடுவினையைக்களைந்துன்கருணைக்கடல்பொங்க
உடையாயடியேனுள்ளத்தேயோவாதுருகவருளாயே. 2.

அருளாரமுதப்பெருங்கடல்வாயடியாரெல்லாம்புக்கழுந்த
விருளாராக்கையிதுபொறுத்தேயெய்த்தேன்கண்டாயெம்மானே
மருளார்மனத்தோருன்மத்தன்வருமாலென்றிங்கெனைக்கண்டார்
வெருளாவண்ணமெய்யன்பையுடையாய்பெறநான்வேண்டுமே. 3.

வேண்டும்வேண்டுமெய்யடியாருள்ளேவிரும்பியெனையருளா
லாண்டாயடியேனிடர்களைந்தவமுதேயருமாமணிமுத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய்தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும்வேண்டாதுமிக்கவன்பேமேவுதலே. 4.

மேவுமுன்றன்னடியாருள்விரும்பியானுமெய்ம்மையே
காவிசேருங்கயற்கண்ணாள்பங்காவுன்றன்கருணையினாற்
பாவியேற்குமுண்டாமோபரமானந்தப்பழங்கடல்சேர்ந்
தாவியாக்கையானெனதென்றியாதுமின்றியறுதலே. 5.

அறவேபெற்றார்நின்னன்பரந்தமின்றியகநெகவும்
புறமேகிடந்துபுலைநாயேன்புலம்புகின்றேனுடையானே
பெறவேவேண்டுமெய்யன்புபேராவொழியாப்பிரிவில்லா
மறவாநினையாவளவிலாமாளாவின்பமாகடலே. 6.

கடலேயனையவானந்தங்கண்டாரெல்லாங்கவர்ந்துண்ண
விடரேபெருக்கியேசற்றிங்கிருத்தலழகோவடிநாயே
னுடையாய்நீயேயருளுதியென்றுணர்த்தாதொழிந்தேகழிந்தொ
[ழிந்தேன்.
சுடராரருளாலிருணீங்கச்சோதியினித்தான்றுணியாயே. 7.

துணியாவுருகாவருள்பெருகத்தோன்றுந்தொண்டரிடைப்புகுந்து
திணியார்மூங்கிற்சிந்தையேன்சிவனேநின்றுதேய்கின்றே
னணியாரடியாருனக்குள்ளவன்புந்தாராயருளளியத்
தணியாதொல்லைவந்தருளித்தளிர்ப்பொற்பாதந்தாராயே. 8.

தாராவருளொன்றின்றியேதந்தாயென்றுன்றமரெல்லா
மாராநின்றாரடியேனுமயலார்போலவயர்வேனோ
சீராரருளாற்சிந்தனையைத்திருத்தியாண்டசிவலோகா
பேரானந்தம்பேராமைவைக்கவேண்டும்பெருமானே. 9.

மானோர்பங்காவந்திப்பார்மதுரக்கனியேமனநெகா
நானோர்தோளாச்சுரையொத்தானம்பியித்தால்வாழ்ந்தாயே
யூனேபுகுந்தவுனையுணர்ந்தேயுருகிப்பெருகுமுள்ளத்தைக்
கோனேயருளுங்காலந்தான்கொடியேற்கென்றோகூடுவதே. 10.

கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனோ
வூடியூடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே. 11.

திருமணம்

செல்வக்கேசவராய முதலியார் M. A. எழுதிய

குசேலன் சரித்திரம்.

கண்ணன் கழலிணை

நண்ணினர் நற்றுணை.

பூமாதினுக் கெழின் முகமாய் விளங்கும் உத்தர மதுரையின் பாங்கர் அவந்தி என்றோ ரணிநகர் உளது. அந்நகருக்கணித்தான பெருங்காட்டில் குறவரு மருளுங் குன்றமொன்றுண்டு. அந்நெடுங்குன்றின் முடியின்கண் இராநின்றது ஒரு பெருந்தவ முனிவர் தஞ்சேரி. அச்சேரி அருமறைமுழக்கும், யாகஞ்செய்வோர் மந்திரமுழக்கும், அவர் சுரரைக் கூவி அவியளிக்கும் பெருமுழக்கும், அவரேற்குஞ் செருமலிமுழக்கும், உண்டபின் ஆசி செப்பிடு முழக்கமு மொன்றியிருக்கும். தருப்பை கொய்குநரும், சமிதை தேடுநரும், மாவிலை பறிக்குநரும், பஞ்ச கௌவியங் கூட்டுநரும், பவித்திர முடிகுநரும், நந்தவனத்தில் மலர் எடுக்குநரும், பெரியோர்க் குபசரிக்குநரும் அங்கே விளங்கியிருப்பர். இன்னும் அச்சேரி யோகியர்ஒருபாலும், ஞானியர்ஒருபாலும், போதிப்பார் ஒருபாலும், வேதங்கற்பவர் ஒருபாலும், தத்துவ விசாரஞ் செய்பவரொருபாலுமாய்ப் பொலியாநிற்கும்.

ஆங்கதில், அந்தணர் அருங்குலத் துதித்துத் திருமால் திருப்பதந் தாங்குறு முளத்தனாய்ப் பொறிகள் தீச்செயலில் சார்வுறாது அடக்கி, நன்மையே புரிந்து, அடக்கம் பொறை கருணை நட்பு என்பனவற்றைச் செயற்கருந் தவத்தோடொருங்குற வளர்ப்போனாய், இளமையில் கண்ணனுக்கு ஒருசாலை மாணாக்கனான ஒரு முனிவனிருந்தனன். முக்குறும்பெறிந்த தூயர்க்குந் தூயனான சுதாமா என்னும் அன்னான், பசித்தழலவித்துச், சாந்திராயண முதலிய விரதங்களைப் பன்னெடுநாள் அநுட்டித்துத் தசைவற்றி, என்பொடு நரம்புகள் தோன்றி, இளைத்த யாக்கைய

னுய்த் திகழ்ந்தனன். வைகறையாமந் துயிலுணர்ந்தெழுந்து, விதிப்படி காலைக்கடன் முடித்து, நீராடி, சந்தி சபம் தபம் முதலிய நியதியநுதியற்றுவான். இவன் கிழிதுணி பற்பலவற்றை இணைத்து மெல்லிழைச் சரட்டினுற் பொத்திய சீரையினையே நல்லுடையாகப் புனைந்த காரணத்தால், உலகினர் பலரும் இவனைக் குசேலன் என்றழைப்பர்.

இவன் தானியற்றுந் தவத்தினுக் குதவிசெய்வான் ஓரணங்கினை வதுவை செய்தான். அவளும்

"மாசிலாக்குலத்துவந்தாள் : வருவிருந்துவப்பஊட்டும்
நேசமிக்குடையாள் : கொண்கன்நினைப்பறிந்தொழுகும்நீராள் :
தேசுறுவாய்மையுள்ளாள் : சினந்திடல்என்றுமில்லாள் :
பேசுதிண்கற்புவாய்த்தாள் : பெற்றதேகொண்டுவப்பாள்."

புத்திரரைப் பெறுதார் புத்தெனும் நரகெய்துவ ரென்பவாகலின், இருளும் மருளும் இக்குழலினுளை மணந்து இருந்தவக் குசேலன் புத்திரப்பே றடைந்தான். செல்வர்கள் மகிழ ஓர் மகவும் தாராத பிரமன் இவர்கட்கு ஏழுதலையிட்ட இருபான் மைந்தரைத் தந்தனன். அதனுல் அன்னற்கு மிடியுற்றது. உற்றும்,

"பல்லெலாந்தெரியக்காட்டிப்பருவரன்முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ்சொல்லிநாட்டித்துணைக்கரம்விரித்துநீட்டி
மல்லெலாம்அகலவோட்டிமானமென்பதனைவீட்டி
இல்லெலாம்இரத்தல்அந்தோ! இழிவிழிவெந்தஞான்றும்!"

ஆதலின், ஏற்பதிகழ்ச்சி யென்று, காட்டில் கொள்வாரின்றி உதிர்ந்து கிடக்கும் நீவாரத்தைக் கொணர்ந்து மனைவி கையில் நீட்டுவான். அவளும் அதனை வாங்கிக் குற்றிப் பாகஞ்செய்து, அதிதிக்கோர்பாகம் வைத்து, மனைக்கண் வாழும் மைந்தர்க்கும் மணாளனுக்கும் பரிமாறக், குசேலனும் அதனை உண்டு உவகை பூத்துத், திருமாலின் திருவடியை நினைந்திருப்பான். அவள் இவர்கட்கிட்டு மிகுந்ததை உண்டு, அது பற்றுமை கண்டு, உடல் மெலிந்து உழன்று வந்தாள்.

இவள் ஒரு மகவினுக்கு உணவு அளிக்கும்போது ஒரு மகவு கைந்நீட்டும் : முந்தி மேல்வீழ்ந்து இருமகவுங் கைந்நீட்டும் ;

மும்மகவும் கைந்நீட்டும்: என் செய்வாள் பாவம்! ஒரு மகவு வீறி அழும்: ஒன்று நிலத்தில் வீழ்ந்து புரண்டழும்: மற்றொன்று கண் பிசைந்தழும். இவற்றை யெல்லாம் பாவம் எங்ஙனஞ் சகிப்பாள். ஒரு சேய் என் வயிற்றி லெழுந்த பசி அடங்கிற்றில்லை என்றழும்: ஒன்று சிந்தாத கஞ்சி எனக்கு வாக்கிலை என்று பொய் சொல்லும். ஒருசேய் உண்ணப் புகும்போது, அதனை மற்றொன்று பற்றி யீர்க்கும். இங்ஙனமாகக் கலாம் விளைக்கும் மைந்தர்களை நோக்கி, இரங்கி யேங்கி, அவர்களைத் தன் கரதலத்தால் அணைத்து, மடிமீ திருத்தி அவர் கண்களி னீரைத் துடைத்து, முகம் முதுகு முதலியன தைவந்து, முத்தங் கொடுத்து, ஆற்றல் செய்வாள். இக்குழவிகள் விளையாட் டயர்கையில் அடுத்த மனைச் சிறான் ஒருவன் "உமதகத்தில் அட்டகறி என்னை?" என்று வினவினால், அது கேட்டு அன்னைமாட் டோடி, "அன்னாய்! கறி என்பதற்குப் பொருள் யாது? எடுத்துரை" என்ன, அவளும் "அதனை உரைக்கின் செய்து தரும்படி வேண்டுமே: என் செய்வாம்" என்று கருதி "என்கண்மணிகாள்! யான் அறியேன்" என்று கூறி, வேறு வார்த்தைகளைப் பேசி அதனை மறக்கச் செய்வாள். வேறு மனைச் சிறுவன் உண்ணும் சிற்றுணவு கண்டு ஓடிவந்து, "அன்னாய்! இன்னான் இன்னது அயின்றான்: என் வாய் ஊறுகின்றது. அதனை இப்பொழுதே எனக்குச் செய்து தருதி" என்று கூறி, உடுத்த உடையைத் தொட்டு ஈர்க்கும் சிறு குழந்தையை எடுத்து மார்போ டணைத்துச் சிந்தை நோவாள். "அயல் மனையார் தம்முடைய குழவிகட்குக் குண்டலம் மோதிரம் கடகம் முதலியன இட்டனர். நீ எங்கட்கு அங்ஙனம் அணிந்து பார்க்கப் பொறாத தென்னோ? அவற்றைக் கண்டெடுத்து இப்பொழுதே எமக்கிடுவாய்" என்னின், பொருளில்லாதவன் கடன் தந்தவனுக்குச் சொல்வதுபோல, நாளைக்காகட்டும் நாளைக்காகட்டும் என்று சொல்லிவருவாள்.

அச்சேய்கட்குச் சிதமணிப் பூணன்றி வேறொரு பூணுமில்லை: மரவுரியே யன்றி மற்றோருடையு மில்லை; இலை யுண்கலம் அல்லாது உண்கலம் பிறிதொன்றில்லை. அம்மனையிற் புகும் ஓரெறும்பினுக்குத்தானுங் கொடுத்தற்கு உணவு மற்றங்கில்லை. வீட்டில் அன்னப்பாலன்றி மற்றோர் பாலில்லை. தனையர்க்கோ பசி தீர்ந்தபா

டில்லை. இவற்றை யெல்லாங் கண்ட முனிவனும் மனங் கவற வில்லை. இவன் ஒழுக்கினைக் கண்ட மனைவியும் இவன் மாட்டு வெறுப்புறுத லில்லை. வருவாய் மிக்குடையாருந் தமது அன்புடைய ஒரொரு மதலை எண்ணியவாறு இயற்ற இயலாது இடர்ப்படுவர்: இடுமிடியில் மகப்பல வுள்ளவள் செய்கை என்னையென்னே! இங்ஙனமாக மிடி யென்னும் இருங்கடலுட் பட்டுக் கரைகாணா தழுங்குவாள் தன் அகமுடையானையும் வெறுத்துரையாள்: அலர் மொழிகள் சிறிதுஞ் செப்பாள்: மறந்தும் மைந்தர்பால் மனஞ் சலியாள், இவள் சுகுணம் இருந்தவாறு என்னே! இத்துயர்க்கடலை எங்ஙனம் நீந்துவம் என்றோ ரெண்ணம், அவள் உளத்தென்று முண்டு.

இங்ஙனம் பன்னெடு நாள் கழிந்தபின்னர், ஒருநாள் அமைய மறிந்து, உளந் துணிந்து, கணவன் முக நோக்கி, "அந்தோ! நஞ்சிறார்கள் எழும்பசி யொழிக்க அன்னமில்லாது உயங்கினர். நம் மைந்தர் சிறப்புற அருளுதல் தேவரீர்க்குக் கடனு மன்றே. இந்நில வுலகில் மிடியுற்றார் பாவியர்: செல்வ முடையார் புண்ணியர் அன்றோ.

"தரித்திரம்மிக்கவனப்பினைஒடுக்கிச்சரீரத்தைஉலர்தரவாட்டும்:
தரித்திரம்அளவாச்சோம்பலைஎழுப்பும்: சாற்றரும்உலோபத்தைமிகுக்கும்:
தரித்திரம்தலைவன்தலைவியர்க்கிடையேதடுப்பரும்கலாம்பலவிளைக்கும்:
தரித்திரம்அவமானம்பொய்பேராசைதரும்: இதிற்கொடியதொன்றிலையே.

யாதவர் குலத்திற்றோன்றி அரசர்க் கரசனாகிய ஸ்ரீமாதவனை உம்மோடொருங்கு கற்ற ஒருசாலை மாணவன் என்று உலகினர் சொல்வார்கள். ஆதலின் அவன் மருங்கணைந்து, செல்வங் கொணர்ந்து, நம் சிறுவரது செல்லனோயைத் தவிர்த்தல் வேண்டும். அவன் உம்மைக் கண்டமாத்திரத்தில் வேண்டிய வெல்லா முதவுவான்: ஐயமின்று.

பளகறுநேசன்ஒருவனைப்படைத்தல்
பருந்தனப்பொதிபெற்றாற்போன்மென்
றுளமிகத் தெளிந்தோர் புகலும்நன் மாற்றம்
உண்மையாம்; பொய்மையாகாதே.

அக் கண்ணனும் குஞ்சன் முதலிய இன்னாதார்க்கும் இன்புற அளிப்பவ னாதலின், அவன்பாற் சென்று செல்வம் வேண்டின் ஈகுவன். மறுத்தானேனும் அவன் திருவடியைக் காண்டலே அமையும், வீடு பெறுதற்கும் அஃதோருபாயமா மாதலின். எண்ணிய எண்ணியாங் களிக்கும் மாயனை நண்ணி வருதிர்" என்றாள்.

இது கேட்ட முனிவரன் "நங்காய்! கல்லினுட் சிறு தேரைக்கும் கருப்பை யண்டத்துயிர்க்கும் உண வளித்துக் காக்கும் ஒருவன் உன் புதல்வரை மாத்திரம் மறப்பனோ? மறவான்; ஈதுண்மை. நீ கொண்ட துன்பத்தை விட்டுவிடு. பிரமன் அற்றைநாள் விதித்த ஆயுளின் அளவுகாறும், அவரவர் வினைக்குத் தக்க விருப்புணவும் வெறுப்புணவும் உண்டு என்பர் நூலுணர்ந்தவர். ஆதலின், நின்மைந்தர்க்கு ஆயுளுள்ளவரையில் இருவினைக் கேற்ப உணவுண்டு. நீ மனமறுகல் வேண்டா.

ஏதுவந் தாலும் ஊழால் எனநினைந் திருத்தல்வேண்டும்.

உலகியல் நன்குணராய்: உன்னைப் பொருட்பேய் பிடித்ததோ? அப்பொருள்தான்.

> பொருவறுபந்தமெல்லாம்புணர்த்திடும்: தெய்வசிந்தை
> ஒருவமேவிட்டுநிற்கும்: உறக்கமும்இறக்கச்செய்யும்:
> கருவினுட்புகுத்தும். இன்னகரிசுகண்டதனலன்றோ,
> இருநிலத்திடை வெறுக்கைஎன்மனார்புலமைசான்றோர்.
>
> சிறியரேமதிக்கும்இந்தச்செல்வம்வந்துற்றஞான்றே,
> வறியபுன்செருக்குமூடிவாயுள்ளார்மூகராவர்:
> பறியணிசெவியுளாரும்பயிறருசெவிடராவர்:
> குறிபெறுகண்ணுளாரும்குருடராய்முடிவரன்றே.
>
> பல்கதிர்விரித்துத்தோன்றிப்பாடுசெய்கதிரேபோல
> மல்லனீர்உலகிற்றோன்றிமறைந்திடும். நும்மைவிட்டுச்
> செல்வமென்றுறுவதற்கும் செல்வமென் றுரைக்கும் பேர்நன் (று).

ஆகவே, அன்பர் அகத்திலே புகுந்து வாழும் எம்பெருமானது இணையடி பெறுதலே என்றும் அழியாத செல்வமாகும்.

"உண்மை உணராதாய்! உன் மக்களை நோக்கிக் கவல்கின்றனை. கேள்—குடரும் என்பும் கொழூவும் வழும்பும் தோலும் நாடிகளும் தசையுங் கொண்டு செய்த பவ்வீப்பாண்டமாகும் மடந்தை நல்லார். இம்மாதர் மெய்வடிவங் கண்டு மாழ்குவார் மாழ்க. இவர்களை முற்பிறப்பில் எத்தனை மைந்தர் முறைமை பாராட்டினரோ? இனி எத்தனை மைந்தர் முறைமை பாராட்டுவரோ? அன்ன மைந்தரைத் தமமைந்தர் என்னல் அறியாமையாகும். இம்மட்டோ? இன்னுங் கேட்பாய்:—

"மதலையைப்பெறநாள்துன்பம்: வளர்த்திடுநாளுந்துன்பம்:
விதலைநோய்அடையிற்றுன்பம்: வியன்பருவத்திந்துன்பம்:
கதமுறுகாலர்வந்துகைப்பற்றிற்கணக்கில்துன்பம்:
இதமுறல்எந்நாள்சேயால்எற்றைக்குந்துன்பமானால்

தந்தையருந் தாயருமனந்தம்: சன்ம வூரு மனந்தம்: வாய்த்த உறவு மனந்தம்: பெற்ற பேரு மனந்தம: கன்மப் பெருக்கமும் அனந்தம்: கொண்ட சீரு மனந்தம்: இன்னுஞ் சேர்வது மனந்தமாகும். ஆகவே, அத்தகை மைந்தரார்? நீயார்? இஃதுணாக்கும் நானார்? மக்கள் மனைவியரைக் காக்க நான் திருமாலல்லேன். மைந்தராசை கோட்பட்டு வருந்துகின்றனை! இது பித்துளார் செய்கை. பெரியர் இம்மயக்கம் பூணார். நல்வினையடைந்த காலையில் எல்லோரும் நனி நலந் துய்ப்பர்: தீவினையுற்றகாலையில் அல்லலெய்தி யிடர்ப்படுவர். தோன்றும் அநுபவங்கள் எல்லாம் தொல்வினை வழியவாகும். அவற்றைத் தத்தம் புல்லிய வினையாலென்று எண்ணுதல் புலமையோரிடத்தின்று.

"பாற்கடலின்கண் ணுள்ள மீன் அப்பாலினை விரும்பாது வேறொன்றை விரும்புமாறு எம்பிரான் திருமுன் சார்ந்து நாற்கதி கடக்குஞ் செல்வத்தை நண்ணிடாமல் துன்பந்தருஞ் செல்வத்தையோ நண்ணுவேன் யான்?

"மானமற்றிழிவுபூண்டுவெளமனைக்கடைதோறெய்தி,
ஈனமுற்றிரந்திரந்திவ்வுடல்பருத்திடச்செய்தாலும்,
தூநகைக்கரியவாட்கண்சுடர்த்தொடீ! நிலைப்பதன்று:
பேனமார்வெள்ளநீரில்பிறந்திடுங்குமிழிபோலும்.

ஆகலின், நன்றியில்லாத இவ்வுடலைப் போற்றுதல் நல்லார் செய்கையன்று. யான் இக்குடும்பச் சேற்றில் உழன்றிடேன், உழன்றிடேன்" என்று கூறினான்.

இவ்வனைத்தையுஞ் செவியேற்று, இவையெல்லாம் உண்மைதானென்று உணர்ந்தவளேனும், மைந்தர்பால் வைத்த ஆசை மயக்கம் அருளாகிப், பின்னும் கணவனை வணங்கி, "எம்பெருமானே! நன்முயற்சியைக் குறைவின்றிச் செய்யா ஒருவனுக்குச் செல்வம் எங்ஙன் உற்றிடும்?

"மானிடன் ஒருவன் தனக்கருஞ் செல்வம் வாய்க்கஎன் றநுதின முயற்சி
தானுஞற்றுவனேற் கடவுளும் அதனைத் தந்தளிக் குவனதா லன்றோ
ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி யாக்கும்அம் முயற்சியில் லாமை
ஈனமார் இன்மை புகுத்திடு மாலென் றியாருநன் குணர்தர நவில்வார்.

எல்லாம் வல்ல எம்பெருமான் வேண்டிய ஈவானென்று செய்ய வேண்டும் முயற்சிகள் பலவற்றையுஞ் செய்யாது வாளா இருப்பின், அம்முழுமுதற்கடவுள்தான் யாங்ஙனம் அருளுவன்? செய்யத்தகும் முயற்சியனைத்தும் செய்தாலன்றோ, அவனும் வேண்டுவார் வேண்டுவன அளிப்பான்.

"முற்பவத்தில் செய்த நல்வினைப்பயனால், முயற்சியின்றியே மனிதர் முன்னிய வெல்லாம் உண்பாரென்னில், 'சுவாமி காட்டும் ஊட்டுமா' என்பது உலகியல். அரிசியும் அதற்கு வேண்டும் உபகரணங்கள் யாவும் பெற்றிருப்பினும், ஒருவர் அவற்றை அடுதல் முதலிய முயற்சி செய்யாவிடின் பசித்தழல் தணிவ தெங்ஙனம்? கலத்திட்ட பாலடிசிலைக் கரத்தால் எடுத்துண்டாலன்றிப் பசியொழிவ தெங்ஙனம்? கஜேந்திராழ்வானும் பிரகலாதாழ்வானும் துன்புற்ற காலையில், அன்பினோடேத்தி அழைத்தலானன்றோ, அஞ்சன வண்ணன் வந்து அவர்களை ஆண்டனன். குழவிகளிலும் அழுத குழவிகட்குத்தானே அன்னையர் பாலருத்துவர். முயற்சிசெய்வார் எய்துதற்கு அரியபொருள் ஒன்றுளதோ? ஆகவே நீர் சென்று கண்ணனை வேண்டின், அவன் நீர் வேண்டிய வேண்டியாங் களிக்கும். புரந்தரனாதியோரும் போற்றிக் குறையிரக்கும் அப்பெருமானைப் பல்வளந்தருதி என்றிரப்பதில் இழிவுண்டோ?

அப்பரந்தாமன் அடியிணையன்றி ஆதரவுண்டோ? அன்றியுங் குலமகட்குக் கொழுநனே தெய்வம் என்பர்; ஆகவே என்னைப் புரத்தல் உம்மைப் பொறுத்த கடனாயிற்று. புதல்வர்க்குத் தெய்வந் தந்தையுந் தாயும் என்பராதலின் அரிய மக்களை ஆதரிப்பது நம்மிருவர்க்குங் கடனாயிற்று" எனக் கூறிமுடித்தனள்.

இதுகேட்ட முனிவரன் உடம்பாடுடையனாகி, "கண்ணனைக் கண்ணுறின் கண்பெற்ற பேறும் பெறுதும், நற்கதியுறுதும், மைந்தர்களால் உளம்நையும் இவள் எண்ணமும் நிரம்பும்" என்று கொண்டு உரைப்பானாயினான்,

"தெய்வங்குரவன் அரசன் திருமுன்னர்ச்செல்வோர்,
மெய்வந்தஅன்னார் அருள்வேண்டிவிரும்பெதேனும்
கைவந்தபெற்றச்செலீஇக்காண்குவர்.

யான் கண்ணன்முன்பு என் கொண்டு செல்வேன்?

தெறநிரப்புளோர்வாழ்ந்திடுசெல்வர்பால்செல்வரேல்மதியார்கள்;
மறுவுறுத்தவமானமுமியற்றுவர்: மானமுள்ளவராயின்,
குறகுமவ்வவமானத்தால்உயிர்விடுகொள்கையிற்றலைநிற்பார்.
நறுமலர்க்குழால்! ஆதலால்அவரிடைநண்ணல்நன்றெனவெண்ணல்

ஒன்றும்வேண்டலராயினும்செல்வர்பாலுறுமிழியவர்சார்ந்தால்,
இன்றுவந்தமையாதினைக்கருதிமற்றிவரெனவுள்த்தெண்ணிக்
கன்றுமாறுபல்குறிப்புரைநவிற்றுவர்; காதலினவர்பாற்போய்
மன்றவந்ததுசிறுமையேயிவர்க்கன்றிமற்றிலையறிபாவாய்!

யான் இந்தவாறு உரைத்தது என்னென எண்ணிடேல். இது மானிடர் தன்மை. பரம்பொருளாகிய பாற்கடற் பள்ளியான்பால் உறுவது தகாதென்று உரைத்தேனல்லேன். அவ்வையன் முன், கையுறையின்றி யான் எங்ஙனம் ஏகுவேன்? மலையத்தனை தெய்வத்திற்கு மலையத்தனை மலர்கொண்டு அருச்சிப்பார்களா? இல்லை. ஏதாவது கையுறைகொண்டே முன்னுறல் வேண்டும்."

இது கேட்டு மகிழ்வெய்தி, என்செய்வது கையுறைதேடற்கென்றெண்ணி, உபாயம் ஒன்று செய்தாள். அன்று முதல், முனிவன் கொணர்ந்து தரும் தானியத்தில் சிறிதுசிறிது சேர்த்து வைத்துச், சில நாள் கழிந்தபின், அதனை அவலிடித்துக் கணவன்

கந்தையில் ஓர் பால் முடிந்து கொடுத்து, "இனி இக்கையுறை கொண்டு எம்மானிடம் இனிதுபோய் வருக" எனவிடுத்தாள். குசேலமுனிவனும் கையுறைகொண்டு வழிதேடிச் செல்லலுற்றான்.

முன்னெப்போதும் நெடுந்தூரம் வழிநடந்தறியான் பாபம்! தோட்கோப்பு முதலிய வழிநடையாதரவொன்றுமின்றிச் செல்வான், வழியிற்செல்வோரை வினவி வழிதேர்ந்து, பன்னெடுங்காதவங் கடந்தான். கவட்டை நெறிகளைக் கண்டு கலங்கி உன்னி இந்நெறியே சென்னெறியாம் செந்நெறி யெனத்தேர்ந்து ஏகுவான், பொருப்புகள் பல்பல, காடுகள் பற்பல, தேயங்கள் பலப்பல, நகரங்கள் பலபல, நன்னதிகள் பலவுங் கடந்தான். அதுவும் வேனிற்பருவமாதலால், பசியாலறமெலிந்தான்; பைந்தருநீழலிருந்தான்; நீர்நசையால் வாய்புலர்ந்தான். 'வழிநடக்கு நமக்கு இவ்வூரில் பழக்கமுடையாரிலரன்றே: துயில்வதற்கிடங்கொடுப்பாரெவருளர்' என்றுகொண்டு, எல்லியம்போது எதிர்ப்படுங் கோயிலின் முன்னுறங்கிக் கதிரவன் எழுமுன் எழுந்து வழிநடப்பான், கானத்தின்கண் காலிலே வேலின்முட்டைத்துக், காலூன்ற முடியாமல், முள்வாங்குங் கருவியும் காணாமல் இடர்ப்படுவான் எண்ணுவான் :—

"செறிதருதன்மனப்படியேசெய்தலொருவற்கினிதாம்
அறிவுறுக்குங்குருமொழிகேட்டாக்கலஃதினுஞ்சிறப்பாம்
முறிதருமேதிலர்சொற்கேட்டுஞற்றன்முனிதுயர்மனையாள்
வறியவுரைகேட்டுஞற்றன்மண்ணிறனோர்கெடுதியுறும்.

இது தெரிந்தும், மனையாட்டி உரைத்த உரையினுக்கு உடன்பட்டு, வெயிலால் உடல்வருந்தி, மூர்ச்சித்து மெலிகின்றேன். ஐயோ! முன்பின்பாராமல் புறப்பட்டுப் பல காவதங் கடந்து வந்துவிட்டேனே. கண்ணபிரான் அரசுவீற்றிருக்கும் துவரைநகரோ சேண்மைத்தென்கின்றனர் வழிப்படுவார்: அந்தோ! யாதுசெய்கேன். மற்றை வழியுங்கடக்க வலியிலேன். அங்ஙனம் கடந்தாலும், இடையில் கடலைக் கடத்தல் வேண்டுமே. அதனை யாருதவிகொண்டு கடந்திடுவேன்? அங்ஙனம் அதனையுங் கடந்து செல்வேனாயினும், அத்துவரைப்புரத்தில் என்னை மதிப்பார் எவ

ருளார்? ஐயோ! சற்றும் உணராது வழித்தலைப்பட்டேனே. என்னே! என்ன காரியஞ் செய்துவிட்டேன்! மாமன்னர் வந்து காத்திருக்கும் துவரைக்கோமான் வாயிலை எங்ஙனம் குறுகுவேன்? அவ்வாயில் புகுவேனாயினும், அப்பெருமான் சேவை ஏழையேனுக்கு எளிது கிடைக்குமோ? அங்ஙனங் கிடைக்கப் பெறுவேனாயினும், கற்பகத்தைச் சார்ந்தும் காஞ்சிரங்காய் கேட்பார் போன்று, எம்பெருமானிடம் நிலையாத செல்வத்தை எங்ஙனம் வேண்டுகேன்?"

என்றின்னணம் எண்ணி அயர்வுயிர்த்துப் பின் "இனி எவ்வகைத்துயர் உறினும் உறுக: இதுகாறும் வந்துவிட்டேன்: முன்னம் மனையாட்டிக் குரைத்தவாறு முற்றும் போய் வருவதே கருமம்" என உறுதி செய்துகொண்டு எழுந்து சென்று சின்னாளில் மேற்கடலின் கரை யடைந்தான். அங்கே மந்தமாருதம் உளங்களிப்ப வீசுதலும், ஓர் புன்னைமரநீழலில் இருந்து இளைப்பாறினான்.

"இனி இக்கலம் உய்ப்பானுக்குக் கொடுக்க இம்மியளவும் பொருளில்லை: அவன் பொருள்வேண்டாது செலுத்தலாவதான சிறப்புக்களு மில்லேன். கண்ணன் சேவைக்காகச் செல்கின்றேன் என உரைப்பினும் அதனை மெய்யென்று கொள்ளான். என் செய்வது! அவனை இன்சொல் கூறி இரப்பதே துணிவு" என்றெண்ணிப் புன்னை நீழனின்று புறம்போந்து மீகாமனைச்சார்ந்து, அவன் மனமிரங்கப் பல்லுரைகூறி மரக்கலம் ஏறினான். கலமும் கடல்கிழித்தோடித் துவரைத்துறை யிறுத்தலும், இறங்குவாரோடிறங்கி இறும்பூதெய்தித் துவரைப்பதிக்கண் உற்றான். உறுதலும் விசைகொண்டு நடக்கத் தொடங்கினான். மரங்களின் நீழலிற் சென்றால் எறும்பு முதலிய சிற்றுயிர்த்தொகைகள் சிதையுமென்றெண்ணிக், கையைவிரித்துத் தலைமேற்கவித்து வெயிலில் நடந்தான். அங்ஙன நடப்பவன் அப்பெருவள நகரைக்கடந்து இடைநகரையும் அகழியையுங் கடந்து, மதிற்பெருவாயில் தடையையும் தடையறக் கடந்தான். அங்குநின்றும் போந்து, கணிகையர் சேரி கடந்து, வசியவேளாண் மாந்தர் வசிக்கும் வீதிகள் கண்டு, பார்ப்பனச் சேரியை நோக்கி, அரச வீதியிற் புகுந்தான்.

சிறந்த அந்நகரத்தின் வளங்களை யெல்லாஞ் சிறிதறிந்து அற்புதமுறுதலான், இதுகாறும் இறந்த பல்காவதங் கடந்த இளைப்பும் வருத்தமும் இரிந்தன; பசியும் பறந்தது; நாவிற் பைம்புனல் ஊறியது. அக்கோமறுகினை அடைந்து சிறிதாறு கடந்தவாறே அரமனையின் தலைவாயிலைச் சார்ந்தான்.

தலைவாயிற் பெருஞ் சிறப்பெலாங் கண்டான். உள்ளத்துத் திகைப்புக் கொண்டான். உளங்கொளா உவ்கை யெய்தினான். "இவ்விடம் எள்ளிடுதற்கும் இயலாத பெருந்திரள் நிறைந்துளது. யாம் ஒரு கற்பகாலங் காக்கினும் உள்ளுறச் சார்வதெங்ஙன்?" என நினைந்து, கன்னல்பல காத்தான். காரியமில்லை. வருவன வருக என்று துணிந்து நெருங்கினான். ஆங்கு ஓரரசனைச் சூழ்ந்த அங்கக்காவலர் வாள்கொண்டு துரப்பச் சேயிடை யகன்றான். மீட்டுந் துணிந்து மற்றொருபால் மேவினான். அங்கு அரசர் கண்ணனைப் பணிந்து காணுற வந்தவர் தொகுத்த செம்பொற் குவியல் இருந்ததாகக் காவற்சேவகர் பலரும் முடுக்கினர். பாபம் இம்முனிவன் என்செய்வான்? ஒடுஉய்ந்தான். பின்னர் யாம் எங்ஙனம் புகுவதென்று ஏங்கி யிருந்தவன், தன்சேனைகள் புடைசூழ மன்னனொருவன் வந்தடைந்ததைக் கண்டு, அச்சேனையின் இடையே புகுந்தான். சேனைச் செறிவினால் உண்டான வருத்தங்களையும் பொறுத்து மென்மெல நடந்தான். சேனை நெருக்கினுட் பட்டுக் கானிலத் துறுமல் மேலுறக் கிளம்பியும் கரங்கள் மேலெடுத்தும் கையிடிப் புண்டும், வளைந்தும், பெருகி வழியும் வியர்வையில் மூழ்கியும், அப்பா! இது நமக்கு இரண்டாம் பிறப்பே என்று நினைத்துத் துவார பாலகர் நிற்கின்ற இடத்தினை யடைந்தான்.

திருமண்காப் பணிந்திருந்த அத்துவாரபாலர் அருகுற்று "மக்களுள் மிக்கீர்! கண்ணனுக் கடியீர்! என் ஆசி கொண்மின். உங்களை நோக்குந்தோறும் அக்கண்ணனையே கண்டாலன்ன உவகை உதிக்கின்றது. எளியனேன் மறையவர் குலத்து வந்தேன். குசேலன் என்னப்படுவேன். அடியாரை அளிசெய்து அல்லாதாரை அதப்படுத்தும் எம்மான் கண்ணனோடு இளமையில் பலகலை பயின்றுள்ளேன். கானுங் கடலுங் கடந்துவந்தேன்.

இந்நெருக்குடை வாயிலைக் கடந்து கண்ணனைக் காண நினைந்தேன். இனி நீர் அச்சுதன்பால் அடைந்து ஏழையேன் வரவை அறிவித்து என்னை அவண் சேர்த்தல்வேண்டும்." என உரைத்தான் குசேலமாதவன்.

இதுகேட்ட கடைகாவலரிற் கடையாவார் இழிசொற்கள் பல உரைப்பாராயினர் :—"ஓய் பார்ப்பானே! வயதுக்கோ நரைத்தது மயிருக்கோ நரைத்தது? உனக்கென்ன பகுத்தறிவென்பதே இல்லையோ? கண்ணனெங்கே நீயெங்கே? மதயானையும் மசகமும் போலும், வாரி நீரும் குளம்படி நீரும் போலும், உமக்குள்ள ஏற்றத் தாழ்வு. மன்னர் திருவோலக்கத்தை என்னென நினைந்தாய்?. அங்கு அடைபவர்க்குரிய தன்மை நின்பால் ஒன்றேனும் உளதோ?

பொருள்நனி யுளனென்றியாரும்புகலுமோர்வார்த்தைவேண்டும் ;
இருகையுங்கடகம் வேண்டும் : இலங்குகுண்டலங்கள்வேண்டும் :
வருவிரல்ஆழி வேண்டும் : மார்பிடைமதாணிவேண்டும் :
உருவமுத்தாரம் வேண்டும் : உயர்ந்தபட்டாடைவேண்டும் :
சிவிகைமுன்னூர்தி வேண்டும் : செழும்பொருள்செலவுவேண்டும் :
குவிகையேவலருமவேண்டும் : கோலமார்ந்திருக்கவேண்டும் :
கவிஞைதாங்குநரும்வேண்டும் : கைபுறைசிறப்பவேண்டும் :
அவிகையில்விளக்கம்வேண்டும் : அரசவைகுறுகுவார்க்கே.

நேற்றுண்ட உணா இன்னதென்று இன்று நினைவு வைப்பாரில்லை. உன்னுடைய முன்னாள் நட்பை முகுந்தன் இன்னும் மறந்திடா திருக்கின்றானென்கொல்? அரசவை குறுகுவார் சிறப்புறச் செல்வராகில் அங்குள்ளார் அவரைச் சிறப்புறு முகமன் செய்வர் : பீடையுற்றவராகில் பிடர்பிடித் துந்துவர்.

கோதறுகல்விசாலூர்க்குடியிருந்தறியானேனும்,
ஓதருஞ்செல்வமிக்கோன்ஒருவனேசிறந்தோனவன் ;
காதலின்வேதமுன்னாங்கலைகள்கற்றுணர்ந்தோனேனும் ;
தீதமைமிடியானாயின்சிறந்திடான்வேத்தவைக்கே.

கலைபயில் நாள் நட்பென்று கரைகின்றனையே. கண்ணன் அந் நட்பினை நினைந்திருப்பானாயின் இத்தனை யாண்டுகளாக முடங்

கல் இரண்டொன்று போக்கி யிருக்கலாமே: தூதுவனைச் செலுத்தி உன்னை வருகவென்றழைக்கலாமே. முந்தைநாள் நட்பை எண்ணி நீ செல்லுதல் கூடாது. அதிநட்பென்று அற்ற நோக்காது செல்லினும் அவமானம் உண்டாகும். தன்வீட்டு விளக்கென்று முத்த மிடலாமா? பேரவாத் கொண்டு வழிநடந்து இளைத்தனை: பாவம்! பெய்யும் வாடினாய். ஏன் இங்ஙனஞ் செய்தாய்? உன் குலத்தொழிலைச் செய்து சீவிக்கலாகாதா? இந்திரன் குபேரன் என்பவர்களே கண்ணன் சேவைக்காக இவ்வாயிற்கண் காத்திருக்கின்றனரே. மன்னர் மற்றவர்களையுங் கண்டிலைபோலும். ஈங்கு நின்றவனைக் காண்டி, இவன் மகதநா டாளும் மன்னன். இவனணித்தாக நிற்பவன் கொங்கணநாட்டு வேந்தன். ஊங்கு நிற்கின்றான் கூர்ச்சர நாட்டுவேந்தன். அவன் அண்டை நிற்பான் அங்கநாடாளும் அரசன். வெண்குடை நிழல் நிற்கின்றான் காம்போசநாட்டு மன்னன். அவன்பக்கல் நின்றான் துளுவ நாடாளும் மன்னன். மற்றவன் கலிங்கநாடாளும் மன்னன். அவன் கேகயநாட்டு வேந்தன். மற்றையர் சிங்களம், சோனகம், வங்கம், மராடம், மச்சம், குடகம், காந்தாரம் என்னு நாடாளும் வேந்தர். இத்தனை மன்னரில் எவரை நீ யொப்பாய்? முடவன் கொம்புத் தேனை விரும்பினாற் போல, முகுந்தனைக் காண வந்தாய். சிரார்த்தஞ் செய்யு மில்லந்தோறுஞ் சென்று இரந்து இனிதுயிர் உய்க. வந்தவழி பார்த்து நின்னூர்க்கு மீள்வதே கருமம்."

இதையெல்லாங் கேட்ட முனிவன் இவை யிவை எண்ணுவான்:—"மதாணியாம்! முத்தாரமாம்! பட்டாம்! பொன்னாற் செய்த ஊர்தியாம்! இவைகளை யெல்லாம் இப்போது யாம் பெறுவதெங்கே? இவைகளை நம் மூதாதையர் நாளினுங் கேட்டதில்லை. என் செய்வாம்? நுண்ணியகருமமு மெண்ணித்துணி என்பதை மறந்து, எண்ணுமல் ஒன்றை இயற்றுதல் என்றுந் தீதே யாகும். நாம் கந்தையிற் பொதிந்து வைத்திருக்கும் கையுறையினைக் கண்டால் இகழ்ச்சி செய்து நகைப்பரே" என எண்ணி நின்று வருந்தும் போது, அக் கடையாங் கடைகாவலனை நோக்கி, அறிவான்ற வாயில்காவலர் அறைவாராயினர்:—"இத்தவச் செல்வனை யாரெனநினைந்தீர்? பொய்மையில்லான்: நோன்புபல உழந்த நல்லன்: மறைநான்கும் மற்றும் வல்லன்: இன்சொல் உடையான்:

இக்கண்ணன் மாட்டன்றி மற்றியாண்டுஞ் செல்வானல்லன். இம் மறைவலவனை மெய்ஞ்ஞானி யென்றே விளம்புதல் வேண்டும். மெய்ஞ்ஞானியராவார், மணியாலும் பொன்னாலும் பயன் வேண்டார்: கிழங்கும் கனியும் அடகும் என்பனவற்றில் பசிவேளை கிடைத்தவற்றை உண்பார்; சிறிதேனும் நாளைக்கு வேண்டுமெனச் சிந்தைசெய்யார்; புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் விருப்பும் வெறுப்பும் கொள்ளார்: உலகம் நிலை கலங்கினாலும் தந்நிலை கலங்கார்; இன்னும் அவர் புண்ணியமிலார்; பாதகமிலார்; பெருமையிலார்; சிறுமையிலார்; பொய்ம்மையிலார்; மெய்ம்மையிலார்; உன்மத்தர்போல் திரிதருவார்; இன்றிருந்த இடம் நாளை இருக்கவிரும்பார்; கந்தையன்றி வேறுடுக்கை கொள்ளார். அவருடைய பெருமையை இற்றென இயம்பற்பாலர் எவருளர்? பொய்ஞ்ஞானியரோ தலையினை முண்டிதஞ் செய்திருப்பர்: தாமே பிரமம் என்பர்: பெருஞானியர்போற் பேசுவர்: சற்கருமஞ் செய்வாரைச் சாரார்; வைணவ சைவ வேடங்களை உண்மைவேடம்போ லுட்லிற் புனைவார. இவர்கள் தாம் கெடுவதன்றி மற்றவர்களையுங் கெடுக்கும் எண்ணம் பூண்டிருப்பர்: மிக்க வறிவுடையாரைப் போல் நடிப்பர்: முற்றத்துறந்த முனிவர்போல் காட்டுவர்: வழக்கினிடத்துச் சமையநோக்கி உயர்திணைவினையை அஃறிணைவினையா வுரைத்தும் படர்க்கைப் பெயரை முன்னிலையிடமா வுரைத்தும், பக்குவமில்லாத மடையரைப் பொருள் பறித்துக் காலங்கழிப்பார். இம் மறையோன் முழு ஞானியா யிருந்தும் சற்கருமம் இழந்தவனல்லன். அவ்வகைக் கருமத்தினாலே இவன் உடம்பும் இளைத்துளது: இதுதிண்ணம். இம்முனிவனும் எம்மை ஆண்டருளும் பொருட்டே, இங்கு எழுந்தருளினன் என்பது எங்கள் கோட்பாடு. ஆதியில் கண்ணனோடு கலையுணருநாட்பழக்கம் என இம் முனிவரன் உரைத்த துண்மையே ஆகற்பாலது. இவன் அரசரிடைக்கருமமாக வந்தவனல்லன்: கண்ணன் கழலிணை கண்டு பணிவதே கருமமாக வந்தவன். நம்முடைய தீவினை தீயும் நாள் இன்றாதலின், இப்பெருமானைக் காணப் பெற்றேம். ஆ! ஆ! இப்பெரியனைக் காண்டொறுங் காண்டொறும், உளத்துவகை பொங்காநின்றது: மெய்யிடைப்புளகம் எழாநின்றது: நயனம் நீர்சொரியாநின்றது: இவனைத் துதித்தற்கு நாத் துடிதுடிக்கின்றது. இன்னே

நாம் விரைந்துபோய், இத்தவன் வரவை இராசாதிராசனுக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்" என்றுரைத்துப், பின்னர் மாதவனைத் திருமுகநோக்கி, "இச்சிறியராயினும் மடமையாற் கூறினவற்றை நின் திருவுளத்துக் கொண்டிடேல். நீ இமைகொட்டு நேரம் இவ்விடம் இருத்தி; யாங்கள் கண்ணனைச் சார்ந்து, நின் வரவு கூறிக் காற்றினுங் கடுகவருவேம்" என்று சொல்லி, அவ்விடனின்றும் அகன்றனர்.

அகன்றவர் வாயில்களை விரைவினிற் கடந்து திருவோலக்கமடைந்தார். அங்கு அச்சுதனைக் காணாராகி அங்கு நின்றாரை வினவி அவன் உவளகத்துளன் எனக்கேட்டு, ஞெரேலென ஓடி மாதரார் காவல்செய் வாயிலை நண்ணினர். அவ்வுவளகத்தூடே ஒருத்தி கவரியிரட்ட, ஒருத்தி மாடகந்திரித்து வீணையின் நரம்பொலி எழுப்ப, கற்பூரம் ஏலம் இலவங்கங் கூட்டி ஒருத்தி பாகடை நீட்ட, ஒருத்தி பொற்படியக மேந்த, ஒருத்தி கண்ணடி காட்ட, ஒருத்தி பூஞ்செண்டுதவ, ஒருத்தி பொற்சிரக நீரேந்த, பாதுகை ஒருத்தி கையிற்றாங்க, உருக்குமணி பிராட்டியின் கவான்மிசை முடித்தலை வைத்து, மலரடியைச் சத்தியபாமைதன் கவான் மிசை வைத்து, ஐந்தணை யடுக்கிய அமளிமீது, ஐயன் படுத்திருந்தனன். துவாரபாலகர், காவல்செய் மாதரை அரசற்குத் தம் வரவுணர்த்துவான் வேண்ட, அவர்களும் உட்சென் றுணர்த்தி விடைபெற்றுக் கூற, உள்ளே சென்று சிரமிசைக் கரங்கள் கூப்பி, எட்டுறுப்பும் நிலத்துறும்படி வீழ்ந்து எழாநின்றனர். கண்ணனும் வந்த தென்னென வினவ, அவர்களும் "தாமரைக் கண்ணா போற்றி! தரியலர் ஏறே போற்றி! தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவா போற்றி! ஐய! ஆதிநாள் நின்னோடு அருங்கலை கற்றவனும், மிக்க நட்புங் கொண்டவனும்; பார்ப்பனக் குலத்தினன்; குணத்தின் மிக்கான்; குசேலன் என்று பெயர் சொல்லப்படுவானும். வாயில் வந்திருக்கின்றான். விண்ணப்பம் இதுவே" என்றனர். என்னக் கேட்ட கண்ணன் கருணை பொங்கி "விரைவிற் சென்று அம்மாதவனை இங்கு அழைத்துவம்மின்! அழைத்துவம்மின்! அழைத்துவம்மின்!" என்றியம்பினன்.

இயம்பக் கேட்ட துவார பாலரும், அங்ஙனே சென்று, "நாத னுக்கினிய நண்புடையவனே போற்றி! நின் வரவுரைத்தலும் நிரு பன் கொண்ட களிப்பின் மிகுதியை என்னென் றுரைப்போம்.

நன்னர்நெஞ்சுடையநீரார்நட்பினிற்சிறந்ததுண்டோ.

தாயைக் கண்ட சேயைப்போல, நேயம் மிக்கவனாகி 'அழைத்து வம்மின்! அழைத்து வம்மின்! அழைத்து வம்மின்!' என மும் முறை கூறிப் போக்கினான். இன்னும் பன்முறையுங் கூறி யுரைப் பன்; இலக்கண மின்மை நோக்கி, அம்மட்டில் அமைந்தனன் போலும். நீ விரைவின் எய்தாவிடின், அவனே எழுந்து வந்து விடுவன். எழுந்தருள்க" என்றனர். என்றலும், குசேலன் எழுந்து நடக்கலுற்று அந்தப்புரத்திற்கு அணியனாய்ச் சென் றான். செல்லுகையில் கண்ணனும், கதிரவன் வரவுகாணும் கமல மலர்போலும், குளிர்மதி வரவுபார்க்கும் குமுதம்போலும், முகி லின் வரவு நோக்கும் மஞ்ஞை போலும், கண்ணிமையாது, குசே லன் வரவை நோக்கி யிருந்தான். அம்முனிவனும் அணுகுங் காலை, அதிட்டவீனன் அட்டைச்சுவரியத்தைக் கண்டாற்போலக் கண்ணனைக் கண்ணிற் கண்டான். காண்டலும், கால் விசை கொடு நடந்தான். அவனைக் கண்ட ஆண்டகையும், அணையை உடைத்துக்கொண்ட வெள்ளம்போலே, பள்ளிநீத்து ஓடி மாதவன் மலரடியை வணங்கினான். பின் உடலெலாம் புள கம் போர்ப்ப, இறுகத் தழுவிக்கொண்டான். "நான் செய்த நல்லறங்கள் பலித்தன. இந்நாள் பாக்கிய முற்றது: இம் மனையும் யோக்கியமுற்றது" என்றுரைத்துக் கொண்டாடினான். அப்பால் அம்முனீந்திரனை அரதநபீடத் தெழுந்தருளப்பண்ணி னான். பொற்குடத்தில் பூரித்த புதிய மஞ்சனநீராட்டி, ஈரம் புல ர்த்திப் பட்டாடை சாத்தினான்: சாந்தம் பூசிப் பூமாலை வேய்ந் தான். பின்பு தீஞ்சுவை யுணவு நல்கிக் கையும் வாயும் பூசினான். அடைக்கா யுதவி அமளி யேற்றினான். அருகிருந்து முதுகு தைவந்தான்; கவரி யிரட்டினான். வழிநடந் திளைத்தனவே இம் மலரடி இரண்டும் என்று அவற்றை மெல்ல வருடினான். பழியில்லாத பல்லுபசாரம் பண்ணத் தெரியாத குசேலன் ஒன்றும் பேசாது ஐயன்றிருவுருவைத் தியானஞ் செய்து அசை

வற்றிருந்தான். குளவியின் ஓசையன்றி மற்றொன்றுந் தேராத புழுவென இருக்குந் தன்மைபூண்ட இம்மாதவனோ மனையாள் சொற்படி வறுவிதான செல்வத்தை வேண்டும்? கண்ணனுடைய உருவினைக் கண்கள் காண, துளப மாலையின் மணத்தை மூக்கு மோக்க, உரைக்கு முகமனைச் செவிகள் கேட்ப, அவன் திருமே னியைத் தன்உடல் பரிசிக்க, அவன் ஆயிரநாமங்களைத் தன் நா உருவிட்டுச் செபிக்க, ஐம்புலன்களாலும் அடையலான ஆநந்தத் தை ஆர அநுபவித்துக் கொண்டிருந்தான். இங்ஙனம் கண்ணனி டத்துத் தன்மனங் கலந்திருப்பத் தன்னையும் மறந்திருந்தான் மாதவக் குசேலன்.

இன்னணம் இருப்பத் தன் வரவனைத்துஞ் சொல்லாமுன் னரே உணர்ந்துகொண்ட முழுமுதற் கண்ணன் நண்பனை நோக்கி "உன்னைக் காண்டலால் யான் உடம்பு பூரித்தேன். இந்நாள் காறும் என்னுள்ளத்தை விட்டு நீ யகன்றிலை. சந்ததமு முன்னை நினைத்திருப்பேன்.

ஆயின்மறைமுதற்கலைகள்அனைத்துமுணர்ந்தறமறம்பாத்
தேயினிதுநன்றிதுதீதென்றுணர்த்தும்அவர்நட்பை
வீயினுந்தான்மறப்பர்களோமேதையோர்? மறப்பரேல்,
நாயினுங்கீழ்ப்பட்டவர்களவர்காணிந்நானிலத்தே.

பேயோடுபழகுறினும்பிரிவதரிதரிதென்று,
தூயோர்கள்மொழிவரால்தூயோரும்புகழ்தூயோர்
ஆயோர்கள்பெருநட்பைஅருந்தவத்தாற்பெறலன்றி,
ஏயோவெண்மையிற்கிடைப்பின்இகழ்வரோஇகழ்வில்லார்?

நின்னுடைய மனைக்கிழத்தி நீர்மை நிரம்பப் பெற்றவள்தானோ? என்ன மிடிவரினும் வெளியில் எடுத்தியம்பாத இயலினள் தானோ? நாயகன்மேல் பழி சிறிதும் எடுத்துத் தூற்றாதவள் தானோ? சொற்காக்குஞ் சோர்விலா மாண்பினள் தானோ? தன்னுடைய வுயிராக நின்னைப் போற்றுகின்றவள் தானோ? உன்னுடைய வரு வாய்க்குத் தக்க செலவு செய்பவள்தானோ? சொன்ன காரியம னைத்தும் சொன்னபடி யியற்றுகின்றவளா? இத்தனை காலமாயிற் றே! பல பிள்ளைகள் பிறந்திருக்க வேண்டுமே. எத்தனை மைந்தர்

கள் பிறந்தனர்? அவர்களைப் பேரவையோர் அணிதரச் செய்யும் செயலனைத்தும் சிங்காமற் செய்தனையா? உபநயனம் செய்தா யிற்றா? இவர் தந்தையென் னேற்றான் என்று அறிஞர் உரைக்கும் வகை அவர்கள் அருங்கலை கற்கின்றனரா? மைந்தர் வேண்டுமவற் றைக் குறைவின்றி நடத்திவருகின்றனையா? நானம் சந்தி சபம் முதலிய நியதிகள் நன்கு நடந்துவருகின்றனவா? இவற்றை யெல் லாங் குறைவறச்செய்ய, உடல் உரனுற்றிருக்கின்றதா? நாம் இரு வேமும் இத்தனை நாள் கழிந்தபின் இன்று கூடினோம்.

> நள்ளார்கள் அண்மைக்கண் இருந்தாலும் நட்புறத்தார்
> விள்ளார்கள் சேய்மைக்கண் இருந்தாலும் விருப்பொழியார்.

ஐய! நீ குடியிருக்கும் அணிநாட்டில் மாதம் மும்மாரி பெய்கின் றதா? கிளி விட்டில் முதலியவற்றால் பைங்கூழ் கேடின்றி விளை கின்றதா? கள்வர் காட்டுமிருகம் முதலிய கேடின்றிக் குடிகள் இனிது வாழ்கின்றனரா?

"நாம் இருவேமும் இளமையில், சாந்தீப முனிவரிடம் ஓது நாளில், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்த பேச்செல்லாம் நினைவிருக்கின்றதா? ஒருமுறை குருவின் பன்னியர் அடுதட் டற்கு எரிகரும்பின்றி இடர்ப்படுவார், நம்மிருவரையும் அது கொடுவரும்படி வேண்ட, நாம் சென்று விறகொடித்துக் காட்டுள் திரிந்தனமே. அப்போது பெருங் காற்றுமழை அடித்ததே. அடிக்கவே, நாம் குருந்தமரத்தின் அடியில் வைகியும், கொன்றை மரத்தின் அருகில் குறுகியும், இன்னும் பல்லாற்றானும் திகைத்து நின்றனமே. தருக்கள்தோறும் அடைந்தும், நம்முடைய தலை நனைந்தும், முகமும் கையும் காலும் நனைந்தும், மெய் நனைந்து விற கும் நனைந்ததே. மழையும் மேலும் மேலும் விடாமற் சோனமா ரியாகப் பெய்யவே, அடியில் புறங்காலளவாய்ப் பின் கணைக்கால் முழங்கால்களினளவாய்ப் பெருகும் வெள்ளம் அரையளவும் ஆயி ற்றே. ஊற்றுமாரியும் ஒழிதலின்று: என் இனிச்செய்வதென்று இருவேமும் இடர்ப்படுகையில், ஒரு கொடிய குளிர் காற்று வந்து கடுகிச் சுழன்றதே. இங்ஙனம் இன்னல் படுகையில், பறவை யெல் லாம் தத்தம் குடம்பை புக்கொளிப்பப், பொருமாவனைத்தும் போத்

தொளிப்பக் கதிரவனும் அக்காற்றின் குளிருக்கு ஆற்ருன் போன்று, குடபால் மறைந்தனனே. x பின் கருக்கிருள் கம்மிக் கொள்ள, நாமும் ஒருவர் கரம் ஒருவர் பற்றி, மேடு பள்ளம் உணராமல் குளிர்காற்ருல் நடுங்கி மயங்கிக், காலால் வழிதடவி, இருள் போகுமளவும் ஓரிடம் உற்றிருந்தனமே. இன்னணம் இடர்ப்பட்டொழியக் கங்குல் புலர்ந்து, கதிரவனும் 'இருவர் சிறுவர், மழையில் நனைந்து இளைத்து இக்காடு கோட்பட்டனரே: அவர் என்னுற்ருர்? காண்டும்' என்று எட்டிப்பார்ப்பான் போன்று குணபால் எழுந்தனனே. எழுதலும், நம்முடைய குருநாதனாகிய சாந்தீப முனிவனும், 'ஐயோ! பிரமசரியர் எங்குற்றனர் கொல்? என்னுற்றனர் கொல்?' என நம்மைத் தேடிக்கொண்டு, காட்டில் நண்ண, நாமும் அவனைக் கண்டு பணிந்தனமே. பணிந்து நின்ற நம்மைக் கண்டு, அவ்வாசான் 'தொண்டு புரியும் மாணவரில் தூயீர்! நும்போல்வார் எவருளர்? என் நிமித்தமாக மழையில் நனைந்தீர்: வருத்தம் மிகக் கொண்டு நின்றீர். கற்ற கடனும் இறுத்தீர். உமக்குக் கல்விப் பொருள்போல் செல்வப்பொருளும் மல்குக. நலமிக்க நன்மனைவியர் வருக. மைந்தர்கள் பல்குக. சுற்றம் பெருகுக. வாழுநாளும் வளர்க, என்ருசி கூறி, நம்மைக் கொண்டேகினனே. ஈதெல்லாம் நினைவில் இருக்கின்றதா?" என்று மாயனும் மாதவனை வினவினன். பின்னும், அம் முனிவனை நோக்கி, "இத்தனை நாள் கழித்து இங்கு வந்தனையே. எனக்கு என்ன கொண்டுவந்தாய்? அதனை இன்னே தருதி. இனிய சிற்றுணவு ஏதேனுமின்றி நீ வருவாயோ? நின் மனைவியும் நின்னை வாளா விடுவாளோ? இனிய சிற்றுண்டியை எனக்கன்றி எவர்க்குக் கொணர்ந்தனை? அதனை அளித்தி" என்று, தன் செங்கரத்தினை மலர்த்தி நீட்டினன். குசேலனும், பாலுண்பான்பால் புளிங்காடியைக் கொடுத்து உண்டிடு என்ருற்போல அதனைக் கொடுத்து வாளா இருந்தனன். இவன் உளமறிந்த கண்ணன், கந்தையிற் கட்டிய அவலை வாங்கிப் பக்கலில் வைத்து, முடியவிழ்த்து, ஒரு பிடி யெடுத்து, அதிக ஆவலுடன் வாயிற் போகட்டுக்கொண்டான். "இது இன்சுவை உடைத்தா யிராநின்றது; இல்லின் அமைத்தது; பழைது மன்று. விலைப்பாலிற் கொள்வது இத்தனை இனிப்பாயிராது." என்று கூறி அவ்வொருபிடி யவலைத்

தின்றனன். "இவ்வவலில், ஒன்றேனும் மூளைமுறிந்ததுவுமின்று. முட்டையுமின்று. இதுபட்ட கையும் மணக்கும். இதனை வாயிற் போகட்டால், அம்ம! ஒரு சிட்டிகைச் சருக்கரையும் வேண்டா" என்றியம்பினன். இரண்டு கொடிற்றினும் அதனை ஒதுக்கிப் பதமுறச் சற்று ஊறவைத்து, மென்று மென்று, சிரம் பலதர மசைத்து, இன்பமாக அதனைத் தின்றான். "எனக்கு அவலின் மீது மிக்க விருப்புளதென்று கேட்டுளாயோ?" என்றான்.

அன்றிரவு, அவ் வந்தப்புரத்தே அமைத்ததோர் அமளி மீது, குசேலனைக் கண்படை கொள்ளப் பண்ணினன். வைகறைத்துயிலெழுந்து கடன் பலவு முடித்து, மன்னவனை வாய் திறந் தொன்றுங் கேளானாகிக், குசேல முனிவன், நிதியம் மிகப் பெற்றான் போன்று, ஊர்க்கு வழிக்கொண்டான். கண்ணனும் வாயில்வரை வழிவிடுத்து, ஆர்வத்தோடு அடிவீழ்ந்து வணங்கி ஆசி கூறி, மீண்டு தன் கோயில் புக்கான்.

ஈதெல்லாங் கண்ட மடமாதர் பலரும் பலபடப்பேசுவாராயினர், கள்ளக் கண்ணன் மாயச் செய்கை உணரார் ஆதலின். "தாயைக் கண்ட சேயென உள்ளந் தழைத்தான்: எதிர் கொண்டழைத்தான்: காலில் விழுந்தான். நேயமுளான் என்று ஊரறியச் செய்தான். ஆயினும் அம்மறையவற்கு ஒன்றுங் கொடுத்திலன். நன்று நன்றிது" என்றனர் சிலமாதர். "அவனைக் கட்டியணைத்தான்: தொழுதான்: பள்ளிமீ தமர்வித்தான்: புகழ்ந்தான். ஒன்றும் அளித்திட்டானல்லன். உதயத்து உன்னூர்க்குச் சென்றிடுக, என்றான். இது நன்று நன்று" என்றார் சில மாதர். சிலமாதர் "எளியோன் பாவம்! இத்தனை தூரம் ஏன் வந்தான். தேனொழுகப் பாலொழுகப் பேசிக் களியாநின்று ஓர் காசுங் கொடாமல் கழிக என்றான் கண்ணனும். நல்லோர் இவன் உளையைத் தெளியார்," என்றனர். "எத்துணைய செல்வம் மிகுந்திருந்தாலும், ஈந்துவத்தல் என்பது இவன்பாலில்லை. அம்மறையவனும் இவனுடைய நயமொழிகளான் மயங்கி, ஒன்றுங் கேளாது சென்றனன். இவனும் மகிழ்ச்சியுடனே வழியும் விட்டுப் பெயர்த்து வந்தான். இவர்கள் நட்பிருந்தபடி நன்றாயிருந்தது. இவ்வகை நட்பு இருந்தென்? இராவிடினென்" என்றனர் சிலர். இவரொலாமிங்ஙன

மியம்பச் சிலர் "அவன் என் நினைத்து வந்தனனோ? இவன் யாது நினைத்திருக்கின்றனனோ? இவன் மாயை உணர்வார் எவர்? வாயில் வந்தவாறு நாம் நவிறல் நன்றன்று" என்றனர். இது நிற்க.

முனிவரனும், துவரையின் தெருக்கள் பலவுங் கடந்து, கடலையுங் கடந்து, தன்னூர்க் கேகும் வழியைக் கூடி மிக மகிழ்ந்து நடக்குங் காலை, இளைத்த இவனுடம்பு கண்ணனருளால் பூரித்தது. பழங்கந்தை பட்டாடையாய்ச் சமைந்தது. கண்டத்தணிந்திருந்த துளபமணிமாலை முத்துமாலையாயிற்று. தருப்பைப் பவித்திரம் தமனியமாய் விளங்கிற்று. திருமேனியும் காமனுங் காமுறுவதாயிற்று. வழி நடையிளைப்பு முதலியன சற்றும் இன்றாய் விட்டன. வெயிலுங் குளிர்ந்தது: பாலையும் பசந்தது. இளமென் காலும் இன்புற உலவிற்று. இவையனைத்து முணர்ந்து, இறும்பூது மிகக் கொண்டான். மன்னர்மன்னர்க்குரிய பல சிறப்புக்களும் தோன்றின. இவ் வதிசயமெல்லாம் எதிருறக்கண்டு, "இவை யெல்லாம் எம்பிரான் அருள்" என நினைந்து சென்றான். அரசர் முதலாயினோர் அனைவரும் அடுத்து, ஏவலர்போல் பின்படர்ந்து செல்லக் குசேலன் தன் ஊர்ப்புற மடைந்தான்.

பின் தன்னூருட் புகுங்கால் அந்நகரத்துள்ளார், அழகிய கையுறைகளோடும் அட்டமங்கலங்களோடும் ஆர்க்கும் பல்லியங்களோடும் எதிர்கொள்ள வந்தார். மங்கலங்கள் மறையவர் பாட, மாதவன் வீதி சார்ந்தான். வீதியின் இருபுறத்திலும் சாளரங்களில் முகம்வைத்து நோக்கும் மாதர், "இம்மறையோன் செய்த புண்ணியம் எத்தன்மைத்தோ? இவ்வகைச் சிறப்புக்களை யெல்லாம் உற்றனனே" என்று பற்பல சொல்வர். "கிள்ளிப் பற்று தற்குத்தானுந் தசையில்லாத உடலில் பழங்கந்தையைச் சுற்றித் திரிபவன், மாரனையும் பழிக்கலான மேனியுடனே சார்ந்தனன் கண்டீர்" என்பார். "கந்தமூலம் புசித்தும் கானில் வசித்தும் பெருந்தவஞ் செய்வார்களில், இவன் பெற்ற பேறு எவர் பெற்றனர்" என்பார். "மன மொழி மெய்களைக் கண்ணன் கழலடிக்கே யாக்கி நன்னெறியில் நிற்கும் இச்சீர்த்தியான் பெறுவது செல்வம் இம்மட்டோ? இன்னும் உண்டு" என்பார்.

“ சான்றவர் திருவுற்றாலும்தகுதியில்மிடியுற்றாலும்
ஆன்றதம்நீர்மைகுன்றார்.— அடல்வலிச்சனகன்என்பான்
என்றசெந்தண்மைவெம்மை இடைச்சமங்கொண்டாற்போலத்
தோன்றுவர்மயக்கம்பூணார், துடியிடைமடவீர் !” என்பார்.

இங்ஙனம் இவர்கள் வகுத்துரைப்ப, முனிவனும் தன் மனைவாயிலை யடைந்தான். தன் சிற்றிலைக்குடிலும் முன்னை நிலை திரிந்து, பெருமாளிகையாய்ப் பல வளங்கள் நிறைந்து பொலியக் கண்டான். மனைவியும், மணிகுயிற்றிய அணிகலனணிந்து, அழகிய ஆடையுடுத்து, முன்னினும் இளையளாய்க் காணப்படுவாள், கணவனைக் கண்டு எதிர்கொள வந்து நின்றாள். குசேலனும் திருமாளிகையின் உள்ளே எழுந்தருளினான். நவரத்தினங்கள் வகைபடவகைபடக் கொட்டிக்கிடப்பனவற்றைக் கண்டான். அணிகலப் பெட்டிகளும் ஆடை அடுக்கிய பேழைகளும் தனித்தனி வகுத்து நிரல்பட அமைத்திருந்தன கண்டான். பொற்கலங்களை எதிரே வைத்து, அறுசுவை உண்டி படைத்து உபசரித்தூட்ட, வேண்டா என்மரும், அதனைத் திரும்பிப் பாராது செல்குநரும், பசியில்லை யென்மருமாய்ச் செல்வப்பிள்ளைகள் செருக்குதலைக் கண்டான். வயிரச்சுட்டி நுதன்மிசைப் பொலிய, மார்பிடைமதாணிகள் விளங்கக் கரத்தில் கடகமும் காதில் குழையும் கவினப் பொன்னாண் அரைமிசை அவிர, அடிகளிற் சிறுசிலம்பொலிப்ப இளஞ்சிறார் விளையாட்டயருதல் கண்டான். அட்டிற்சாலையில் உப்போடொன்பதும் பருப்பொடுபத்தும் பளகறு கலங்கள் பற்பலவும் பொலிவன கண்டான். காணுங்காலை, கற்புடை மனைவி விரைய முன்போந்து தயிலக்காப்பணிந்து நானஞ்செய்தருளுவான் வேண்டினள். இதற்குள் ஆதனமமைத்தாள் ஒருத்தி; அந்தணன் அதன்மேல் இருந்தனன். பொன்னாற்செய்த வள்ளத்தில் தயிலம் வார்த்து வைத்தனள் ஒருத்தி. ஒருத்தி சிவிறி வீசினாள். ஒருத்தி தயிலத்தைச் சென்னியிற்பூசி அங்கத்தும் அப்பினள். பின் மஞ்சனசாலை புக்கடைந்தான். ஆங்கு மாதர்பலர் குழுமி நெய்யகற்றி வெந்நீர் வாக்கிட மூழ்கி, மெய்யீரமும் பாற்றி, ஆடையுடுத்து நியதிக்கடன் முடித்து, உணவுகொள்சாலை யடைந்தனன். அடைந்து, அறுசுவை யடிசிலை உண்டிக்கழகிய விருந்தோடுண்டான். விலாப்புடை வீங்க உண்ட வேதியர் குழாத்தொடும் எழு

ந்து, கையும் வாயும் பூசிக் கந்தம் பூசிப் பாகடை தந்து விருந்தினரைப் போகவிட்டான். இங்ஙனம் சிற்சிலர் போகத்திற் போயினர்.

பின் ஒருநாள் உவளக அறையினை அடைந்து, மக்களும் மனைவியும் உறுவகைத் தாழ்க்கோலிட்டு ஒருவனுயிருந்து எண்ணுவானாயினன் :—" இன்னல் தரும் பொருளை யீட்டுதலுந் துன்பம், பேணுதலுந் துன்பம் : அதனை இழத்தலுந் துன்பமே. சீச்சீ! இப்பொருளை வேண்டுமெனப் பெரியராயினர் மறந்தும் நினைப்பரோ? ஊழின் வலியாற் பெருஞ்செல்வம் பெறினும் அறிவுடையார் அதனை அகற்றிவிடுவர். யான் என்னும் அகப்பற்றும் எனது என்னும் புறப்பற்றும் ஒழித்தவனே வீடெய்துவான் என்று விதித்தன நூல்களும். மனைவாழ்க்கை யகத்தேயிருந்து முத்தியைப் பெறலாம் என்பது மலையினைப் புணையாக அலையிலிட்டு அதன் துணைகொண்டு ஆர்கலி கடத்தல் போலாம். மனையின்கண் பெருஞ்செல்வமுற்று வாழ்வோன் சிறிது நேரமாயினும் தியானித்திருப்ப நினையினும், காணவருவாரை எதிர் சென்றழைத்து உபசரிப்பதிலும் வினையிலும் விநோதத்திலும் விரும்பிப் பேசுவதிலும் அவர்கள் நினைத்ததை அளிப்பதிலும் காலங் கழிகின்றது : இவன் நினைவும் இதனுள் அழிந்து போகின்றது.

ஒன்றும்பெறுதலிலரெனினும், உற்றபெருஞ்செல்வத்தினர்பால்
சென்றுகொளுநட்புடையரெனத்தேயஞ்சொலற்கேசிலர்சூழ்வார் :
மன்றவென்றுயினுமோர்பயன் வழங்கலாகுமெனமூட
றுன்றுநறுநெய்க்குடத்தெறும்பு சூழ்தல்போலுஞ்சிலர்சூழ்வார்.

களியிற்றெய்வசிந்தனையுங்கழிந்தேநிற்கும். அதுகழிய,
அளியிற்சிறந்தநல்லறமும் அகன்றேநிற்கும். அஃதகல,
ஒளியிற்றிடவந்திருளடைந்தாங்குடற்றும்பாவம் வந்தடையும்.
விளியிற்கொடியநிரயமெலாம்புகுந்துகிடக்கும்வேலைமிகும்.

அந்த நிரயக் கொடுந்துன்பத்தைப் படுவார் எவர். அதனை நினையினும் உள்ளம் உளைகின்றது. இவற்றுக்குக் காரணம் செல்வமே" என நினைந்தான். நினைந்து அதற்கு அஞ்சினனாகி, " இவ்வருத்த மெல்லாம் ஒழியும்படி எம்பிரானை ஏத்தித் துதிப்

பேன்'' என்று கருதி அமலன் ஆயிர நாமங்களையும் எடுத்துப் போற்றினான். போற்றுதல்செய்து, கண்கள் நீரரும்ப இருகரஞ் சென்னிமேற் குவிய, "உன்னற்கரிய உம்பர் பிரான் எனக்கு இனிதருள இங்கு உறுவன் கொல்லோ'' என்று நெக்குருகி மனக்கசி வுறுங்கால், ஐவகைத் துந்துபி ஆர்ப்ப, அலர்மழை அமரர்தூவப், பிராட்டி சமேதனாய் மனத்தினுங் கடுகி வெளிவந்து நின்றான் பக்தவற்சலனான பரந்தாமன்.

அவ்வண்ணலைக் காண்டலும், விரைந்தெழுந்து, அன்பு பூண்டவர்க்குரிய அன்னானடிக்கண் பொள்ளென வீழ்ந்தெழுந்து, முடிமிசைக் கரங்கள்கூப்பி, மும்முறை வலம் வந்து, அடிமிசை அன்பு பொங்க, ஆநந்தக் கண்ணீர் வார, இருந்தழலிட்ட இழுது போல் உருகி நின்ற முனிவர் பெருமானை நோக்கிக் கருணைகொண்ட கமலக்கண்ணன் "மாதவ! வேட்டதென்! விளம்புவாய்'' என்றனன். அது கேட்ட அருந்தவன் "இச் செல்வம் இன்பந்தருவது எட்டுணையும் இன்று. இது பிறப்பிற்கே ஏதுவாகும். மனமொழி மெய்களை நின்னடிக்கே செலுத்தும் நாயடியேன் இந்தக் கனவெனுஞ் செல்வத்தில் ஆழ்ந்து எத்தனை நாள் கழிப்பேன். ஆதலால், ஐயனே! அநித்தியமாகிய செல்வத்தை வேண்டுகின்றிலேன். முன்னிருந்த மிடியே இன்னும் வேண்டும். இதுவே என் வேட்கை. இதனை நீ நிரப்புக'' என்றான். என்னக் கேட்ட மாயவன் முறுவலித்து, "பொருள்வேண்டாது நல்குரவை நல்குக என்கின்றனையே: என்னை?'' என்று கேட்ப, குசேலன் "காரணந்தான், முன்னர் அடியேன் செய்த விண்ணப்பத்தால், வெள்ளிடை விலங்கல் போல விளங்கிக் கிடப்பவும், நீ ஒன்றும் அறியான் போன்று இங்ஙனம் வினவுதல் தகுமோ? நின்னடிகளைப் போற்றி நாள் கழிப்பேற்கு இச்செல்வம் இடையூறாயிற்று. ஆதலின், எம்பிரானே! கருணை செய்க'' என்றிரந்து அடியில் வீழ்ந்தான். அது கண்ட அமலன் "வெம்புறேல்: கவலையொழி'' என்று கூறி, முனிவரன் உடலைத் தைவந்து "உம்பர்க்கும் அரிய இன்பம் பெறுவை. நினக்கு முன்னே திருவளித்தது, நின்னைச் சேர்ந்தவர் நிமித்தமாக: உன்னைச் சார்ந்தவர் துன்புறல் தகுதியன்று. ஆதலின், அதனை எண்ணிப் புந்தி மாழ்கலை.

மருந்தும் மந்திரமும் உள்ளாரைப் பாம்பின் விடம் என் செய்யும்? இரவியை இருட்குழாம் என் செய்யும்? அச்செல்வம் நின்னை என் செய்யும்? மெய்யறிவினோர் தக்கதோர் தொழிலினைச் செய்யுங் கால், தாமரையிலை நீர்போல் நிற்பர். உனக்கு இந்தப் பந்தம் பொருந்தாது. ஆயினும் நீ நீடூழி வாழ்ந்து, ஈற்றில் நம்முலகம் சேர்ந்து இன்புறக்கடவை. நீ மீட்டும் திருவை வேண்டுவை தின் றெனின் யாம் காதலிக்கும்திருவை நீ இகழ்ந்தாயாதி. நீ இகழ்வ தற்கு அஞ்சி அன்னாள் இரிதருவாளாயின், யாமும் இரிவேம். உர வோய்! இவ்வுரையை இனிதுகொண்டமைக" என்றுகூறி, மாய வன் மறைந்தருளினன். மறைதலும், முனிவன் "இவன் திருவுள் ளம் இருந்தபடி இதுவோ" என்றெண்ணி அவன் இணையடி மற வாது இன்புற்றுச் சால நாள் கழிய வாழ்ந்தான்.

மக்பெத்.

சாந்தகுணபூஷணன் எனச் சிறப்புப்பெயர் பெற்ற டங்கன் என்னும் அரசன் ஸ்காத்லாந்தில் செங்கோல் செலுத்துநாளில், அங்கு மக்பெத் என்னும் நாமங்கொண்ட பிரபு ஒருவன் இருந்தனன். அவன் அரசனுக்கு உதிரக்கலப்புள்ள உறவினன். இணையற்ற ரணசூரனென்று இராஜாங்கத்தில் அவன் மிக்க பெருமையும பிரதிஷ்டையும் பெற்றவன். ஒருகால், தலகப்பிரியராகி நார்வேநாட்டுச் சேனைகளைத் துணைநிற்க உடன்படுத்தி அரசன்மேல் தண்டெடுத்து நெருங்கிய இராணுவவீரர் எண்ணிறந்தோரை, இந்த மக்பெத், படுகளத்தில் துணிவு குன்றாது எதிர்த்துப் பொருது சிதறடித்து அபஜயப்படுத்தி, அற்புத வீரதீரனென்று அழியாப் புகழ் பெற்றனன்.

அப்பெரும்போர் முடிந்தபின்னர், மக்பெத், பங்குவோ எனும், ஸ்காத்திய சேனாபதிகள் இருவரும் வெற்றிவீரராய்த் திரும்பிவருகிற வழியில், கடுவெயிலில் உலர்ந்து தீய்ந்த ஒரு சம்பம்புல் வெளியில், விசித்திர ரூபிகளாய் யாரோ மூவர் எதிர்ப்பட்டனர். அது கண்டு அவர்கள் அப்புறம் அடியெடுத்து வைக்காமல் அசைவற்று நின்றனர். அவர்கள் பார்வைக்குப் பெண்கள்போலப் புலப்பட்டனராயினும், அவர்களுக்குத் தாடிரோமம் வளர்ந்திருந்தது; அங்கம் திரைந்து ஆடைதரித்த கோலம் அவகோலமாயிருந்தது; அதனால் அவர்கள் இம்மண்ணுலகத்தவரென விளங்கவில்லை. இன்னாரென விளங்காமைபற்றி அவர்களை நோக்கி மக்பெத், “நீங்கள் யாவர், எங்குள்ளோர்?” என வினவினன். வினவவும், அவர்கள் அவன் சொல்லை நிந்தையென்று சிந்தையிற்கொண்டு வெறுப்புற்றதாக அவர்களின் முகக்குறிகள் விளக்கின. அன்றியும் மௌனமுற்றிருக்குமாறு, அவர்கள் உலர்ந்து கமர்வெடித்த களிமண் தரைபோலப் பிளவுபட்டிருந்த கைவிரலை ஊன் கழிந்து வெறுந்தோலான உதட்டில் வைத்துக்கொ

ண்டு நின்றனர். பின்பு அவர்களில் ஒருத்தி “க்ளாமிஸ் பிரபு” என மக்பெத்தை விளித்து வாழ்த்தினள். அம்மொழிகேட்டு மக்பெத் அந்தரவனத்தில் அபிரூபமாகத் தோன்றிய இவர்களுக்குத் தன் குலமும் குறியுமெவ்வாறு தெரிந்தனவென அவ்வதிசயத்தை நினைக்க, அவன் மனம் மிகத் துணுக்குற்றது. பின்னர் மற்றொருத்தி “காடர் பிரபுவே! நீ வாழி” என மங்களம் பாடினள். அவன் அந்தப் பட்டம் பெற்றவனல்லனாதலின், அம்மொழியைக் கேட்க அவன் மனம் பின்னும் பதின்மடங்கு திடுக்கிட்டது. அப்பால் மூன்றாவது மாயாரூபி “வாழ்க, வாழ்க! இனி நீ கிரீடாதிபதியாவாய்” என்று ஆசி கூறினள். வருங்காலமுணர்ந்து கூறிய இவ்வாக்கைக் கேட்டபொழுது, மக்பெத்துக்கு உண்டான ஆச்சரியம் இவ்வளவென்று சொல்லமுடியாது. “சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதி இல்லையா.” அரசனுக்குப் புதல்வர் ஒருவருக்கு இருவர் இருப்பதனால் அதனை அறிந்த மக்பெத், மலடிமகன் என்பதுபோல் அம்மாயப்பெண்கள் உரையை உண்மையென்று எவ்வாறு எண்ணலாகும்? பின்பு அந்த மாயாரூபிகள் பங்குவோவை ஏற இறங்கப் பார்த்து, “நீ மக்பெத்திலும் தாழ்ந்தோனாயினும், பெரியோன்! அவ்வளவு பாக்கியவானல்லனாயினும், அவனிலும் அதிக பாக்கியம் பெற்றவனே!” எனப் பேசி, “சிங்காதனத்தில் வீற்றிருக்கும் சிறப்பு உனக்கு இல்லை. உன் காலம் கழிந்தபின்னர் உன் குமாரர்கள் ஸ்காத்திலாந்தில் இராஜ்யபாரம் தாங்குவார்கள்” எனப் பின் நடப்பனவைகளை முன்னறிந்து கூறி ஆகாயவாசிகளாகிய அம்மாயப்பெண்கள் உடனே மறைந்தனர். அதுகண்டு தளபதிகள் இருவரும் தங்கள் கண்ணுக்குத் தோன்றி மறைந்தவர்கள் மாயாரூபங்கொண்டுவந்தவர்களென மதித்துப் பிரமித்தார்கள்.

அந்தரவனத்தில் அற்புதமாய்த் தோன்றிக் கனவிலும் கருதாத சோபனவார்த்தைகளை முக்காலமு முணர்ந்தமுனிவர்போல மொழிந்து மாயமாய் மறைந்துபோன மாயாரூபிகளின் அதிசயத்தை அவர்கள் மனத்தராசில் சீர்தூக்கிப் பார்த்துக்கொண்டு நிற்கையில், அரசன் அனுப்பிய தூதர்கள் சிலர் அவர்களிடம் சேர்ந்து, மக்பெத்துக்குக் காடர் பிரபு எனும் பட்டம் சூட்டிய

தாக அறிக்கைசெய்யக் கட்டளை பிறந்தது என்றார்கள். மாயப் பெண்கள் மொழிந்ததற்கேற்பத் தூதர்கள் வந்து அவ்வாறு உரைத்த அற்புதத்தைக் கண்டு வியந்து, மக்பெத் அவர்களுக்கு மறுமொழி இன்னது சொல்வதெனத் தோன்றாது திகைத்து நின்றனன். மாயாரூபிகள் மொழிந்து மறைதற்குமுன், அவர்கள் வாக்குக்களுள் ஒன்று அணுவளவும் தவறாமல் பலித்ததனால் நாளடைவில் ஏனையவும் தவறாது நிறைவேறுமென்று அவன் உள்ளத்தில் உறுதி பிறந்தது. ஸ்காத்திலாந்திற் கிரீடாதிபதி ஆகும் தினம் கிட்டுமென்று எண்ணி, அவன் உள்ளம் பூரிக்க, உடம்பு புளகித்தது.

பின்பு மக்பெத், பங்குவோவை நோக்கி, "சொல்லக் கேளும் இஷ்டரே, எனக்கு மாயப்பெண்கள் மொழிந்த மங்கலவாக்கு உடனே சித்தியான அற்புதத்தை இப்போது பிரத்தியக்ஷமாய்க் கண்டீரே! இனி உம்முடைய மைந்தரும் மன்னராவாரென உமக்கு உறுதியாய்த் தோன்றவில்லையா" என்றனன். இவ்வாய்ப் பிறப்பைக் கேட்ட பங்குவோ, "கேடுகாலம் கிட்டினால், புத்தி சக்தியுள்ளவர்களும் புத்திகெட்டலைவார்கள்; விபரீதத் துறைகளில் துணிவோடு இறங்கித் தப்ப வகையின்றித் தத்தளிப்பார்கள். மாயப்பெண்களின் மொழிகளை உறுதியென்று எண்ண எண்ண, உமக்கு மகுடவர்த்தனராகும் ஆசை மேலும்மேலும் பெருகும். ஏன் வீணான மனோராச்சியம் பண்ணுகிறீர்? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைகொண்டால், அது கிட்டுமா? பாரதூரம் அறிந்து நடப்பவர்க்கு ஒருபொழுதும் அச்சம் இல்லை; தீங்கு விளையாது. எந்நாளும் அவியாதெரியும் நரகில் வீழ்த்த இதம்போல வுரைக்கும் இயற்கையுள்ள தூதராகிய மாயப்பெண்கள் உமக்கு அற்ப விஷயத்தில் சித்திகாட்டியது உம்மை ஈடேற்றுவதற்கல்ல; இறங்காத்துறையில் இறக்கிப் படுகுழியில் வீழ்த்துதற்கேயாம். உள்ளதை உறுவதைச் சொன்னேன்; உம்மிடத்தில் ஏதேனும் கிரகித்துக்கொள்ளவாயினும், உமது மனதிற்கு அகிதமான வார்த்தை சொல்லி, உம்மை வெயிலிற்பட்ட புழுப்போல் வருத்தி வேடிக்கை பார்க்கவாயினும், நான் இவ்வாறு சொல்லத் தலைப் பட்டதாக நீர் எள்ளளவு மெண்ணவேண்டாம்; கைப்பொருள்

காணக் கண்ணுடி வேண்டுவதேன்? நீர் பக்திசிரத்தையாய் வழிபடும் குரு உமது எதிரில் வந்து நின்று சொல்லும் மந்திரமென்று இதைச் சிந்தையில் இருத்திக்கொள்ளும்'' என மறுமொழி கூறினன்.

மோசத்திற்கு முதற்பாதமாகிய மாயப்பெண்கள் சொன்ன கபடமொழியைச் சதமெனவெண்ணிச் சிங்காதனத்தின்மேற் சிந்தை செலுத்தி, உடுப்பது உண்பது மறந்து, சிந்தை வெந்து நைந்துருகிய மக்பெத்துக்குப் பங்குவோ சொல்லிய அருமருந்தன்ன நீதிமொழி நாராசம் காய்ச்சி நடுச்செவியில் நுழைத்ததுபோலிருந்தது.

மாயாரூபிகள் மனம் களிகூரத்தக்க சொற்கள் சொல்லியதும், அவற்றில் ஒன்று விரைவில் பலித்ததுமாகிய நற்செய்தியை, மக்பெத், வீடு சேர்ந்தவுடன், மனைவிக்குத் தெரிவித்தான். அவள் சூதும் வாதும் குடிகொண்ட மனதுடையவள்; பூனைபோல் இருந்து புலிபோலப் பாயும் இயற்கையுள்ளவள்; ஸ்காத்திலாந்து இராஜ குடும்பத்திற்கு ஒரு நீலி. எவர் குடியைக் கெடுத்தாயினும், எவ்வகைப் பொல்லாங்கிழைத்தாயினும், தன் நாயகனுக்குப் பட்டம் கட்டித் தானும் அவனும் பெருவாழ்வு வாழவேண்டுமென விருப்பங்கொண்டிருந்தவள். ஆதலின் மக்பெத் மொழிந்ததைக் கேட்டபோது அவள் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென வெண்ணி, மிகவும் மனமகிழ்ந்தனள். மக்பெத், பட்டந்தரித்துச் சிங்காதனத்தில் வீற்றிருக்க விருப்பங்கொண்டவனேயாயினும், உயிர்க்கொலை புரிந்தல்லது அக்காரியம் கைகூடாதெனத் தெரிந்து, அப்பழிக்கு ஆளாதற்கஞ்சி, அதற்குத் துணியாதிருந்தனன். மக்பெத்தின் மனையாட்டியோ, பழிபாவத்துக்கு அஞ்சாதவளாதலின், எந்த விதமும் முந்த அரசனைக் கொன்றாலன்றி மாயாரூபிகள் வாக்குப் பலிப்பது அசாத்தியமென்று தெரிந்து, தான் செய்யும் சர்ப்பனைக்குத் தடையின்றி உடன்படத் தன் கணவனைப் பலவாறு தூண்டினள்.

இங்ஙனமிருக்கையில், இராஜ்யத்தில் உள்ள பட்டவர்த்தனர் முதலிய மகா பிரபுக்கள் வீட்டுக்கு அப்பொழுதப்பொழுது இராஜ பரிவாரத்துடன் சென்று விருந்துண்டு வருகிற வழக்கப்படி, ஒரு

நாள் அரசன், மால்கம் டோனல்பேன் என்னும் புதல்வரிருவரோடும், பிரபுக்கள் முதலிய பரிஜனங்களோடும், மக்பெத் வீட்டுக்கு விருந்தாகச் சென்றனன். அங்ஙனமவன் சென்றது, பகைஞரை முறியடித்து வெற்றிவீரனாகத் திரும்பிய மக்பெத்தளபதியை முக்கியமாய் நல்வரவு விசாரித்துப் பெருமைப்படுத்துவதற்கேயாம்.

மக்பெத்தின் மாளிகை வாழ்வதற்கு வசதியானவிடத்தில் அமைந்திருந்தது. அவ்விடம் நிலவளம், நீர்வளம், முதலியவை குறைவற அமைந்து இளங்காற்று இனிமையாக வீசும். அவ்வலங்கார மாளிகையின் அணைசுவர், கபோதகம், குறடு, திரணை முதலிய விடங்களில் வளமான சந்துபொந்து பார்த்துத் தூக்கணாங் குருவிகள் கூடுகட்டிச் சுகித்திருப்பதே அதற்குச் சான்று. காற்று நலம் இல்லாத இடங்களில் அந்தச்சாதிக் குருவிகள் வசிப்பதில்லை. அந்தச் சிங்காரமாளிகையிற் சேர்ந்து, அதன் அமைப்பையும் அழகையும் கண்டு மனமகிழ்ந்த அரசன், சிரித்த முகமும், செவிக்கினிய மொழியும், கடுவிஷம் கக்கும் கடூரநெஞ்சுமுள்ள மக்பெத் பெருமாட்டி செய்த ஒப்பாசாரங்களால் ஆனந்தபரவசனாயினன். அம்மாதுக்கு அடிநாக்கு நஞ்சும் நுனிநாக்கு அமுதமுமல்லவா.

அரசன் வழிப்பிரயாணத்தால் இளைப்புற்றவனாதலின், விரைந்து விருந்துண்டு வார்த்தையாடி, மிருதுவான பஞ்சணைமெத்தை இட்ட தங்கக்கட்டிலில் பள்ளிகொள்ளப் போனான். போகுமுன், அம்மாளிகையிற் பெற்ற அதிசயமான உபசரணைகளைக் கண்டு களிகூர்ந்து, பிரதான உத்தியோகஸ்தர்களுக்கு அவரவர்க்கேற்றபடி பரிசு கொடுத்தனன். அன்றியும், அவன் மக்பெத் பிரபுவின் மனையாளை மகிழ்வுடன் கொண்டாடி அவளுக்குப் பட்டை தீர்ந்த வைரக்கல்லிழைத்த விலையுயர்ந்த பதக்கம் ஒன்று பரிசு கொடுத்தனன். வழக்கப்படி அரசனது பள்ளியறைக்குள் பணிசெய்யும் ஆட்கள் இருவர் படுத்திருந்தனர்.

அரசன் அயர்ந்து தூங்கிவிட்டான். அர்த்தராத்திரியாகியது. கோனும் கொலைபாதகருமன்றி, மற்ற மானிடர்கள் மிருகங்கள் முதலிய யாவரும் மெய்ம்மறந்து நித்திரைசெய்தனர், சிலர் பயங்கரமான கனவுகண்டு நாக்குளறி நடுநடுங்க, உலகமெங்கும் நிச்சப்

தமாயிருந்தது. அந்த அர்த்தராத்திரியில், மக்பெத்தின் மனையாட்டி அரசனைக் கொல்லுதலாகிய கொடுந்தொழில்புரிய விழித்தெழுந்தனள். அரசு செலுத்திப் பேராண்மையும் பெருந்தகைமையுமுள்ள வள்ளலென்று எவரும் போற்ற வாழவேண்டுமென்னும் பேரவா மக்பெத்துக்கு மிகுதியுமுண்டெனினும், அகத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகச் செய்யும் துர்க்குணமும், அடுத்திருந்து கழுத்தறுக்கும் நயவஞ்சகமும் அவனிடத்தில் லவலேசமும் இல்லை. அவன் இளகிய நெஞ்சமும் தயைதாக்ஷிணியமு முள்ளவன்; பழிக்கு அஞ்சும் இயல்புடையவன். இந்த இயற்கையைத் திட்டமாய் அறிந்தவளாதலின், அவன் மனைவி தன் முயற்சியின்றிச் சர்ப்பனை சரிவர நடந்தேறாதென்று, தானே அவனைத் தூண்டிவிடத் தலைப்பட்டாள். வரம்புகடந்த பேராசையுள்ளவர்கள் நாள் ஏற ஏற அவ்வாசை எனும் பேயின் வசப்பட்டு எவ்வகை அக்கிரமத்திற்கும் முந்தி நிற்பராயினும், அவ்வாசை மக்பெத்துக்கு இன்னும் முதிராததனால், அவன் பழிக்கு எளிதில் ஆளாகானென்று அவள் அறிந்தனள். துன்புறுவோர்க்கு இரங்கி உருகுவதும், பிறர் உயிர்க்குத் தீங்கு செய்யப் பின்னிடுவதும், தன் கணவன் சுபாவமென்றும், அவனை நம்பிவிட்டால் நினைத்த கருமம் நிறைவேறாதென்றும் எண்ணி, மக்பெத்தின் மனையாட்டி தானே கட்டாரி கைக்கொண்டு, இராஜேந்திரனாகிய டங்கன் படுத்திருந்த பள்ளியறைக்குள் துணிவுடன் சென்றனள். அப்பள்ளியறைக்குள் படுத்திருந்த காவற்சேவகர் இருவருக்கும், அந்தச் சூது குடிகொண்ட மனதுடையாள், முன்னதாகவே மயக்கமுண்டாக மிகுதியாய் மதுபானம் செய்வித்திருந்தபடியால், அவர்கள், தங்கள் சேவகத்தை முற்றும் மறந்தவர்களாய்க், குறட்டைவிட்டு மெய்ம்மறந்து தூங்கினார்கள். இந்தக் காரணத்தினாலேயே மக்பெத்தின் மனையாட்டிக்கு அப்பொழுது பேராண்மையுள்ள போர்வீரனுக்குரிய பராக்கிரமம் உண்டாகியது. அவள் கிட்டியபொழுது, பகற் பிரயாணத்தால் இளைப்புற்றது பற்றி, அரசன் ஒரு சிந்தையுமின்றி அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தான். மக்பெத்தின் மனையாட்டி மன்னவன் முகத்தைச் சிந்தைசிதறாமல் உற்றுப்பார்த்து, அது ஒருவாறு தன் தந்தை முகத்தைப் போன்றதென்று கண்ட

னள். கண்டவுடன், நெஞ்சிற் கொண்ட கொலைக்கருத்தை மறந்து கைசோர்ந்து மெய்நடுங்க, சென்றவழியே திரும்பித் தன் நாயகனைக் கண்டு பேசினாள்.

அவள் சொற்கேட்டு, அவன் சித்தம் சலித்தது. இருவரும் மனம்பொருந்திச் செய்யக் கருதிய படுகொலைத்தொழிலை எவ்வாற்றானும் செய்யலாகாதெனை அச்சமயத்தில் அவன் உள்ளத்தில் உறுதியான சில நியாயங்கள் தோன்றின. அவையாவன:—நாட்டுக்குடிகள் நாலாயிரம் பேர்களில் நாமும் ஒருவரென்பதல்ல; அரசனுக்கு உதிர சம்பந்தமுள்ள நெருங்கிய சுற்றத்தவர்; அன்றியும், இன்று நாம் இந்த முறைமையுள்ள இராஜனுக்கு மனமகிழ்ந்து முகமலர்ந்து சம்பிரமமாக விருந்துசெய்தோம். விபரீத புத்தியால் சோற்றில் நஞ்சிடும் துரோகிகள் சேரும் கதியை நாமே வலியத் தேடிக் கொள்வது தகுதியன்று; அதிதியின் உயிரைக் கன்னமிட வரும் சண்டாளனை அஞ்சாமல் தடை செய்வதல்லவோ அன்னமிட்டோன் அனுசரிக்க வேண்டிய கடமை. அன்னமிட்டு உபசரித்துத் தூங்குவித்து, தலைகொய்யக் கத்தியைக் கைக்கொள்ளும் தகாத தீவினை எட்டுணையும் தெய்வம் சகிக்கத்தக்கதன்று. மேலும், இவ்வரசன் என்ன, சாமானியனா? சத்துருக்களை அச்சுறுத்திக் கீழ்ப்படுத்தும் அற்புதமான ஆண்மையுள்ளவன்; தன் நிலத்தில் வாழும் குடிகளின் உயிரையும் உரிமைகளையும் தன்னுடையனவே போலப் பாவித்துப் பாதுகாக்கும் மாட்சிமையுள்ளவன்; குலத்திலும் குணத்திலும் சிறந்த பட்டவர்த்தனர் முதலிய பிரபுக்களைப் பக்ஷமாய் அணைத்து ஆதரிப்பவன்; எனக்கு மிக்க மரியாதைசெய்பவன்; அருளுக்கு இருப்பிடம்; அறத்திற்கு வேலி; நீதிக்கு வரம்பு; சிறியோர் பெரியோர் அனைவரும் புகழும் குணநிதி. இத்தகைமையுள்ள இராஜோத்தமர்களுக்கு அடியார்க்கடியனாகிய கடவுள் முக்கியமாய்த் துணை நிற்பார். அன்றியும், கெடுமதி குடிகொள்ளும் வஞ்சநெஞ்சுள்ள படுபாதகன் எவனாவது இவ்வகை அரசனை வதைசெய்தால், அந்த இராஜத்துரோகியைத் தப்பவொட்டாமல் பழிதீர்க்கப் பிரஜைகள் கங்கணங்கட்டி நிற்பார்கள். அல்லாமலும், அரசன் என்னிடத்தில் அன்புவைத்து எனக்குப் பலவாறு சலிகை தந்தி

ருப்பது அறிந்த அகில ஜனங்களாலும் எனக்குப் பலவிதமான பெருமைகளும் கிடைத்திருக்க, உயிர்க்கொலையாகிய இத்தீச்செயல் செய்து அப்பெருமைகளனைத்தையும் பாழாக்கிக்கொள்வது பேதைமையல்லவா என்பவைகளாம்.

இவ்வகையான சிந்தனைகளால் அவனது நெஞ்சம் என்னும் கருங்கல் நெகிழ்ந்துருகியது; கொலைபுரியுமாறு தான் செய்த பிரதிக்கினையைத் தகாதெனை அவன் ஒழித்துவிட நினைத்தான். ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம்போல் விசையடங்கி அவன் மனம் ஒடுங்கியது. அதனால் அவன் தன் மனையாளை நோக்கி, இக்கொலைபாதகம் நமக்கு வேண்டாம்; உற்றாரை ஈடழிக்கும் கெடுநினைவு நிமிஷமேனும் நெஞ்சிற் குடிகொள்ள விடுவது இவ்வையகத்தில் உய்ய வாஞ்சை வைத்திருக்கும் குடும்பத்திற்கு அடாதென்று பலவாறு போதித்தான். ஏது சொல்லியும் அவள் மனம் சிறிதும் உருகவில்லை. அப்படிபாதகி பிடித்த விரதம் முடிப்பதே கருமமென்று கங்கணம் கட்டினாள். வன்னெஞ்சோ, இரங்காத மரநெஞ்சோ, இரும்புநெஞ்சோ, வைரக்கன்னெஞ்சோ, அவளுள்ளம் யாதோ யாமறியோம். உடலும் உள்ளமும் மெலிந்திருப்பதுபற்றி மெல்லியல் எனப் பெண்ணுக்கு வழங்கும் பெயர் இந்நீலிக்கு முற்றும் மாறானது. அவள் இராக்ஷசத்தன்மையுள்ள தன் மனதின் கொடுமைகளனைத்தையும் சமயோசித வசனங்களால் கணவனுக்குச் செவிவழியாய்ப் புகட்டினாள்; நினைத்த கருமம் முடிக்கும் துணிவின்றிப் பின்னிடைந்துபோவது ஆண்மைக்கும் சித்திக்கும் பின்னமென்று, அம்புமேல் அம்பு எய்து உதிரம்வடிய நெஞ்சைத் தொளைப்பதுபோல், அவனுள்ளத்தில் வெட்கம் பிறக்க ஆய்ந்து பல நியாயம் அடுக்கிச் சொல்லினாள். அவள் சொன்னதாவது:—“எனது உயிர்க்குயிரான ஆசைமணாளரே, கேளும்; ஆடிய கறங்குபோல் உழல்கின்ற சிந்தையை அடக்கினால் நொடிப்பொழுதில் நீர் நினைத்த கருமம் முடிப்பது எளிது. சமயம் முந்துமுன் இன்றிரவு சிந்தித்தவாறு கலங்காமற் செய்வீரானால் காரியம் சிதறாது, உள்ளநாள் உள்ளமட்டும் உலகத்தை ஆண்டு ஓங்குபுகழ் பெற்று இராஜசேகரனாக வாழ்ந்திருக்கலாம். நினைவு நீர் கலங்கினால் நிற்குமோ பூமி! எதிர்த்த

போரில் முன்பின் எண்ணமின்றி, மாற்றரசரைக் கருவறுத்துப் பகை முடிக்கும் இரணசூரராகிய உமது மனம் இங்குச் சலிப்பது என்ன விபரீதம்! டங்கன் மன்னனைப் பிராணவதைசெய்ய நீர் பிரதிக்கினை செய்தபடி பெண்பேதையாகிய நான் கொலைபுரியச் சபதம் செய்திருப்பேனாகில், பரிவாகப் பெற்றெடுத்துப் பால் ஊட்டி வளர்த்த பாலகனாயினும், பெற்ற உரிமையைச் சற்று மெண்ணாமல், மூளைசிதற ஒரு வீச்சில் விசையாகத் தரையில் வீசிச் சபதம் முடிப்பேன். ஒரு பெண்ணுக்கு உள்ள துணிவு இரதகஜதுரகபதாதிகளை அணிவகுத்து அருஞ்சமர் புரியும் ஆண்மையுள்ள தளபதியாகிய உமக்கு இல்லையா? அரசனைக் கொன்ற பழி உம்மைச் சுற்றிக் கொள்ளுமென்று அஞ்சுவதற்கும் சிறிதேனும் நிமித்தம் இல்லை; நீர் அரசனைக் கொன்று, அவன் பள்ளியறையில் மது உண்டு மதிமயங்கி மெய்ம்மறந்து கிடக்கும் காவற்சேவகர்மீது கொலைக்குற்றம் சாற்றினால், யுத்திபுத்தியுள்ள எவரும் உள்ளதென்று அதனை ஒப்புக் கொள்ளாதிரார்கள். இனி நீர் இப்படிச் செய்யத் தடையென்ன? இதிற் பிரமாதம் என்ன? எழுந்திரும், நாழிகையாகின்றது. நித்திரையுங் கெட்டு, நினைத்த காரியத்தின் சித்தியுமற்று, வீணிற் காலம் போக்குவானேன்?" என்பதாம். இவ்வாறு அந்தக் காதகி தன் நாவலியால் நன்னெஞ்சைக் கன்னெஞ்சாக்கி, மக்பெத்துக்கு வீராவேசத்தை மூட்டவும், அவன் பின்னும் ஒரு முறை மூர்க்கங்கொண்டவனாகி, குரூரவதை செய்யச் சிந்தைகூர்ந்தனன்.

பின்பு மக்பெத், கட்டாரி கைக்கொண்டு, அரவம் கேளாவண்ணம் அடிமேல் அடிவைத்து இருளில் நடந்து, டங்கனது சயன மண்டபத்திற்குச் சென்றனன். செல்லு மார்க்கத்தில் அந்தரத்தில் ஒரு கட்டாரி அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. அதன் கைப்பிடி அவன் முகத்திற்கு எதிராகத் திரும்பியிருந்தது. கட்டாரி அலகினின்றும் முனையினின்றும் உதிரம் துளித்துளியாய் ஒழுகியது. அவன் அதைப் பிடிக்கத் தாவினான். கைக்கு ஒன்றும் அகப்படவில்லை; சுத்த சூனியமாயிருந்தது. கண்டது கட்டாரியே அல்ல, கேவல மாயாரூபம். அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்தானே.

அக்காட்சியைக் கண்டு அவன் அச்சமுறாதவனாகி அப்பொழுதே அமளியறையிற் புகுந்து, கட்டாரியால் அரசனை ஒரேகுத்தாய்க் குத்திக் கொன்றான். அவன் இச்சதிக் கொலைபுரியவும், அங்குத் துயின்ற காவலாளர் இருவரில் ஒருவன் அயர்ந்த நித்திரையில் கனவுகண்டு கெக்கலிகொட்டி நகைக்க, மற்றவன் நெட்டுயிர்த்துத் தட்டழிந்து உளறுவான்போல் "படுகொலை" என நெடுங்குரல் பாய்ச்சிக் கூவினான். அவ்வளவில் இருவரும் விழித்தெழுந்து, இடையறாது எங்கும் நிறைந்து யாவர்க்கும் அவரவர் இருவினைக்குரிய பயனை ஊட்டும் பரம்பொருளை இதயத்திலுன்னி நன்மையுண்டாகுகவென்று சுருக்கமாய்ப் பிரார்த்தித்தார்கள். அவர்களுள் ஒருவன் "இறைவனே, அருள்சுரந்து அடியோங்கள்மீது இரங்கும்" எனப் பிரார்த்திக்க, மற்றவன் "ததாஸ்து" என்றனன். இவ்வாறு சுருங்கப் பிரார்த்தித்து, மீண்டும் அவர்கள் துயில் கொண்டனர். அவர்கள் பிரார்த்தனையைச் செவி சாய்த்துச் சிந்தை செலுத்திக் கேட்ட மக்பெத் தானும் அவருடன் மனம் வாக்கு ஒத்து "ததாஸ்து, கடவுள் நம்மைக் காத்தருள்வாராக" என்று உரைக்க உன்னினான்; ஆயினும் அம்மொழி அவன் கண்டத்தினின்று வெளிப்படாது கண்டத்திற் சிக்கிக்கொண்டது.

மீண்டும் அவனுக்கு ஓராகாசவாணி கேட்டது. அதாவது:— "இனி நித்திரை செய்யாதிருங்கள். பாவம்பழி அறியாததும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததுமான நித்திரையை, மக்பெத் வதைக்கிறான். இனி நித்திரைசெய்யாதிருங்கள். க்ளாமிஸ் நித்திரையை வதைத்திட்டான். அதனால், காடர் இனி நித்திரை செய்யான். மக்பெத் நித்திரைசெய்யான்." என்பதாம்.

இவ்வசரீரி வாக்குக் கேட்டு உள்ளம் பதற, மெய் உதற, உரோமம் சிலிர்க்க, மக்பெத் மனைவியினிடம் சென்றனன். அவன் வாய்மொழி கேட்டு மனம் களிகூர நினைந்திருந்த அம்மாது அவன் தடுமாற்றத்தையும் தளர்ச்சியையும் கண்டு, சிந்தித்த கருமம் எவ்வாறோ சித்திக்கவில்லையென வெண்ணி, ஆண்பிள்ளையாக உலகத்தில் உடம்பெடுத்தும், போர்முகத்தில் புருஷசிங்கமென்று பூபதியால் புகழப்பெற்றும், சமயத்தில் மனவுறுதி அழிவது அழகல்லவேயென்று கணவனைப் பழித்தனள். பின்பு கையிற்பட்ட உதி

ரக்கறையைக் கழுவித் துடைத்துவரக் கணவனை அனுப்பிவிட்டு, அவள் கட்டாரியை எடுத்துக்கொண்டுபோய்க் காவலாளர்களுக்கு அருகில் வைத்து, இருவர் முகத்திலும் இரத்தம் தொட்டுத் தடவி விட்டுத் திரும்பித் தன் அறை வந்துசேர்ந்தனள்.

நள்ளிருட்பொழுது கழிந்து காலைப்பொழுதாகிக் கிழக்கு வெளுத்தது; உடனே நடந்த கொலையும் வெளியாகியது. புலையர்க்குரிய படுகொலைத்தொழிலை மறைத்துவைக்க முடியாதல்லவா? காவற்சேவகர் பக்கத்தில் உதிரம்படிந்த கட்டாரி கண்கூடாத் துலங்குவதும், அவர் முகத்தில் செங்குருதி புரண்டு முடை வீசுவதுமாகிய இவ்விரு குறிகளும் அவர்களே சாமித்துரோகம் செய்த சண்டாளரெனக் கண்டவர்கள் எளிதில் நம்பத்தக்க பெரிய சாதனங்களாயிருந்தன; அன்றியும், மக்பெத்தும் அவன் மனையாட்டியும் மனம் பதைத்து வருந்தி ஆருத்துயரில் ஆழ்ந்தவர்போல மாயம் செய்தார்கள். ஆயினும் அனைவர்க்கும் மக்பெத்தினிடத்திலேயே மிகுந்த சந்தேகமுண்டாகியது.

“டங்கன் வேந்தன் பெற்ற பெருஞ்செல்வத்தை இச்சித்து மக்பெத் அவனை வதைத்தால் வதைத்திருக்கலாமேயன்றி, ஊர் பெயர் இல்லாத மதிகெட்ட பஞ்சைகளாகிய காவலாளர் அவனை ஒருபோதும் கொன்றிரார்கள். அன்னமிட்டு அன்புடன் தம்மை அளிக்கும் அரசனை அன்னிய கிரகத்தில் அதிதியாயிருக்கும் சமயத்தில், அவர்கள் வஞ்சித்துக் கொல்ல நிமித்தமென்ன? அரசனைக் கொன்று அதனால் அவர்கள் பெறும் பயன் யாது? ஆதலின் மக்பெத்தே கொலை புரிந்திருக்கவேண்டும்” என அவர்கள் துணிந்தனர்.

மக்பெத் அதிதிபூசைசெய்து ஆசையோடு அளவளாவுவான் போல மாயநட்புக் காட்டி அர்த்தராத்திரியில், மன்னனைக் கொலை புரிந்தது தெரிந்து, அம்மன்னன் பெற்ற செல்வப் புதல்வர் இருவரும் தந்தைக்கு உற்ற துன்பத்திற்காகத் துயருழந்து, அசதியில் அநாதைகளானோமெனத் தமது தலைவிதியை நொந்து, இனி இங்கிருந்தால் தமக்கும் இதுவே கதியாகுமென்றஞ்சி, மூத்தமகனாகிய மால்கம் அங்கிலேய அரண்மனைக்கும், இளையோனாகிய டோனல்பேன் அயர்லாந்திற்கும் அடைக்கலம் தேடி விரைந்தோடித் தப்பினார்கள்.

பட்டத்திற்குரியவர்களான இளவரசர்கள் இவ்வாறு அரசுரிமை கைவிட்டுத் தேசாந்தரம் சென்றதனால், அதற்கு அடுத்த பாத்தியஸ்தனாகிய மக்பெத் தானே அரசனென விளம்பரஞ்செய்து சிங்காதனமேறி, மாயப்பெண்கள் முன்னறிந்து மொழிந்தது தவறாமல் பலித்ததென மகிழ்ச்சி கூர்ந்திருந்தனன்.

எண்ணுதற்கரிய இராஜவைபவங்களை இச்சித்தவாறு எளிதிற் பெற்று ஏற்றமாக வாழ்ந்திருக்கையிலும், மக்பெத்திற்குப்பின் முடிதாங்குமன்னர் அவன் சந்ததியாரல்ல, பங்குவோவின் சந்ததியாரென முன் மாயப்பெண்கள் மொழிந்தவாக்கு மக்பெத், அவன் மனைவி இந்த இருவர் இதயத்திலும் சிலையில் எழுத்துப்போல் அழியாதிருந்தது. அதனால், "நமது சந்ததியிலேயே நீடித்திருக்குமென நினைத்து அதிதியைக் கொலைசெய்து பெற்ற அரும்பொருளாகிய அரசச் செல்வத்தை அநியாயமாய் அந்நியர் கைக்கொண்டு போக விருக்கின்றனரே; நாம் செய்த முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்றே; பிற்காலத்தில் பங்குவோவின் புத்திர பௌத்திராதிகள் பெருமைபெற்றுப் பூமியாள்வதற்காகவோ நாம் இத்தனை பாடுபட்டுப் பழிக்கஞ்சாது படுகொலை புரிந்தது! ஏற விட்டு ஏணியை வாங்கும் வண்ணம், தெய்வம் எங்களை ஏமாற்ற விருக்கின்றதே; குறுநிலமன்னர் அடிபணியக் குவலயத்தை ஆளுமெனக் குதூகலத்துடன் கருதப்பட்டிருந்த எங்கள் குலம் கீழோராகிய அந்நியர்க்குக் கொத்தடிமை செய்வது முறையோ!" என்று மக்பெத்தும் அவன் மனைவியும் மனம்நொந்து மதிமயங்கிச் சோகமுற்று விழுந்து அலறி, பின் ஒருவாறு தடுமாற்றம் நீங்கி எழுந்து, ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டு பங்குவோவின் சந்ததியைச் சுட்டி மாயப்பெண்கள் மொழிந்ததைத் தவிர்க்குமாறு, அவனையும் அவன் மைந்தனையும் தந்திரமாக வரவழைத்து வதை செய்யச் சங்கற்பித்தனர்.

இதன்பொருட்டு அவர்கள் அமிதமாகப் பணச்செலவிட்டு மிக்க சம்பிரமத்துடன் விருந்துசெய்யக் கருதி, குலமக்களாகிய துணை மக்கள் அனைவர்க்கும் ஓலை போக்கி, அவ்விருந்திற்கு வரவழைத்தனர். அவ்விருந்தினர் பலருள் மிக்க மரியாதையுடன் வருந்தி அழைக்கப்பட்டவர்கள் பங்குவோவும், அவன் மைந்தன்

ப்லீயன்சுமாம். பங்குவோ விருந்துண்ண அரண்மனைக்கு இர வில் புறப்பட்டு வரும்பொழுது, மக்பெத் இடைவழியில் கொலை ஞரை வைத்து அவனை வதைசெய்வித்தான். அதுதெரிந்து அவன் மகன் ப்லீயன்சு தந்தைக்கு வந்துற்ற பிராணகண்டம் தனக்கும் வருமெனத் தெரிந்து அவர்கள் கையிலகப்படாது தப்பியோடி ஒளித்துப் பிழைத்தனன். பின்னர் அவனது சந்ததியாரே பரம் பரையாக ஸ்காத்திலாந்தில் அரசுபுரியலாயினர். அந்த வமிசத்தில் கடைசியானவன் ஆறாவது ஜேம்ஸ் என்னும் மன்னவன். அவன் அரசாளும் நாளில் ஸ்காத்திலாந்தும் இங்கிலாந்தும் ஒருகுடைக் கீழ்ப்பட்டு ஒருங்கிணைந்தன. அவ்வரசனுக்கு இங்கிலாந்தின் முத லாவது ஜேம்ஸ் என மற்றொரு பட்டப்பெயரும் வழங்கும்.

விருந்திடுஞ் சபையில் மக்பெத்பிரபுவின் மனையாட்டி விருந் தினரைக் கண்டு முகமலர்ந்து இன்சொற் சொல்லி ஏற்கும் உபசா ரங்கள் பலவும் செய்து அனைவரையும் உவப்புறுவித்தனள். மக் பெத் பிரபுவும் அவர்களுடன் கலந்துறவாடி, தனக்குப் பிராண பதமான பங்குவோ அங்கில்லாத குறையை எண்ணி எண்ணி, மனம் நொந்து வருந்துவான்போல் பொய்த்துயர் காட்டி, "கன மிக்க துரைமக்களே, இந்நாட்டில் வித்தையும், விநயமும், புகழும், பூச்சியதையுமுள்ளவர்களென்று வியக்கத்தகும் இத்தனை பெயரும் எனது மாளிகையில் இந்தச் சுபதினத்தில் விருந்துண்டு மகிழ்ந்து இனிதிருக்கின்றனராயினும், என் பிராணனுக்குப் பிராணனுன பங்குவோ வராதது ஒரு பெருங் குறையாயிருக்கின்றது; அவர் இச்சபைக்கு வருவாரென்று நான் இதுவரையும் வழிபார்த்திருந் தேன்; இன்னம் வரக் காணேன். அவர் என்னைச் சாதாரண மாய் எண்ணி, என் சொல்லை அவமதித்து வாராதிருப்பராயின் அது பெரிதல்ல; அவருக்கு ஏதேனும் விபத்து நேர்ந்ததாக என் செவிக்குச் செய்தி எட்டுமாயின் அப்பொழுது யான் என் செய் வேன்! பிரபுக்களே, இந்தச் சோகம் தெளிய என்னைத் தேற்று வார் யார்?" என்று கவலைக் கடலில் மூழ்கினவன்போல நடனஞ் செய்து நாக்குளறினன். இச்சொல் அவன் வாக்கினின்று வெளி வருமுன்னமே, இடைவழியில் அவன் இரண்டகமாய் ஆள்வைத் துப் படுகொலை புரிவித்த பங்குவோவின் ஆவி அம்மண்டபத்தில்

தோன்றி, மக்பெத்திற்கு இட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தது. மக்பெத்தோ சாமானியனல்லன்; மலை பெயர்ந்து நிலை பெயரினும், தன் மனநிலை தளராத தீரன்; அசநியில் வேதாளம் எதிர்ப்படினும், அஞ்சி அதிர்ந்து புறங்காட்டாமல், அதை அதட்டி அகற்ற வல்ல சூரன். இத்தன்மையுள்ள அவனும் அச்சமயத்தில் ஆவி தடுமாறினான்; செயல் மறந்து தியக்கங்கொண்டான்; அந்தக் கோர வடிவைக் கண்டு, துடித்துத் துடித்து மனம் விண்டான்; அச்சம் அதிகரித்து உதிரம் சுண்டி, அவன் முகம் கறுத்தது; அவ்வடிவத்தைப் பார்த்த இருவிழியும் இமையாதிருக்க, அவன் பட்டமரம்போல விறைத்து நின்றனன். அவன் மனையாளுக்கும், அங்கிருந்த மற்றப்பிரபுக்களுக்கும் யாதும் புலப்படவில்லை; வெறிதாகிய ஆசனத்தை மக்பெத் இமை கொட்டாமல் உற்றுப்பார்த்தவண்ணமாக நின்றது கண்டு, அவர்கள் அவனை உன்மத்தனென்று எண்ணினார்கள். தலைவி அவனருகே சென்று, "என் பிராணநாதரே, என் கண்ணின் கருவிழியே, என் குடும்பபதியே, டங்கன் மன்னனை வதைசெய்யப் போனபொழுது, வெட்டவெளியில் கட்டாரி கண்டதாகப் பாவித்துப் பதைத்த சித்தப்பிரமை உமக்கு இன்னம் தீரவில்லையோ? கண்டபெயர் நகைக்க, கொண்டபெண் மனந்திகைக்க, உமக்கேன் இந்தப் பேதைமை மேலிட்டது?" என்று அந்தரங்கமாய்க் காதில் ஓதிக் கண்டித்தனள். தோன்றிய ஆவி யின்னுமமறையாது அவன் கண்ணெதிரே நின்றது. மனைவி மொழிந்ததும் பிறர் புகன்றதும் அவன் செவியில் நுழையவில்லை. நடந்த கொடிய அந்தரங்கத்தைக் குறிப்பாக விளக்கிய சொற்களை அவன் பித்தம் கொண்டவன்போல் அவ்வுருவுடன் பிதற்றினான். அறையிற் செய்வித்த கொலைத் தொழிலின் வரலாறு அவன் வாக்குமூலமாய் அம்பலமேறிவிடுமோ என்றஞ்சி, அங்கிருந்த விருந்தினரை அனுப்பிவிடப் பதைத்து, பெருமாட்டி தன் கணவனுக்கு அடிக்கடி இவ்வாறு புத்தி மாறுபடுவது வழக்கமெனப் பொய்ம்மொழி புகல, அவர்கள் பிரிதபித்துச் செலவுபெற்றுச் சென்றனர்.

இவ்வாறு அச்சமுற்றவனுகி மக்பெத் காணுத காட்சிகளெல்லாம் கண்டனன். அன்றிரவில், மக்பெத், அவன் மனையாட்டி,

இவர்கள் இருவரும் அயர்ந்த நித்திரையின்றிப் பயங்கரமான சொப்பனங்கண்டு பதறினார்கள். பங்குவோவைக் கொல்வித்த கொலைப்பழி தங்களைச் சூழுமேயென்பதை நினைந்தல்ல, கொலைஞர் கைக்குத் தப்பிப் பிழைத்திருக்கும் அவன் மைந்தன் ப்லீயன்சும், அவன் சந்ததியாரும் தங்கள் சந்ததியை நடுத்தெருவில் திக்கற்றுத் திரியத் துரத்திவிட்டு, கிலேசமற்று அரசுபுரிய வருவார்களென்பதை நினைந்தே அவர்கள் மிக வருத்தமுற்றனர். அவர்கள் மனம் நிலைகொள்ளாது தாமரை இலையில் தண்ணீர்த் துளி போலத் தளும்பியது. அவ்வேளையில் மக்பெத் சஞ்சலப்படுகின்ற சித்தத்தை ஒருவழிப்படுத்தி, மாயப்பெண்களைத் தேடிக் காணவும், கண்டு இன்னம் ஏதேது பழி வந்து சூழுமோவென்று கேட்டறியவும் வேண்டுமென நிச்சயித்தனன்.

அவ்வண்ணமே மாயப்பெண்களைத் தேடி, மக்பெத் இக்கதை முகத்திற் சொல்லிய சம்பம்புல்வெளியிலிருந்த ஓர் குகைக்குட் சென்றனன். அதற்குமுன்னரே ஞானதிர்ஷ்டியால் அவன் வரவு அறிந்து, அம்மோகினிகள் நாகலோக தேவதைகளிடம் குறிகேட்கவெண்ணித் தமது வல்லமையால் அவர்களைப் பிரத்தியக்ஷமாக வரவழைத்துக் குறிகேட்டனர். அவ்வமயத்தில் மக்பெத் அவர்களருகே போக, அங்கே சூனியகாரர் செய்யும் சில கோரமான செய்கைகளைக் கண்டான்.

மக்பெத்தைத் திரும்பிப்பார்த்து மாயப்பெண்கள், "சந்தேகம் தெளிய உனக்கு உறுவது உரைப்போர் நாங்களா, எங்களை அடிமைகொள்ளும் தேவதைகளா ? உன் இஷ்டம் என்ன ? உள்ளபடி உரை" என வினவ, அவன் தன் கண்ணெதிரில் நடந்த விகாரமான செய்கைகளைக் கண்டு எட்டுணையும் ஏங்கித் திகைக்காமல், "தேவதைகள் எங்கே ? நான் அவர்களைக் கண்டபின்னரே உங்கள் கேள்விக்கு உத்தரம் சொல்வேன்" என மறுமொழிதந்தனன். அதுகேட்டு, மாயப்பெண்கள் ஒதுங்கி நின்ற தேவதைகள் மூவரையும் வரவழைத்தனர். பிரதமதேவதை கவசம் தரித்த சென்னிவடிவாகத் தோன்றி, "மக்பெத்தே! பைவ் பிரபுவை மற்றவர்களைப்போல நம்பத்தக்க இஷ்டனென்று எண்ணி ஏமாறாதே ; எச்சரிக்கையாயிரு" என்று அவனுக்கு நற்புத்தி புகட்டியது.

அதன் வாய்மொழி அபத்தமல்ல, யதார்த்தமே. பைவ் பிரபு எனும் பட்டப்பெயர் வழங்கப்பெற்றவன் மக்டப் என்பவன். அந்த மக்டப்பின்மீது மக்பெத்திற்கு நாட்சென்ற வைரமும், இறப்பினலன்றி மறப்பரிய வெங்கண்ணும் உண்டு. ஆதலின் தன்னை யொருபொருளாக எண்ணித் தன்னுயிரைச் சத்துருவின் கையினின்றும் தப்புவிக்கக் கருணைகூர்ந்து சாக்ஷாத் பரப்பிரமமே பிரசன்னமாகித் திருவாய்மலர்ந்தருளியதுபோலச் சமயத்தில் உயிர்க்குறுதிமொழி உரைத்த தேவதைக்கு மக்பெத் மனம் குளிர வந்தனம் செலுத்தினன்.

அப்பால் மற்றொரு தேவதை உடம்பெங்கும் உதிரமயமான இளம்பிள்ளை வடிவாகத்தோன்றி, "மக்பெத்தே! ஒன்றுகேள், பயப்படாதே; ஐயமுள்ளமட்டும் பயம் இல்லை; மனிதர்களாலுனக்கு அச்சமுண்டாகுமென்று ஒருபொழுதும் எணணுதே; தாய் வயிற்றினின்றுதித்த மானிடன் எவனும் உனக்கு ஊறுசெய்ய வல்லவனல்லன். தறுகணனுகவும், பராக்கிரமமுடையனுகவும், கடைப்பிடியுடையோனுகவும் நட" என்று கூறி, அவனுக்கு அபயம் அளித்தது. தெய்வம் தன்னைக் காப்பதாகக் கைகொடுத்து உரைத்த அபயவாக்கின் உறுதி கேட்டு மக்பெத் மனம் தேறி மக்டப்பைச் சுட்டி, "அப்படியாயின் நீ சுகமே பிழைத்திரு; இனி நான் உனக்கு அஞ்ச நிமித்தம் இல்லை; ஆயினும், உறுதிக்கு உறுதி செய்யும்பொருட்டு, உன்னை நான் பிழைத்திருக்க விடேன்; இது திண்ணமென்று அறி. உன்னை நினைத்து அஞ்சுவது வீணச்சமென நான் உள்ளம் தேறி அனுவளவேனும் கலக்கமுருது அயர்ந்து நித்திரைசெய்வேன்" என்று கூறினன்.

அப்பால் மூன்றாவது தேவதை பொன்முடி தரித்த குழந்தை வடிவெடுத்துப் பாதபம் ஒன்றைச் சிறுகரத்தாற் பற்றிக்கொண்டு வெளிப்பட்டு, மக்பெத்தை நோக்கி, "பிள்ளாய், ஒருவருடைய சதியோசனையால் உனக்குத் துன்பமுண்டாகுமென்றெண்ணி, வருந்தாதே, நீ மயக்கமற்று மனம் தேறு. பர்னம் அரணியம் டன்ஸினேன் மலையடிவாரமட்டும் புடைபெயர்ந்து உன்னோடு எதிர்த்துச் சமர்செய்ய வருமளவும், ஒருபொழுதும் உனக்கு அபஜயம் இல்லை" என்று அச்சம் அகல இனிய வார்த்தை கூறியது. அவ்

வாய்மொழியைக் கேட்டவுடன் மக்பெத் "ஹாஹா! என்போல் இவ்வுலகில் இன்பம் யாவர் பெற்ருர்! தரையில் உறுதியாய் நிற்கும் அரணியத்தை வேரறப் பெயர்த்து, இங்கென்னிடத்திற்குக் கொண்டுவர வல்லவர் எவர்? எனக்கு இனி அவமிருத்து உண்டென்று எண்ணித் துன்புற நிமித்தம் இல்லை. மண்ணுலகில் மானிடர்க்கு விதித்த வாழ்நாள் இறுதிவரையில் யான் வாட்டமற்றிருப்பேன். ஆயினும், ஒன்று அறிய என் உள்ளம் பதைக்கின்றது. பங்குவோவின் சந்ததியார் இந்நிலத்தில் என்றைக்காயினும் அரசு புரிவார்களோ? இஃதொன்றுமாத்திரம் சொல்ல உனக்குச் சாமர்த்தியம் உண்டானல், சொல்லுக" என்று இரந்து கேட்டனன். கேட்கவும் குழலொலி யாழொலியினும் மிக இனிய கீதமொன்று கேட்டது. எட்டுச் சாயைகள் அரசரைப்போல ஒரு நிரையாக மக்பெத்தின் பக்கத்தில் சென்றன. அவைகளைத் தொடர்ந்து பங்குவோ நடந்தனன். அவன் கைக்கொண்ட பளிங்கில் பல மன்னவர்களின் பிரதிபிம்பங்கள் தோன்றின. அங்கமெங்கும் செங்குருதி புரண்ட பங்குவோ மக்பெத்தை நோக்கி நகைத்து, பளிங்கில் விளங்கிய உருக்களைக் காட்டினன். கண்ட உருக்கள் அத்தனையும் தனக்குப்பின் ஸ்காத்லாந்தில் அரசுபுரியும் பங்குவோவின் சந்ததியென மக்பெத் குறிப்பால் அறிந்தனன். அம்மட்டில் மாயப்பெண்கள் ஆடிப் பாடி மக்பெத்தை ஆசையோடு உபசரித்து வந்தனம் சொல்லி மறைந்தனர். அன்றுதொட்டு மக்பெத்தின் மனதில் எப்பொழுதும் அச்சந்தருவனவாகிய மிகக் கொடிய தோற்றங்களே குடிகொள்ளலாயின.

மோகினிகளின் குகையினின்று வெளிப்பட்டுச் சென்றபின், முதலில் மக்பெத்தின் செவியிற்பட்ட செய்தியாவது, இறந்த அரசனது மூத்தமகனும், பட்டத்திற்கு முறைமையான பாத்தியதையுடையவனுமாகிய மால்கம் மக்பெத்தின் முடியைத் தாங்கித் தான் தரிக்கச் சண்டைக்கு யத்தனமாகி இங்கிலாந்தில் சேனைகளைச் சேர்க்கிறனென்பதும், அச்சேனையிற் சேர்ந்து அவனுக்குத் துணை நிற்கப் பைவ் பிரபுவாகிய மக்டப் அங்கு விரைந்து சென்றனென்பதுமேயாம். இச்செய்தி கேட்டு மக்பெத் வினைவலியும் தன்வலியும் தெரியாமற் குதித்துக் கோபமதிகரித்துச் சீறி, மக்டப்பின்

மாடமாளிகைகளைத் தாவி அங்கிருந்த அவனது மனைவி மக்களை வாளால் வீசி வெட்டி வதைத்தனன்; அவன் குடும்பத்தார்க்கே யன்றிக் குலத்தார்க்கும் இதுவே கதியாயிற்று.

செங்கோல் செவ்விதாகச் செலுத்தாத அரசர், தங்கள் கோட்டை கொத்தளங்களைப் பிடிக்க முற்றுகைசெய்யும் சத்துருவை அச்சுறுத்தி ஜயம் பெறுவது அசாத்தியம். பிரஜைகளால் அவர்களுக்குப் பகையுண்டாவதேயன்றி நட்புண்டாவதில்லை. இதற்கு மக்பெத்தையே திர்ஷ்டாந்தமாய்க் கொள்ளலாம். அவன் கூசாமற் செய்த கணக்கற்ற கொடிய கர்மங்களைக் கண்டு, அத்தேசத்துப் பிரபுக்கள் பலரும் அவனை எமனெனப் பாவித்து வெறுத்தனர். அவனைப் பஞ்சாய்ப் பறக்கடித்துப் பாராள இங்கிலாந்தினின்று படையெடுத்துச் செல்லும் மால்கம், மக்டப் என்பவருடன் கட்டாண்மையும் திடகாத்திரமுமுள்ள வீரர்கள் பலர் வழியிடையே போய்ச் சேர்ந்தார்கள். அவனுக்கு அஞ்சி வெளிக்கொள்ளத் துணிவற்று, அவரவர் இருப்பிடத்திருந்த மற்றோர் அந்தப் பாதகன் விரைவில் சமர்க்களத்திற் பட்டானென்பது கேட்டுச் செவிகுளிர மனம் களிகூர்வது எக்காலமெனவெண்ணிப் பதைத்தார்கள். பின்னும் பலர், "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலி வாழுங் காடுநன்றே" என வனம்புகுந்தார்கள். நூதனமாக அவன் சேர்க்கத் தலைப்பட்ட சேனை விரைவிற் சேரவில்லை. இராஜதர்மம் தவறிய அக்கொடியனை உள்ளம் நொந்து வெறுக்காதவர் ஒருவரும் அங்கில்லை. அன்புகூர்ந்து அவனை அபிமானிப்பவரைக் காண்பது அரிதாயிற்று. அவனைக் காணுந்தோறும் குடிகள் இன்னும் இம்மாபாதகன் என்ன வினை செய்வானோ என்று இடியுற்று ஏங்கினார்கள். இவைகளைக் கண்டு, மக்பெத் மதி மயங்கி மனம் கலங்கி, "நித்திரையில் நான் டங்கன் மன்னனைக் கொன்றவண்ணம் எந்தப் புண்ணியவானாயினும் என்னுயிரை மாய்வித்திருப்பானாயின், இப்பொழுது நான் டங்கன் பிரபு பெற்ற உயர்பதவி பெற்றிருப்பேனே; அவர் சமாதியில் அயர்ந்து துயின்று சுகித்திருக்கிறார்; இராஜதுரோகிகளால் நேரிடும் கெடுதி இனி அவர்க்கு இல்லை. கூரியவாள், கூற்றினும் அதிவிரைவில் உயிர்க்கொலை புரியும் கொடுவிஷம், குடிப்பகை, குலப்பகை, பிற

தேசத்து மன்னர் பகை ஆகிய இவைகளும் இனி அவனை வருத்தா'' என்று எண்ணுதலையெல்லாம் எண்ணித் தியங்கினன்.

மக்பெத் இவ்வாறு மனந்தடுமாறி நிற்கையில், அவன் மனையாள் தான் செய்த மாபாதகத்தை நினைத்தும், அதனிமித்தம் ஊர் உலகம் தன்னைத் தூற்றி வெறுத்ததை எண்ணியும் வெந்தழல் அடுத்த வெண்ணெய்போல் உருகி வாடி, புல்லும் பூமியும் உள்ள மட்டும் இந்தப் பொல்லாப் பழி சுமக்கவோ பாவிநான் உடம்பெடுத்தேனென்று புலம்பி, பிழைத்திருக்க ஆற்றாமல் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொண்டனள். மக்பெத் செய்த மாபாதங்களில் உடந்தையாயிருந்தவள் அவள் ஒருத்தியே. தத்தமக்குரிய தர்மங்களைத் தக்கபடி செய்து, பிறர் சுகதுக்கங்களைத் தம்முடையனபோலவே பாவித்து நாள்கழிப்பவர்கள் அச்சமற்று ஐயமற்று ஆவிதடுமாறாமல் அயர்ந்து தூங்கும் அர்த்தராத்திரியில், மக்பெத்தும் அவன் மனைவியும் கோரமான சொப்பனம் கண்டு, குலை குலைந்து நலிவுறுவார்கள். தன் மனம் தீராத வெந்துயருக்கு ஆளாயிருக்குமளவிலும், அந்தப் பெண்ணீலி, தன் துன்பம் மறந்து, கணவனது மனப்புண்ணை ஒருவாறு ஆற்றக் கருதிக் கலக்கமற்று, சவலையைத் தேற்றுகின்ற தாயைப்போல், அவனைத் தேற்றி உறுதி கூறுவாள். இவ்வாறு தாரத்திற்குத் தாரமும், தாய்க்குத் தாயும், மந்திரிக்கு மந்திரியுமாயிருந்த மனைவி மடியவும், மக்பெத் இனம் பிரிந்த மான்போலும் சிறகிழந்த பறவைபோலும் போக்குத்தாக்கற்றுத் தன்னந்தனியனாகித் தன் செயல் மறந்து மனந்தளர்வாயினன்.

பிராணப்பிரியையான பத்தினி பரலோகஞ் சென்றபின் அவன் இவ்வுலகவாழ்க்கையில் விருப்பற்றவனாகி, இனி இப்பொய்யுலகில் அவளைப் பிரிந்திருந்து அல்லற்படுவதிலும் உயிர்விடுவதே உத்தமமென்று எண்ணினன். அவன் இப்படி எண்ணமிட்டிருக்கையில், மால்கம்போர்க்குப்படையெடுத்து முடுகிவருகிறனென்ற செய்தி அவன் செவியில் வெடியதிர்ச்சிபோலத் திடீரெனத் தாக்கியது. மலை சலிப்பினும் மனம் சற்றும் சலியாத மத்தவாரணத்தை ஒத்த மக்பெத், மனைவி மடிந்ததனால் மாற்றானுக்கு இடைந்து, வமிசத்திற்கு என்றும் நீங்காத வசைநாட்ட உடன்படுவானோ?

மாற்றான் படையுடன் கிட்டிய செய்தி எட்டவும், முக்காலேமூன்று வீசமும் அவனைவிட்டு ஒழிந்துபோன தீரம் மீளவும் உண்டாயிற்று. அவன், இறக்க வரினும், மெய்க்கவசம் அணிந்தபடி முனைமுகத்தில் நின்று இறப்பதென்றே பிரதிக்கினை செய்தான். மேலும், மாயப்பெண்களின் உறுதிமொழி பொய்க்காதென்று அவன் மனம் தேறினான். "மானிடரென்று உடம்பெடுத்த எவரும் உன்னை வருத்துவதில்லை; பர்னம் என்னும் அரணியம் நிலைபெயர்ந்து, டன்ஸினேன்வரையில் வருமளவும் உனக்கு அபஜயம் இல்லை" என மாயப்பெண்களின் வாயினின்று பிறந்த சொல்லை அவன் மறந்துவிடவில்லை. அவ்வனம் நிலைவிட்டுப் பெயர்ந்து வருவது அசாத்தியமென்று அவன் உறுதியாக நம்பி யிருந்தனன். ஆனதுகொண்டு மக்பெத்மகிபன் பகைஞர் ஆற்றலால் அழியா வரண்களமைந்த தன் கோட்டையினுள் அச்சமற்றிருந்து, மனக்கடுப்புடன் மால்கம்வரவை எதிர்பார்த்திருந்தனன். அங்கவன் அவ்வாறிருக்கையில், ஒரு நாள் உதிரம் வற்றி, முகம் கருகருகி அடங்காத அச்சத்தால் அங்கம் நடுங்கி, காவற்படைஞரது தலையாரி ஒருவன் விரைந்தோடி வந்து, அரசன் பாதத்தில் தீர்க்கதண்டமாய் விழுந்தெழுந்து இருகையும் கூப்பி நாக்குளற, "வேந்தர் மணிமுடிகள் உரையும் வீரக்கழல் தரித்த வீரர்க்கு வீரனாகிய மக்பெத் அரசே! மாற்றான் படையெடுத்து வருவது காண மலை ஏறி நின்று பர்னம் அரணியத்தைக் கண்ணெடுத்துப்பார்த்தேன்; அவ்வரணியம் புடைபெயர்ந்து வருவதாக என் கண்ணிலும் கருத்திலும் பட்டது. இப்பூவுலகில் எந்நாளும் எவரும் காணாத இந்தப் புதுமையைச் சமூகத்தில் அறிக்கைசெய்யத் தாமதிக்காது ஓடிவந்தேன்" என்றனன். அவன் சொற்கேட்டு மக்பெத், "அடா! படாந்தரம் அடித்துப் பதைப்பு உண்டாக்கத் துணிவுற்று ஓடிவந்த துஷ்டப்பயலே! முழுமகனாகிய மூர்க்கா! உன் சொல்லில் ஓரக்ஷரமாயினும் பொய்த்தால், உன்னைப் பிடித்து, அடுத்து நிற்கும் மரத்தில் கழுத்திறுகாமல் தூக்கிடுவித்து, பிராணன் போந்தனையும் பட்டினிபோட்டு வாட்டி வற்றடிப்பேன்; இது நிசம். உன் சொல் உண்மையானால் நீ தப்பினாய். அப்பால் நீ என்னைத் தூக்கிட்டு வதைப்பினும் ஏனென்று கேளேன்" என மொழிந்தனன். அப்பொழுது மக்பெத் சித்தம் சலிப்பதானான். மாயப்பெண்கள்

இருபொருள்பட மொழிந்த வாக்கு வாஸ்தவமல்லவென்று அவனுக்குச் சந்தேகம் மேற்கொண்டது. பர்னம் என்னும் வனம டன்ஸினேன் மலையடிவாரமட்டும் பெயர்ந்துவரும் அளவும் அபஜயம் இல்லையென மாயப்பெண்கள் உறுதிமொழி சொல்லியிருக்க, அவ்வனம் நிலைபெயர்ந்து வரலுற்றதென்று கேட்டதுபற்றி, அவனுக்கு இவ்வாறு சித்தம சலிக்கலாயிற்று. அப்பொழுது அச்சம் பாராட்டாமல் அவன் "தலையாரி சொல் மெய்யாகுமானால், இனி இங்கிருந்து தப்ப வகை இல்லை; நிலவிற்கு ஒளித்துப் பரதேசம் போவாரும் உண்டோ! எனக்குப் போக்கு எங்கும் இல்லை. யுத்த சன்னத்தனாகி வெளிப்படுவதே கருமம். இனி வருவது வருக. உயிர்வாழ்க்கையில் உள்ளப்பற்றுவிட்டேன். இப்பொழுதே என்னுயிர் ஒழிவதாயினும் உவப்பெய்துவேன்." என்று முற்றுந் துறந்த முனிவர்போலமொழிந்து, ஆயுதபாணியாகப் புறப்பட்டுக் கோட்டைவாயில் கடந்தான். மாற்றானும் தண்டு தளத்துடன் அக்கோட்டைக்கு எதிரில் வந்து நின்றனன்.

அரணியம் நிலைபெயர்ந்து நடந்துவருவதாகச் சேவகன் கூறிய விபரீதத்திற்கு நிமித்தம் யாதெனின்,—மக்பெத்தின் கோட்டையைக் கைக்கொள்வதற்குத் தண்டெடுத்துச் சென்ற தளகர்த்தனாகிய மால்கம் என்றவன் பர்னம் அரணியத்திற் சேர்ந்தபொழுது, தன் படைப்பெருக்கைப் பகைஞர் கண்ணுறுவண்ணம அவ்வனத்திலுள்ள விருக்ஷங்களில் தழைகளையாமல் தலைக்கொரு கொம்பு தறித்து, அவரவர் தலைமறையக் கரத்தில் நிமிரப் பிடித்துச் செல்லும்படி சைந்யங்களுக்குத் திட்டஞ்செய்ய, தளபதி சொற்படி படைவீரர் அனைவரும் தழை செறி கிளை பிடித்து அணிவகுத்துச் சென்ற தோற்றம், எட்டநின்று பார்த்த தலையாரி கண்ணுக்கு வனமே நின்றநிலை பெயர்ந்து கிட்டவருவதுபோலச்சமுறுத்தியதேயாம். இவ்வாறு இரட்டுற மொழிந்த மாயப்பெண்களின் வார்த்தை மக்பெத் எண்ணியதற்கு மாறாக நடந்தேறியது. நடந்தேறவே அவன் மனவுறுதிக்கு ஆதாரவாயிருந்தவற்றுள் ஒன்று அற்றதாயிற்று.

அப்பால் இருதிறத்துச் சேனையும் கைகலந்து மும்முரமாகப் போர் செய்தன. மக்பெத்தின் பக்கலில் அவனுக்குக் கண்போன்ற

நண்பரெனப் பிரியவசனம் சொல்லி நடித்தவர்கள் கொடியனாகிய அவனை நெஞ்சார வெறுத்து, மால்கம், மக்டப் என்னும் எதிரிக ளுடன் சேர்ந்துகொள்ள மனம் கனிந்திருந்தனர். ஆதலின், அவர் கள் உதவி அவனுக்கு அனுகூலிக்கவில்லை. அவர்கள் மனம் இவ் வாறு பேதித்ததனால், காவலர் இல்லாக்கோட்டையை மக்பெத் ஒருவனே பகைஞர் படைக்கு வசப்படாவண்ணம் எவ்வாறு காக் கலாகும்? அவன் அதனால் காரியத்தளவில் கையறுந்தவன்போ லிருந்தனன். இருந்தும், இளைக்காத சூரனாகிய மக்பெத் எதிரிடு வோரை எரிக்கத்தக்க கடுஞ்சினத் தீப்பொறி பறக்க, வீராவேசத் துடன் பாய்ந்து பகைஞர்மேல் கத்திவீசி அவர்களைக் கண்டதுண் டஞ் செய்தான். அவன் கைக்கு அரிதில் தப்பிப் பிழைத்த சைந் யங்கள் சிறிது வழிவிட்டு விலக மக்பெத் மாருதவேகத்துடன் உட்சென்று, மக்டப் மனவலி குன்றாது அடுபோர் செய்யும் இடத் தை யடைந்தனன். அடைந்து, மக்டப்பைக் கண்ணெதிரில் கண் டவுடன், படைமுகத்தஞ்சாத நெஞ்சுறுதியுள்ள மக்பெத், எவரு டனெதிர்ப்பினும், எவரைப்பகைக்கினும், மக்டப்பிற்கு ஒருபொழு தும் எதிர்ப்படவொண்ணாதென மாயப்பெண் ஓதிய வாக்கைக் குருபதேசமாக நினைந்து பின்னிடப் பார்த்தனன். எள்ளிட இட மின்றிச் சேனை அடர்ந்த செருக்களத்தில் அதுவரையில் விழித்த கண் இமைக்காது மனப் பதைப்புத் தீராது மக்பெத்தையே தேடித்திரிந்த மக்டப், கையிழந்த பழம் பொருள் கையிலகப்பட் டதுபோல் அவனை எதிரில் கண்டு, அப்படி யிப்படித் திரும்ப விடாது தடுத்துப் போர்செய்யப் பொருத்தினான். இவ்விருவீர ருக்கும் அதியுக்கிரமாய்ப் போர்விளைந்தது. தன் மனைவி மக்களை மனதிரங்காது மாய்த்ததுபற்றி, மக்டப் என்பவன் மக்பெத்தை வாய்மதம்பேசி வசைசொல்லிப் பங்கப்படுத்தினான். மக்பெத் அவன் குடும்பத்தார் அனேகரைத் துடிக்கப் பதைக்க அடித்துக் கொன்றவனாதலின் போர்முகத்தில் பெயர்ந்து புறங்காட்டி விலக யத்தனித்தனன். ஆனாலும் மக்டப் அவனை விடவில்லை; படுகொடியா, யமகாதகா, எரிநரகிற் கடிநாயே, அட சண் டாளா, என வாய்க்கு வந்தபடி வைது, வெட்கம் பிறக்க வசை பேசிச் சமர்செய்யத் தூண்டினான்.

தூண்டவே, மாதர் வயிற்றிற் பிறந்தோர் எவரும் உன்னை வருத்துவதில்லையென மாயப்பெண் மொழிந்த அபயவாக்கு மக்பெத்திற்கு அப்பொழுது நினைவில் வந்தது. அவன் அதை நினைந்து நினைந்து அகம் களித்து முகம் மலர்ந்து முறுவலித்து, கவிழ்ந்த தலை நிமிர மக்டப்பை ஏற இறங்கப்பார்த்து, "ஏன் பதறிப் பதைத்து வார்த்தைகளை வளர்த்திப் பேசுகிறாய்? நீ என்னைச் சண்டைசெய்து வெல்ல நினைப்பது கத்திவீசி ஆகாயத்தை வெட்டி விழுத்த நினைப்பதுபோலாகும்; உன் கத்தி என் உடலை ஒருபொழுதும் ஊறுசெய்யாது. மந்திரபலம் பெற்ற இந்தக் காயம் மாதர் வயிற்றிற் பிறந்த மனிதரால் மாயாதென்றறி" என்று இடித்துரைத்தனன்.

அது கேட்டு, மக்டப் "மாயப்பெண் மொழிந்த சித்திரப் பேச்சை மெய்யெனக் கொண்டு மதிகெட்டுச் சீரழியத் துடிக்கும் பேதாய்! அந்த மோகினியைக் கண்டு கேட்பாயானால், பத்து மாதமும் நிறைவதற்கு முந்தியே மக்டப் என்பவன் தாய்வயிற்றினின்றும் எடுக்கப்பட்டவனென்று அது உன் மயக்கம் தெளியச் சொல்லும்" என்று மர்மத்தை வெளியிட்டான்.

இச்சொல்லைக் கேட்டலும் மக்பெத் கடைப்பிடியற்று மனஞ் சலித்து, "என்னிடம் இவ்வாறு சொல்லும் நா நாசமுறுக. சித்திரம் பேசும் மாயப்பெண்களும், இந்திரஜாலம் கற்ற அசரீரிகளும், மனதிலொன்றை யெண்ணி, வாக்கிலொன்றைப் பேசி, விரகறியா மாந்தர்க்கு ஆசைகொளுத்தி நாசம் வருத்தும் இயற்கையுள்ளன. மாயப்பெண் வாக்கை மெய்யென்று எண்ணி உய்வகையற்று, உலகம் பழிக்க, எதிர்ந்தோர் மகிழத் திக்கற்றவனாயினேன். அபத்தம் சொல்லும் அவைகளின் இருபொருட்கிளவியை இனி எக்காலும் எவரும் நம்பி ஏமாறாதிருப்பாராக. இனி உன்னெதிர் நின்று அமர்புரியேன்" என்றனன்.

அப்பால் மக்டப், "அவ்வாறாயின், நீ பிழைத்திரு! நாம் உன்னுருவத்தை நடுத்தெருவில் நிறுத்தி 'கொடுங்கோன் மன்னனை மாநில மாந்தர் காண்க' என வர்ணப்பலகையினடியில் விளங்கத் தீட்டி, வழிச்செல்வோர்க்கு அதிசயம் காட்டுவோம்" என விகழ்ந்து பேசினன்.

துயர்க்கடலிடைப்பட்டுக் கரைகாணாது, ஏக்கமுற்றிருந்த மக்பெத்திற்குக் கேடுகாலம் கிட்டியபொழுது, மிக்க துணிவு பிறந்தது. அவன் "இனி நான் இப்பாழுடலை ஓம்பி உயிர்பிழைத்து அடையும் பயன் யாது! தரையில் தண்டாகாரமாக விழுந்து மால்கமின் பாதம்பணிந்து மானம் அழியவோ! கீழ்மக்கள் திட்டக் கேட்டு நாட்குநாள் நையவோ! இனி இங்கிருந்தாவதென்ன? பர்னம் அரணியம் தன் நிலைபெயர்ந்து டன்ஸினேனுக்கு வரினும், மானிட வியற்கைப்படி மாதர் வயிற்றிற் பிறவாத நீ என்னுடனெதிர்ப்பினும், எனது ஆண்மைஉள்ளளவும் மானம் காக்க உன்னுடன் மலைந்து ஒரு கை பார்ப்பேன்" எனப் பித்தம் தலைக்கு ஏறியவன் போன்று சீறிச் சினந்து பேசி, மக்டப்பின்மீது பாய்ந்து விழுந்து பொருதனன். இருவரும் மலையொடுமலை மோதினாற் போலக் கடுஞ்சமர் புரிந்தனர். அறுதியில் மக்டப் ஜயம்பெற்று மக்பெத்தின் தலையைக் கொய்து, பாராளும் உரிமையுடைய மால்கமென்னு மிளவரசனுக்கு அதனைக் காணிக்கையாகக் கொடுத்தனன். இவ்வாறு பகைவனுயிரிழந்து போர்முடிந்தபின்னர், அவ்விளவரசன் இராஜத்துரோகியான மக்பெத் செய்த வஞ்சனையால் இழந்துவிட்ட இராஜ்யத்தைக் கைக்கொண்டு, பிரபுக்களும் பிரஜைகளும் மனமகிழ்ந் தினிதுவாழ்த்த, சாந்தகுண பூஷணன் எனும் சிறப்புப்பெயர்பெற்ற தன் தந்தை டங்கன் வீற்றிருந்த சிங்காதனம் ஏறி, உண்மைக்கிவனே, நீதிக்கிவனே யென்று உலகம் புகழ்ந்துபோற்றக் கருணையுடன் குடிகளைக் காத்து அரசு செலுத்திவந்தனன்.

முற்றிற்று.